# இமய வெற்றி




ளியிடுவோர்

மேகக் கோன்.,

....மதுரை....

44212

125
2-54

U8:g7
N54
78243

# இமய வெற்றி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 APR 1954

ஆசிரியர் :
ரா. கிருஷ்ணமூர்த்தி, எம்.ஏ., எல்.டி., பி.ஓ.எல்.
தலைமைத் தமிழாசிரியர், மதுரைக் கல்லூரி,
மதுரை.

வெளியிடுவோர் :
ஆ. கார்மேகக் கோன்
தல்லாகுளம் :: மதுரை.

பதிப்புரிமை] 1953 [விலை அணா 14

44212

28243

தே நொபிலி அச்சகம், கோ. புதூர், மதுரை

U8:9(7
N5

# முன்னுரை

இந்நூலில் இமயத்தின் இணையற்ற சிகரமாகிய எவரெஸ்டு உச்சியை அடைவதற்கு முப்பது ஆண்டுகளாகப் பல நாட்டு மலையேறுங் குழுவினர் செய்து வந்த முயற்சிகளின் வரலாறும் அண்மையில் பிரிட்டிஷ் மலையேறுங் குழுவினருள் ஹில்லரியும் இந்திய வீரர் தென்சிங்கு நார்க்கேயும் எவரெஸ்டு முடியிலேறி அடிவைத்த வெற்றிச் செய்தியும் விரித்து உரைக்கப் பெற்றுள்ளன. அன்றியும் இதில் இமயமலையின்மீது ஏறுவதிலுள்ள இயற்கையின் தடைகளும் இன்னல்களும் அவற்றை வெல்வதற்கு வீரர்கள் மேற்கொண்ட உபாயத்திறங்களும் ஆங்காங்கு விளக்கப் பெற்றுள்ளன. இந்நூலின்பிற்சேர்ப்பில் இமயத்தைப்பற்றிப் பண்டைத்தமிழ் நூல்களிற் காணப்படும் செய்திகளும், இமயமலையிற் காணக் கிடக்கும் விநோதச் செய்திகளும் பிறவும் தொகுத்துரைக்கப் பெற்றுள்ளன.

இமய வெற்றி பெற்ற இவ்வமயத்தில் முதல் வெளியீடாக வரும் இந்நூலை அவாவுடன் படிக்கும் மாணவர் உள்ளத்தில் அரும் பெருஞ் செயல்களை ஆற்ற வேண்டும் என்னும் உணர்ச்சியும், அவற்றை ஆற்றுவதில் உண்டாகும் இடையூறுகளை எதிர்க்கும் மனத்திண்மையும், பொறுமையும், முதலாகிய பல பண்புகள் தலைப்படும் என்பதில் ஐயமில்லை.

இந்நூலின் நடை இனிமையும் எளிமையுமான சொற்றொடர்களால் அமைந்துள்ளபடியால் மாணவர்க்குக் கட்டுரை எழுதும் பயிற்சிக்கு இஃது உறுதுணையாயிருக்கும் என்பதனை இதனைக் கண்ணுறும் அறிஞர் நன்கறிவர்.

மிக முயன்று என்னால் எழுதப்பெற்றுள்ள இச்சிறு நூலை மாணவர்க்குப் பயன்படச் செய்யுமாறு ஆசிரியப் பெருமக்களைப் பணிவுடன் வேண்டுகின்றேன்.


இந்நூலை நன்கு பார்வையிட்டுப் பல்லாற்றானும் அழகுறச் செய்து வெளியிட்ட தமிழ்ப் பேராசிரியரும் நூல் வெளியீட்டாளருமான திரு. **ஆ. கார்மேகக் கோனார்** அவர்கட்கு எனது உளமார்ந்த நன்றியை யான் உணர்த்தும் கடப்பாடுடையேன்.

குறித்த காலத்தில் இதனை அச்சிட்டுதவிய தே நொபிலி அச்சகத்தாருக்கு எங்கள் நன்றி உரியதாகும்.

ரா. கிருஷ்ணமூர்த்தி

# உள்ளுறை


| எண். | | பக்கம். |
| --- | --- | --- |
| 1. | தோற்றுவாய் ... ... ... | 1 |
| 2. | இமயத்தின் அறைகூவல் ... ... | 7 |
| 3. | முதல் மூன்று படையெடுப்புகள் ... | 13 |
| 4. | கொடுமுடிக் காட்சி ... ... ... | 20 |
| 5. | மேலும் சில முயற்சிகள் ... ... | 27 |
| 6. | சுவிஸ் படையெடுப்புகள் ... ... | 37 |
| 7. | பதினோராவது பிரிட்டிஷ் குழு ... | 43 |
| 8. | இறுதிப் படையெடுப்பு ... ... | 50 |
| 9. | தென் சிகரத்தை யடைதல் ... ... | 56 |
| 10. | இறுதி வெற்றி ... ... ... | 60 |
| 11. | பாராட்டுகளும் சிறப்புக்களும் ... ... | 69 |
| 12. | தென்சிங்கு நார்க்கே ... ... ... | 76 |
| 13. | எவரெஸ்டுக்குப் பின் என்ன ? ... ... | 83 |
| 14. | சிலகுறிப்புகள் ... ... ... | 91 |



இணையற்ற எவரெஸ்ட்

# இமய வெற்றி

## 1. தோற்றுவாய்

**செயற்கரிய செயல் :**

மலையரையன் மணிமுடியை மனிதன் தன் காலடியில் மிதித்து மகிழ்ந்தான். இணையற்ற இமயம், இன்று மனிதனின் மா பெரும் முயற்சிக்கு முன் முடி சாய்த்து நிற்கிறது. இதுவரை ஒருவருக்கும் எட்டாத அதன் எவரெஸ்டு கொடுமுடி இருவருக்கு மட்டும் இப்போது எட்டிவிட்டது. உலகத்தின் உச்சியில், இமயத்தின் மிக வுயர்ந்த எவரெஸ்டு கொடுமுடியில், இதுவரையில் மனிதனின் கால் படாத தனியிடத்தில், உலக முழுதும் உவப்பும் வியப்பும் எய்த 1953-ம் ஆண்டு மே 29-ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11-30 மணிக்கு இருவர் ஏறி நின்றனர். இவ்விருவரும் இமயத்தின் வான் முட்டும் முகட்டினைத் தம் காலடியிற் கண்டு ஈடில்லாத வெற்றி பெற்று விட்டோம் என்ற இறுமாப்புடன் மகிழ்ந்து இறங்கினர்.

இஃது இவ்விருவரின் வெற்றிமட்டும் அன்று ; மனித இனத்தின் மாபெரும் வெற்றி என்றும், மானிட ஆற்றலின் மாண்புறு சிகரம் என்றும் இதனைக் கூறலாம். இமயத்தின் அறைகூவலை ஏற்று இடுக்கண்களைப் பொருட்படுத்தாது, இடும்பைக் கிடும்பை செய்து, இயற்கையின் இரகசிய

அரண்களைக் கடந்து, எவரெஸ்டுக் கொடுமுடிமீது இந்தியக் கொடியோடு மற்றக் கொடிகளையும் பறக்கவிட்டு வந்த மனிதனின் பெருமையை என்னென்று வியப்பது! இதற்காக மனிதன் 'இமயத்தன்ன' முயற்சி செய்து, 'இமயத்தன்ன' வெற்றியும் பெற்றான். இமயத்திற்கு இமயமே இணையாதலால் அதனை வெல்வதற்கு செய்த முயற்சியும் அதில் அடைந்த வெற்றியும் இமயத்திற்கே ஒப்பாகும். அவற்றை வேறெதனோடும் ஒப்பிட இயலாது. இவ்விடத்து, பாரதியார் கண்ட கனவு நனவானதை நாம் நினைவு கூர்ந்து மகிழ வேண்டும்.

"வெள்ளிப்பனிமலை மீதுலாவுவோம் — அடி,
மேலைக்கடல் முழுதுங் கப்பல் விடுவோம்",

என்று அவர் "பாரத தேசம்" என்னும் பாடலில் வருங்கால இந்தியாவைப் பற்றியும் இந்தியர் வீரத்தைப் பற்றியும் தீர்க்கதரிசனத்தோடு கூறியிருப்பது மிகக் குறுகிய காலத்திற்குள்ளேயே மெய்ப்பிக்கப்பட்டுவிட்டது.

இவ்விமய வெற்றியை நாம் ஏன் பாராட்ட வேண்டும்? இவ்வெற்றியால் நமக்கு என்ன பயன்? எவரெஸ்டை வெல்லாவிட்டால் ஏற்படும் இழப்பு யாது? என்பன போன்ற கேள்விகளுக்கு விடை தேடுவது எளிதல்ல. எனினும் இதனை மாபெரும் சாதனையென்று கருதுதற்கு ஏதேனும் காரணம் இருக்க வேண்டுமன்றோ? இமயத்தின் உச்சியில், உலகத்திலேயே மிக உயர்ந்த இடத்தில், 29002 அடி உயரமுள்ள எவரெஸ்டு கொடுமுடியில், ஏறி நின்ற சாதனை, எவரும் எளிதில் செய்து முடிக்கக்கூடியதல்ல,

என்பதைக் கருதும்போது இக்கேள்விகளுக்கு விடை ஒருவாறு புலப்படும். இதைச் செயற்கரிய செயல் என்று உணர்ந்தால் விடை தானே விளங்கும்.

மனிதன் எப்பொழுதுமே இயல்பாக மா பெரும் செயல்களைச் செய்து மகிழ்பவன். அவ்வாறு செய்வதில் அவன் பெருமை கொள்பவன். எளிய மக்கள் எளிய செயல்களையே செய்ய விரும்புவர் ; இடுக்கணும் இடையூறும் மிகுந்த செயல்களைச் செய்ய அவர் விரும்பார். உழைப்பின்றி இன்புற வாழ்ந்து எளிதே காலங் கழித்து, இயன்ற அளவு செல்வத்தையும் ஈட்டி, மறைவதையே அவர் தம் நோக்கமாகக் கொண்டிருப்பர். ஆனால் அவர்கள் 'பெரியர்' எனக் கருதப்பெறமாட்டார். உலகம் அவர்களை உயர்வாகக் கருதாது. பகுத்தறிவில்லா உயிரினங்கள் உண்டு உறங்கி வாழ்வதையே தம் இயல்பாகக் கொண்டுள்ளன. அதனினும் பெரிய நோக்கம் அவற்றுக்கில்லை. அவை துன்பத்தையும் இடுக்கணையும் வரவேற்பதில்லை ; அவற்றை வெறுக்கவே செய்கின்றன ; அவற்றினின்று உய்யவே விழைகின்றன. ஆனால் ஆறறிவுபடைத்த ஆள்வினை மிக்க மனிதனோ அவ்வளவில் தன் வாழ்க்கைக் குறிக்கோளை அமைத்துக்கொள்ளாது, செயற்கரிய செயல்களைச் செய்து, தன்னலமற்ற தொண்டாற்ற விரும்புகிறான். அதனால், வரும் எண்ணற்ற இடையூறுகளையும், அல்லல்களையும் பொருட்படுத்தாது புகழேணியின் உச்சியில் ஏறி நிற்க விழைகின்றான். இத்தகைமை யுடையவர்களே பெரியார் எனக் கருதப்படுவார்கள். உள்ளுவவெல்லாம் உயர்வுள்ளி, அரியவற்றை ஆற்றி அடையும் பெருமையே

பெருமை. எளியவற்றை இயற்றுவதும் அரியவற்றை ஆற்ருது விடுவதும் சிறுமையேயாகும். உயர்ந்த நோக்கங் கொண்டு உலேவிலாது முயன்று அதில் தோல்வியுறினும் பெருமையேயன்றிச் சிறுமையில்லே. நோக்கம் சிறியதாயின் அதில் வெற்றியுறினும் பயனில்லே. இதன் உண்மையை

“கான முயலெய்த அம்பினில் யானே
பிழைத்தவேல் ஏந்தல் இனிது”

என்ற திருக்குறளால் நன்குணரலாம்.

**மனிதனின் மாண்பு:**

மனிதனது முயற்சியின் மேலெல்லேயை இவ் விமய வெற்றி சுட்டுகிறது; அவனது பெருமையின் உன்னத நிலேயை எவரெஸ்டு காட்டுகிறது. இமயம் தன்னுச்சிக்கு வரும்படி மனிதனே அறைகூவியழைத்தது. அவ்வறைகூவலே அவன் ஆவலுடன் ஏற்றுக்கொண்டு இடைவிடாது முயன்முன்; எண்ணற்ற இடுக்கண்களே எதிர்த்து வென்று எவரெஸ்டு உச்சியை யடைந்தான். அதன் உச்சியில் அவன் தன் புகழின் உச்சியைக் கண்டான். “அருவினே யென்ப வுளவோ கருவியான், காலம் அறிந்து செயின்?” அறிவுடைய மனிதன் உள்ளத்தில் உள்ளிய அளவிலே வெள்ளத்தனேய இடும்பை கெட்டொழிந்தது. இமயத்தில் இருந்த எல்லேயற்ற இயற்கைத் துன்பங்களேயும் தடைகளேயும் பேராபத்துகளேயும் வென்று அதனேத் தனக்குப் பணிய வைத்து, அறிவும் ஆற்றலும் முயற்சியும் உடைய மனிதன் இன்று இணேயற்றவனுக விளங்குகிருன். எனவே இதைக் குறித்துப் பெரு

மைப்படுவதற்கு ஏன் நியாயமில்லே? இவ்வெற்றியைப் பாராட்டுவதற்கு ஏன் காரணமில்லே? இம் முயற்சியில் தோல்வியுற்றிருந்தாலும் அவனுக்குப் பெருமையே. எனினும், அவன் இயற்கைக்கு இளேத்தவன், அதன் ஆற்றலுக்குப் பணிபவன், என்ற இழுக்கு நேர்ந்திருக்கும். அவ் விழுக்கு இப்பொழுது இல்லேயாயிற்று. மனிதன் இயற்கைக்கு இளேத்தவனல்லன், இணேயானவன் — ஏன்? — மேலானவன் என்று கூட இதனுல் நிலேநாட்டப் பெற்று விட்டது. ஆகவே இமயவெற்றி இணேயில்லா வெற்றி, ஈடு இல்லாப் பெருமை, என்பதில் ஐயம் யாது?

## வெற்றியின் விளேவுகள் :

அன்றியும் இவ் வெற்றி மேலும் பல உயர்ந்த செயல்களேச் செய்ய மனிதனே ஊக்கும். இமயத்தில் மனிதனுல் ஏறப்படாத கொடுமுடிகள் இன்னும் எத்தனேயோ உள. அவற்றின் மீதும் அவன் ஏறித் தன் மேன்மையை மேலும் மேலும் நிலேநாட்டுவான். எவரெஸ்டு வெற்றியைத் தொடர்ந்து, சில நாட்களில் இமயத்தின் மற்ருெரு உயர்ந்த சிகரமாகிய நங்கா பருவதமும் வெல்லப்பட்டுவிட்டது. தவளகிரி, காட்வின் ஆஸ்டின், பஞ்ச்சூலி, மகாலு முதலிய மற்ற சிகரங்கள் மீதும் படையெடுப்புகள் தொடங்கிவிட்டன. உலகத்தில் வேறு எங்கெங்கு உயர்ந்த சிகரங்கள் இருப்பினும் அவற்றின்மீதெல்லாம் ஏற மக்கள் ஆவல் கொண்டுவிட்டனர். இங்ஙனம் ஒரு வீர உணர்ச்சியையும் துடிப்பையும் எவரெஸ்டு வெற்றி யாவர் மனதிலும் தூண்டிவிட்டது.

இவ்வெற்றிக்கு விஞ்ஞானம் பெரிதும் துணை செய்திருக்கிறது. விஞ்ஞான ஆராய்ச்சி முடிபுகள் பல இதற்கு உதவி புரிந்துள்ளன. மலையேறுவோர்க்கு வேண்டிய ஆக்ஸிஜன் உயிர்ப்புக்கருவிகள் (*oxygen-apparatus*), கடும் பனியிலும் காற்றிலும் குளிரிலும் நிற்காமல் ஓடும் கடிகாரங்கள், அணையாத அடுப்புகள், மனித உடல் கடுங் குளிர் காற்றுகளாலும் அழுத்தக் குறைவாலும் துன்புறுமலிருக்க அணியப்படும் ஆடைகள், ஆகிய இவைபோன்ற பல நவீன சாதனங்களை விஞ்ஞானம் ஆக்கித் தந்தது. ஆகவே விஞ்ஞானத்திற்கு இவ்வெற்றியில் எவ்வளவு பங்குண்டு என்பது விளங்கும். இவ்வெற்றி விஞ்ஞானத்திற்கும் இனித் துணை செய்யக்கூடும். ஏனெனின், உயர்ந்த மலையுச்சிகளில் உள்ள நிலைமைகளையறிந்து, அந்நிலையில் சில ஆராய்ச்சிகளைச் செய்ய இவ்வெற்றி உதவுகிறது. விண்ணியல் கதிர்கள் (*Cosmic rays*) என்னும் ஒருவகைக் கிரணங்கள் அதிக உயரமான இடங்களில் மிகுதியாக உள்ளன என்றும், அவற்றின் இயல்பை முற்றிலும் ஆராய அவ்விடங்களே ஏற்றவையென்றும் விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். இமயத்தின் மீது சில காலமாக அத்தகைய ஆராய்ச்சிகள் நிகழ்ந்து வருகின்றன. ஆப்ரிக்காவில் கிளிமஞ்சாரோ என்னும் மலையுச்சியில் சுமார் 19000 அடி உயரத்தில் இந்திய விஞ்ஞானிகள் சிலர் இவ்வாராய்ச்சியில் ஈடுபட்டிருக்கின்றனர். இனி எவரெஸ்டு உச்சியிலும் அவ்வாறு செய்யலாம். அதனால் நமது விஞ்ஞான அறிவு வளர்வது மட்டுமன்றிப் பல நன்மைகளும் ஏற்படலாம். ஆகவே எவரெஸ்டு வெற்றியால் விஞ்ஞானமும் கைம்மாறு அடைவது ஒருதலை.

# 2. இமயத்தின் அறைகூவல்

## அதன் பெருமை :

இனி, இமயம் மனிதனை அறைகூவியது எங்ஙனம், அவ்வறைகூவலை அவன் ஏன் ஏற்றான் என்று காண்போம். இமயம் உலகத்திலேயே மிக நீளமும் அகலமும் உயரமும் பொருந்திய மலையாகும்.

"மன்னு மிமய மலையெங்கள் மலையே
மாநில மீதது போற்பிறி திலையே"

என்றார் பாரதியார். இமயத்திற்கு அடுத்துத்தான் ஆல்ப்ஸ், ராக்கீஸ், ஆண்டீஸ் போன்ற மற்ற மலைகள். 1500 மைல் நீளமும் 200 மைல் அகலமும் 5 மைல் சராசரி உயரமும் உள்ள இமயம் இந்தியாவிற்கு இயற்கையான வட எல்லையாக அமைந்துள்ளது. இவ் வியற்கையரணைக் கடந்து இந்தியாவிற்குள் வரவியலாது. அதில் வடக்கிலும் வடமேற்கிலும் உள்ள ஓரிரு கணவாய்கள் வழியாக அன்றி அதை வேறு வகையில் கடக்க முடியாது. அதன் மீது ஏறிக் கடந்து வரல் கனவிலும் கருதமுடியாத செயல். அங்குள்ள குளிரும் பனியும் பனிக்கட்டிகளும் பனியாறுகளும் செங்குத்தான பாறைகளும் சரிவுகளும் கடுங்குளிர் காற்றுகளும் அதன் மீது ஏறி வருவோர்க்குத் தடையாய் இருக்கின்றன. இவற்றால் அவர்கள் தம் உயிர்களையே இழக்கக்கூடும். அங்ஙனம் உயிரிழந்தவரும் பலர். இமயம்

ஒரு தனி மலையல்ல. பல மலைகள் அடுக்கடுக்காகவும் தொடர் தொடராகவும் அமைந்தது அம்மலை. அதில்—எப் பொழுதும் எங்கும் பனி, ஆங்காங்கே பனியாறுகள், திடீ ரெனச் சரிந்து உருண்டோடும் பனிப் பாறைகள், பனிக் குன்றுகள் — இவையே காணப்படும் காட்சி. சாதாரண மாக 20000 அடிக்குமேல் அதில் தாவரங்களோ மற்ற உயி ரினங்களோ இல்லை. சில இடங்களில் 16000 அடி உயரத் தில்கூட அவை இருப்பதில்லை. அத்தகைய குளிரிலும் பனி யிலும் உயிர் வாழ்வது முடியாது. இங்ஙனம் அதில் எப் பொழுதும் எங்கும் பனியன்றி வேறொன்றில்லாத கார ணத்தால் அதை நம்முன்னோர் 'பனியின் உறைவிடம்' என்று பொருள்பட 'இமாலயம்' என்றழைத்தனர். அத னைச் சுருக்கமாக நாம் இன்று இமயம் என்றியம்புகிறோம். மானுட ஆற்றலுக்கும் அறிவுக்கும் எட்டாத அவ்விம யத்தை இறைவனது இருப்பிடமாகவும் இமையவரது உறைவிடமாகவும் இதிகாச புராணங்கள் கூறும். அங்ங னம் கூறுவது இயல்பேயன்றோ? தெய்வ ஆற்றலுக்கே அவ்விமயம் அடி பணியுமேயன்றி மனித ஆற்றலுக்குப் பணியாது என்பது இதன் கருத்தாகும். மனிதனால் அதனையறியவும் முடியாது என்று அக்கால மக்கள் கரு தினர் போலும்! தெய்வ நிலையடைந்த முனிவர், இருடி கள், முதலியோருக்கும் அது எளிதாகக் கருதப்பட்டது. ஆனால் எளிய மனிதன் என்றும் எளிய மனிதனாகவே இருந்துவிடமாட்டான், என்றேனும் ஒருநாள் அவன் இம யத்தை வெல்லும் ஆற்றலைப் பெறுவான், என்ற உண் மையை அவர்களால் உணர முடியவில்லை.

**கொடு முடிகள் :**

இமயத்தின் கொடு முடிகளில் எவரெஸ்டும், **காட்வின் ஆஸ்டெனும்** முறையே **29002** அடி, **28250** அடி உயரம் உள்ளவை. உலகத்திலேயே இவை இரண்டு தான் மிக உயரமான சிகரங்கள். இவையன்றி **28146** அடி உயரமுள்ள **காஞ்சன சிருங்கம்** (கஞ்சன் ஜிங்கா என்று மருவி வழங்குவது), **26826** அடி உயரமுள்ள **தவளகிரி**, **26629** அடியுள்ள **நங்கா பர்வதம்**, ஆகிய சிகரங்களும் இமயத்தில் உள்ளன. எவரெஸ்டும் காட்வின் ஆஸ்டெனும், அவற்றைக் கண்டுபிடித்தவர்கள் பெயரால் வழங்கப் பெறுகின்றன. எவரெஸ்டு **கௌரிசங்கர்** என்றும், **சோமாலூங்க்மா** என்றும் வேறு பெயர்களால் வழங்கப் பெறும். கௌரிசங்கர் என்பது எவரெஸ்டினின்றும் வேருகும் என்று கூறுவாறுமுளர். சோமோ லுங்க்மா என்பது நேபாள மொழியில் 'மலையாகிய தாய்' என்று பொருள் படும். காஞ்சன சிருங்கம் என்ருல் பொற் சிகரம் என்று பொருள். அது காலையிலும் மாலையிலும் ஞாயிற்ருெளியில் பொன்னிறமாய் மிளிரும் தன்மைய தாகையால் அப் பெயர் பெற்றது. அங்கு இருக்கும் எல்லாப் பொருள்களும் அப்பொழுது பொன்னிறமாக மாறிவிடும். "பனி மாலிமயப் பொருப்பகம் சேர்ந்த பொல்லாக் கருங்காக் கையும் பொன்னிறமாய் இருக்குமன்ருே?" என ஒரு புலவர் பாடியதும் இதுபற்றியேபோலும். அன்றியும் சில சிகரங்கள், ஞாயிறு திசைமாறுந்தோறும் வெவ்வேறு கண் கவர் வனப்புள்ள நிறங்காட்டி நிற்குமாம். என்னே இம

யத்தின் இயற்கை எழில்! இனித் தவள கிரி என்பது, தன் பெயருக்கேற்ப எப்பொழுதும் வெண்மையாகவே இருக்கும். சிவபெருமான் இருக்கையாகிய கைலேயும் வெண்மை யாகவே இருப்பதால் வெள்ளியங்கிரி எனப்பட்டது.

**இன்னல்கள் :**

இவ் வானளாவிய கொடு முடிகளில் எப்பொழுதும் உறைந்து கிடக்கும் பனியும், பனிக் கட்டியும் சில சமயங்களில் பெரும் பாறை பாறைகளாக அப்படியே கீழே உருண்டு வந்து விடும். மேலிருந்து விழும் பனி, இப்பாறைகள் மீது அதிக அளவில் படிந்து உறைவதால் அவை பாரந் தாங்காது சரிந்து கீழே விழுந்து விடுகின்றன. அன்றியும் சூரிய வெப்பத்தால் பனியும் பனிக்கட்டியும் உருகி அப்பாறைகள் சரிவதுமுண்டு. உருகிய பனி, நீராக மாறிப் பனியாறுகளாகப் பெருக்கெடுத்தோடும். அவ்வாறுகளிலும் பெரும் பனிப்பாறைகள் மிதந்து வரும். அதனுல் ஆறுகள் திடீர் திடீர் என்று திசைமாறியும் இடம் பெயர்ந்தும் செல்லும். மலேமீது மட்டுமன்றிச் சமவெளியிலும் அவை திசைமாறுகின்றன. சிந்துநதி இப்படிப் பன்முறை இடம் பெயர்ந்ததாகக் கூறப்படுகிறது. இமயத்தில் ஏறுபவர் இத்தகைய பேராபத்துகளுக்கு ஆளாக வேண்டியிருக்கும்; அன்றியும் அங்கு நிலவும் மூடுபனி கண்ணே மறைத்து விடும். சாதாரணமாக 20000 அடிக்கு மேல் சென்ருல் சில அடி தூரத்தில் உள்ள பொருள்கள் கூடக் கண்ணுக்குத் தெரியாது. இவ்வுயரத்திற்கு மேல் பல விடங்களில் மிகுதியாகப் பனி சொரியும். அவற்றைப் பனி வீழ்ச்சியிடங்கள் (ice-falls) என்று கூறுவர். அவை

பேராபத்து நிறைந்த இடங்கள். நம் முன்னால் இருப்பது பாறையா, பள்ளமா என்று தெரியாமல் நாம் வழி தவறிப் போய்ச் சிக்கிக்கொள்ள நேரிடும். அதிக உயரம் போகப் போக, குறிப்பாக 26000 அடிக்கு மேல், ஒரே செங்குத் தான பாறைகளும் அபாயமான சரிவுகளுமே, உள்ளன. அவற்றின் மேல் வழி கண்டுபிடித்து ஏறுவது இயலாது. மனித ஆற்றலின் எல்லை அவ்விடமே என்று மலையேறிகள் பன்முறை முடிவு செய்து விட்டனர். அங்கு வீசும் காற்றோ நம்மை அப்படியே அடித்துக்கொண்டு போய் விடும். அது 'சில்' என்று சாட்டையால் அடிப்பதுபோல் வீசும். அக் கடுங் குளிரில் இரத்தம் உறைந்து, மூளை கலங்கிப் பலக் குறைவு மிகுந்து, உயிர் ஊசலாடத் தொடங்கி விடும். அங்குப் போதிய உயிர்வளி (**Oxygen**) இல்லாததால் மூச்சுத் திணறிவிடும்; களைப்பு மிகும்; ஒரு நிமிடம் நடந்தால் ஐந்து நிமிடம் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும். தலைவலி, வாந்தி, பசியின்மை, உடல்மெலிவு, இளைப்பு முதலிய நோய்கள் வந்துவிடும். இத்துணை இன்னல்களையும் எதிர்த்து உயிர் பிழைப்பது அரிதினும் அரிது. "அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற, இடுக்கண் இடுக்கண் படும்" என்பதற்கொப்ப, இவ் விடுக்கண் களால் தன் கொள்கையை விடாத உள்ளத்தோடு வென்று, இமயத்துச்சியை யடைந்த மனிதனின் பெருமையை இயம்புதல் எளிதாமோ! இமயத்தின் அச்சுறுத்தும் அறைகூவலை ஏற்று அதனை வென்ற அவன் மாண்பை ஏத்த நாவுண்டோ? மனிதன் சிறியவன் என்று கருதி இயற்கை, "இதோ, இத்துணை இடையூறு கள் என்னிடம் உள்ளன; இயன்றால் இவற்றை வென்று

உன் வலிமையை நிலை நாட்டு", என்று இறுமாப்புடன் கூவியது; பலரைப் பலி வாங்கித் தன் தனியாட்சியின் சிறப்பைக் காட்டிற்று. ஆனால் மனிதன் அஞ்சவில்லை; அவ்வறைகூவலை ஏற்றான்; இயற்கை அரண்களுள் தலை சிறந்த இமயப் பொருப்பைத் தாக்கினான்; "இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான், துன்பம் உறுதல் இலன்" என்றபடி, துணிவோடு பதினொரு முறை படையெடுத்து, இறுதியில் வாகைசூடி வெற்றிக்கொடியை நாட்டினான். பதினொன்றாம் முறையில் பனிமால் இமயப் பொருப்புப் பணிந்தது. மனிதன் உயர்ந்தான்.

இஃது எங்ஙனம் நிகழ்ந்தது? இதற்கு எத்தகைய முயற்சிகள் செய்யப்பெற்றன? எப்பொழுது யாரால் அவை செய்யப்பட்டன? என்பவற்றின் விடையே இனி இங்கு நாம் கூறப்போகும் செய்திகள்.

# 3. முதல் மூன்று படையெடுப்புகள்

**1841**-ல், சர். ஜார்ஜ் எவரெஸ்டு என்னும் இந்திய நில அளவு இலாகாத் தலைவர் முதன் முதலாக உலகத்திலேயே மிகவுயர்ந்த கொடுமுடி இமயத்தில் தான் இருக்கிறதென்றும் அதன் உயரம் **29141** அடி என்றும் கணித்துக் கூறினார். அதுபற்றியே அக் கொடுமுடி எவரெஸ்டு எனப் பெயரிட்டழைக்கப்பட்டது. அதன் பின்னர் அக் கொடுமுடியின் உயரம் சரியாக **29002** அடி என்று கணித நிபுணர்கள் கூறினர். அன்று முதலாக மலையேறும் குழுவினர் பலர், அக்கொடுமுடி மீது ஏறவேண்டுமென்னும் பேரவா தம்மை உந்தப் பல முயற்சிகள் செய்யலாயினர். எவரெஸ்டை விடச் சிறிது தாழ்வான சிகரங்கள், இமயத்தில் இருப்பினும் அவற்றின்மீது அவர்களுடைய நாட்டம் அதிகமாகச் செல்லவில்லை. ஏனெனின் மிகவுயரிய எவரெஸ்டை வென்று விட்டால் பிறகு மற்றவற்றை எளிதில் வென்று விடலாம் என்பது அவர்கள் துணிபு. ஆகவேதான் அவர்கள் அதனையே மீண்டும் மீண்டும் தாக்கினர். இந்திய மண்ணின்மீது கடல் மட்டத்திற்கு மேல் சுமார் ஐந்தரை மைல் உயரம் ஓங்கி வானை முட்டி ஊடுருவிச் செல்வதுபோல் காணப்படும் எவரெஸ்டு, மலையேறும் குழுவினரின் ஊக்கம், வீரம், ஆவல் முதலியவற்றைத் தூண்டி விட்டது. அவர்களது செயற்கரிய செயலுக்கு அது ஒரு தகுந்த இலக்காக விளங்கியது. அதன்மீது ஏற அவர்கள் பதினொரு முறை முயன்றனர். அப்பதினொன்றில் ஒன்

பது மட்டுமே நிறைவான முயற்சிகள்; மற்றவை அரை குறையானவை. அவ்வொன்பதிலும் ஏழு முயற்சிகள் பிரிட்டிஷ் மலையேற்றக் குழுவினரால், அதாவது இங்கிலாந்து நாட்டினரால், செய்யப் பெற்றவை. ஆகவே இங்கிலாந்துதான் இம்முயற்சியில் முன்னணியில் நின்று பிறருக்கு வழி காட்டிவந்து பின்னர் வெற்றியும் பெற்று விட்டது.

இம்முயற்சியில் வெற்றிபெறுமுன்பு பன்முறை அவர்கள் மலையை ஆராய்ந்து வரச் சென்றனர்; விமானத்திலிருந்து அதனைப் பல்வேறு வகையாகப் படம் பிடித்தும், மலைவாணர் துணைகொண்டு வழி கண்டும், ஆண்டு தோறும் அதன் பருவ நிலைகளையறிந்தும், இங்ஙனம் பல ஆராய்ச்சிகளைச் செய்தனர். இத்துணை ஆராய்ச்சிகள் செய்தும் இமயம் தன் இரகசியத்தை அறிய இடங் கொடுக்கவில்லை. எனவே மன உறுதியையும் துணிவையும் மட்டும் துணைகொண்டு, ஆராய்ச்சியால் ஓரளவு பெற்ற அறிவையும் பயன் படுத்தி, மலை யேறும் குழுவினர் எவரெஸ்டுமீது ஏறத் துணிந்தனர்.

### முதல் முயற்சி:

எவரெஸ்டு சிகரம் கண்டு பிடிக்கப்பட்டு **80** ஆண்டுகள் கழிந்த பின்னர்தான் முதல் படையெடுப்பு **1921**-ல் நிகழ்ந்தது. கர்னல் **ஹோவர்டு பெரி** என்னும் ஆங்கிலப் படைத் தலைவர், இவ் விமயப் படையெடுப்பிற்குத் தலைமை தாங்கி நடத்தினர். இது ஆராய்ச்சிப் படையெடுப்பாகவே கருதி நடத்தப்பெற்றது. இப் படையினர் திபேத்து வழியாக எவரெஸ்டின் வட பகுதி

யின் மீதேறத் திட்டமிட்டனர். திபேத் பீடபூமியில் ராங்க் பக் என்னும் பனியாறு ஓடுகிறது. அதன் கிழக்குப் பிரிவைத் தொடர்ந்து மேலே ஏறினுல் எவரெஸ்டை அடையமுடியும் என்று அவர்கள் கருதினர். இப் பனியாறு இமயத்தினின்றும் அதன் வடக்குப் பக்கம், அதாவது திபேத் பக்கம், இழிந்து கிழக்கு நோக்கிப் பாய்கிறது. இவ்வாற்றின் போக்கைத் தொடர்ந்து மேலே சென்ருல் அது உற்பத்தியாகும் இடத்தை அடையலாம். அது ஏறக்குறைய எவரெஸ்டு சிகரத்தின் அருகாமையிலிருக்கும் என்று ஊகிக்கப்பட்டது. ஆனுல் இவ்வாறு பனியாற்றைப் பின்பற்றி அதன் கரையோரமாகச் செல்வதில் ஒரு பேராபத்து உண்டு. அஃதென்ன வெனின், அவ்வாற்றில் திடீரென்று வெள்ளம் பெருகி வருவதுடன் அதில் பெரிய பனிப்பாறைகளும் பனிக்குன்றுகளும் மிதந்து வரும். அப்பொழுது அதனருகில் செல்வோர் அபாயத்தினின்றும் தப்புவது அரிது. அங்ஙனமே பல மலையேறிகள் தம் உயிரை இழந்ததும் உண்டு. எனினும் தம் உயிரையே பணயம் வைத்து இவ்வழியாகச் சென்ற பலருள், வரலாற்றிலே பெயர் பெறத் தகுந்தவர் சிலர் உளர். அவர்களுள் **ஹோவர்டுபெரியும்** ஒருவர். இவருடன் மலைமீது சென்ற டாக்டர் **கெல்லாஸ்** என்பவர் குளிர்ச்சி தாங்காமல் இருதய நோய் கண்டு இறந்துவிட்டார். ஆயினும் படையினர் வடக்கிலிருந்தும் கிழக்கிலிருந்தும் எவரெஸ்டுக்குச் செல்ல வழிகளைத் தேடினர்; அதன் பயனுக இமயத்தின் வடகிழக்குப் பகுதியை அடையக்கூடிய ஒரு வழியைக் கண்டுபிடித்தனர். இவர்களுடன், **ஜார்ஜ்லீ, மலாரி** என்ற இருவர் சென்றனர். அவர்கள் இவ்வழியைப் பின்பற்றி எவரஸ்டின் மீது சுமார் **23000** அடி வரை ஏறிவிட்

டனர். அவர்களுடன் **லாங்ஸ்டாப், மீட்** என்ற இருவரும் கூடச் சென்றனர். ஆனால் அவ்வுயரத்தில் அவர்களுக்கு மூச்சுத் திணறியது; குளிர் காற்றின் கடுமை பொறுக்க முடியவில்லை; பனிபதறச் செய்தது. ஆகவே இயற்கை யின் அரக்க சக்தியை எதிர்த்துப் புழுக்கள்போல் மாய் வதினும் உயிருடன் திரும்பிவந்து மறு முறை முயற்சி செய்யலாம் என்று அவர்கள் கருதினர். இது போற்றத் தக்க செயலேயன்றோ? இதுவே அறிவுடைமையும் ஆகும்.

## இரண்டாம் குழு :

அடுத்த ஆண்டு **1922**-ல் மற்றொரு பிரிட்டிஷ் குழு எவரெஸ்டின் மீது ஏறப் புறப்பட்டு வந்தது. அதற்கு ஜெனரல் **புரூஸ்** என்பவர் தலைவராக வந்தார். முத லில் ஏறிய குழுவினரின் அனுபவங்களையும் அவர் கள் திரட்டிய குறிப்புகளையும் அறிந்து இம்முறை **புரூஸ்** எப்படியும் எவரெஸ்டு மீது படையெடுப்பதென்று துணிந்தார். இக் குழுவினரில் **புரூஸ், மலாரி, பின்சு** என் னும் மூவர் மட்டும் முதல் குழுவினர் சென்ற வழியே சென்று **27300** அடி வரை ஏறினர். அங்குச் சிறிது தங்கி மீண்டும் மேலே ஏற முயன்றபோது அவர்கள்மீது பருவக் காற்று கடுமையாக வீசத் தொடங்கிற்று. பனிமழையைக் கொண்டுவரும் பேய்க்காற்றுகள் திடீர் திடீர் என்று வீசிப் பெரும் பனியைப் பொழிந்தன; பனி, திரள் திரளா கக் கொட்டிற்று; மலையேறியோர், மரணத்தின் வாயிலில் நிற்பதாக உணர்ந்தனர். அந்தோ! அவ்வளவில் ஒரு பெரிய பனிக்குன்று சரிந்து வந்து எழுவரை எமலோகத் திற்கு அனுப்பிற்று. அவ்வெழுவரும் மலையேறும் குழுவி னர்க்கு மூட்டை தூக்கும் ஷெர்ப்பா வகுப்பினராவர்.

இவர்களது உதவியின்மையால் இனி அவர்கள் மேலே செல்ல இயலவில்லை. மேலே செல்வோர்க்கு உணவு, உடை மற்றப் பண்டங்கள் எல்லாவற்றையும் தூக்கிச் செல்பவர் இந்த ஷெர்ப்பாக்களே. இவர்களுக்கு மூட்டை தூக்கிக் கொண்டு மலையேறுவதில் நல்ல பயிற்சி உண்டு. ஷெர்ப்பா வகுப்பினருள் பலர் இதையே தொழிலாகக் கொண்டு அத னுல் வரும் ஊதியம் பெற்று உயிர் வாழ்பவர். இத்தகைய இன்றியமையா உதவியாளர் இறந்ததால் இரண்டாம் மலை யேற்றக் குழுவினர் மேலே செல்ல முடியாமல் திரும்பி விட்டனர். அன்றியும் பருவக்காற்றின் கொடுமை, அவர் களைப் பதை பதைக்கச் செய்தது. இரக்கமற்ற இயற்கை யின் கொடுமைக்குப் பலியாவதை விடத் திரும்பிப் போய்த் தக்க சமயம் வாய்த்தவுடன் மீண்டும் ஒரு முயற்சி செய்யலாமன்றோ? "கொக்கொக்க கூம்பும் பரு வத்து மற்றதன், குத்தொக்க சீர்த்த விடத்து" என்னும் வினை செயல் வகையை எண்ணி, அவர்கள் மறு முயற்சி செய்யக் கீழே இறங்கிவிட்டனர்.

ஆயினும் எவரெஸ்டை வெல்வதில் அவர்கள் ஒரு படி முன்னேறி விட்டனர் என்றே கூறவேண்டும். முதல் முறை மலையேறிய குழுவினருடன் சென்ற மலாரி இம்முறையும் இக்குழுவினருடன் சென்றதால், முன்னைவிட அவர்கள் 4300 அடி அதிக உயரம் ஏற முடிந்தது. அவர்கள் எவ ரெஸ்டு உச்சியை அடைவதில் தோல்வியுற்றுலும் தம் முயற்சியில் அதிக அளவுக்கு முன்னேறி விட்டனர் என் பது வெளிப்படை. ஒரு தடவைக்கு மறுதடவை 4300 அடி அதிக உயரம் ஏறுவதென்பது எளிய செயலன்றே! ஆகவே இக்குழுவினர், உலகினருடைய பாராட்டுதல் களைப் பெற்றனர். அவர்களால் இமயத்தின் அளக்க

லாகா அருமையும் பெருமையும் துளக்கலாகா நிலையும் தோற்றமும் யாவருக்கும் தெரிந்தன. இதனுல் இமயத்தைப் பற்றிய அறிவு, மக்கட்கு அதிகமாகக் கிடைத்தது.

**மூன்ரும் முயற்சி :**

**1924**-ல் மூன்ருவது பிரிட்டிஷ் குழு, எவரெஸ்டு மீது படை எடுக்கப் புறப்பட்டு வந்தது. அதற்குத் தலைவர், கர்னல் **நார்ட்டன்** என்பார். இக்குழுவினருடன் டாக்டர் **சாமர்வெல்** என்னும் விஞ்ஞானியும் வந்தனர். வெறும் உடலுழைப்பைக் கொண்டுமட்டும் இமயத்தின் மீது ஏறமுடியாதென உணர்ந்த மலையேறிகள், இயற்கையின் இன்னல்களை வெல்ல வழிவகைகளைச் செய்வதற்கு இம்முறை ஒரு தலைசிறந்த விஞ்ஞானியின் துணையையும் கொண்டனர். எனினும் இயற்கை தன் அரக்க சக்தியை மீண்டும் காட்டியது. இவர்கள் மலையேறிய சமயம் பருவக் கோளாறின் அறிகுறிகள் தென்பட்டன. அதன் விளைவாக இவர்களுடன் சென்ற ஒரு கூர்க்கர், தன் மூளையில் குருதி உறைந்து உயிர் விட்டார். மற்ருெரு ஷெர்ப்பாவும் பனியின் கடுமையைத் தாங்காமல் மாண்டார். இங்ஙனம் கூற்றுவன் கொண்ட கொள்ளையையும் பொருட்படுத்தாது மனத்துணிவுடன் **நார்ட்டன்** மேலே சென்ருர். மே மாதத்தில் பருவநிலை சற்று சாதகமாக இருந்த சமயம், அவர் தனியே **28126** அடி உயரம் ஏறிவிட்டார்; அவ்விடத்தில் சிறிது தங்கி மீண்டும் மேலே செல்லக் கருதினுர். அதற்குள் பனிப் பாறையில் பளிச்சென்று விழுந்த தூய ஒளி பிரதிபலித்து நார்ட்டன் கண்ணில் விழவே கண்கள் ஒளியிழந்து குருடாயின.

மலாரியும், இர்வினும் பருவநிலை பக்குவமாயிருப் பதைக் கண்டு மிகுந்த துணிவுடன் ஜூன் மாதத் தொடக் கத்தில் கொடுமுடிமீது 28130 அடிக்கு மேல் ஏறி விட்ட னர். அவர்கள் ஏறுவதைக் கீழேயிருந்தவண்ணம் மற்ற வர்கள் உருப்பெருக்கிக் கண்ணாடியால் கவனித்துக்கொண் டிருந்தனர். அப்போது மலாரி, இர்வின் ஆகிய இருவரும் இரண்டு எறும்புகள் ஊர்ந்து செல்வது போல் காணப் பட்டனர். ஆனால் தீவினைப் பயனாகத் திடீரென்று ஒரு கரிய படலம் அவர்களைச் சூழ்ந்து கொண்டது. கீழி ருந்தவர்கள் கண்களுக்கு அவர்கள் தெரியவில்லை. பிறகு அவர்கள் எங்குப் போயினர், எவ்வளவு உயரம் ஏறினர் என்பது ஒருவருக்கும் தெரியவில்லை. சில நாட்கள் காத்திருந்தும் அவர்களைப் பற்றி ஒரு செய்தியும் கிடைக்கவில்லை. அவர்கள் பலியானதாகவே உறுதி செய்து கொண்டனர். மிகச் சிறந்த வீரர் இருவரையும் பறிகொடுத்ததன்றி நார்ட்டன் கண் ஒளி இழந்தமையா லும் குழுவினர் மிகவும் மனமுடைந்து திரும்பிவிட்டனர். சின்னாட்கள் சென்றபின்னர், நார்ட்டன் கண் சிகிச்சை செய்து கொண்டு, இழந்த பார்வையை மீண்டும் பெற்றார்.

---

# 4. கொடுமுடிக் காட்சி

**கூம்பும் பருவம்:**

நார்ட்டன் குழுவினர் இயற்கையின் கொடுமைக்கு அஞ்சிச் சிறிதே மனம் தளர்ந்தனரேயன்றித் தம் தோல்வியை ஒப்புக்கொண்டு தாய் நாட்டிற்கு உடனே திரும்பி விடவில்லை. புலி பதுங்குவதெல்லாம் பாய்வதற்காகவே என்பதுபோல அவர்கள் சற்றே மனவலியிழப்பினும் மீண்டும் பெரு முயற்சி செய்யவே கருதினர். ஆகையால் அவர்கள் மலையடிவாரத்திற் சில நாட்கள் தங்கி, மறுமுறை மலையேறுவதற்குத் திபேத் நாட்டு அரசருடைய அனுமதி கோரினர். அக்காலத்தில் திபேத் வழியாகவே இமயத்தின்மீது ஏறவேண்டியிருந்ததாலும், அதற்கு அந்நாட்டு அரசருடைய இணக்கம் பெறவேண்டும் என்னும் கட்டுப்பாடு இருந்ததாலும், அவ்வரசருடைய இசைவு பெறுதற்காக அவர்கள் காத்திருந்தனர். ஆனால் அரசரோ, குழுவினருள் சிலர் மலைமீது இறந்துபட்டதை அறிந்து, மக்கள் தன் மீது அடியிடுவதில் மலையரசன் சீற்றங்கொண்டான் எனக் கருதி இணக்கம் தர மறுத்தார். அதனால் குழுவினர் வருந்திச்செயலற்றுத் தாய் நாடு திரும்பினர். அதன் பின்னர் ஒன்பது ஆண்டுகள்வரை ஒருவருமே இமய மலைமீது ஏறத் துணியவில்லை. மலையேற்றக் குழுவினர்க்கு இவ்வொன்பது ஆண்டுகளையும் கூம்பும் பருவம் என்னலாம்.

**ரட்லெஜ் குழு :**

பின்னர் **1932**-ல் ஹ்யூ ரட்லெஜ் என்பவர் தலைமையில், பல பயிற்சி பெற்ற வீரர்கள் அடங்கிய பிரிட்டிஷ் குழு ஒன்று இங்கிலாந்தினின்றும் புறப்பட்டு இமயத்தின்மீது படையெடுக்க வந்தது. இக்குழுவில் **நார்ட்டன், பிராங்க், ஸ்மைத், ஹாரிஸ், வேஜர், எரிக் ஷிப்டன்** முதலிய பெயர்பெற்ற வீரர்கள் உறுப்பினராகவிருந்தனர். இக் குழுவினர் இம்முறை திபேத் அரசரை மனங் கனியச் செய்து இமயத்தின் மீதேற உடன்பாடு பெற்றனர். மலையரையன் இவ்வொன்பதாண்டுகளில் சினந்தணிந்திருப்பானெனக் கருதியேபோலும், இம்முறை திபேத் அரசர் திருவுளமிரங்கினர்.

குழுவினர் படையெடுப்பிற்காக ஏற்பாடுகளைச் செய்யலாயினர்; முன்னைய அனுபவங்களைக் கொண்டு, அதிகச் சுமைகளை எடுத்துச் செல்ல முடியாதென்று உணர்ந்து, அவற்றைக் குறைத்துக்கொள்ள வழி தேடினர். மலைமீது உட்கொள்வதற்கு வேண்டிய உயிர்வளியை அடைத்து வைக்க இலேசான கொள் கலன்களையும், குளிர், பனி, பனிக்காற்று முதலியவற்றினின்றும் தம்மைப் பாதுகாத்துக்கொள்ளக் கவசங்களையும், படுத்து உறங்குதற்குக் காற்றடைத்த மெத்தைகள், போர்வைகள் முதலானவைகளையும், குளிர் காய்வதற்கும் பனியை உருக்கிக் குடிநீராக்குவதற்கும் அடுப்புகளையும் உணவு வகைகளையும், மற்றும் பல சாதனங்களையும் அவர்கள் அமைத்துக் கொண்டனர்.

**1933**-ம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் இந்தியாவிலுள்ள டார்ஜீலிங்கை விட்டுக் கிளம்பி, கணவாய்களின் வழியா

கத் திபேத்திற்குச் சென்று அவர்கள் இமயமலை அடிவாரத்தை யடைந்தனர். அங்கு ஓர் பாசறை அமைத்துக் கொண்டு இளைப்பாறித் தம் கருவிகளையும் சாதனங்களையும் ஒழுங்குபடுத்திக் கொண்டனர். பின்னர் மலை மீதும், ஆங்காங்குச் செல்லும் வழியில் இடையிடையே உறையுள்களை (**Camps**) அமைத்துக் கொண்டனர். இவ்வுறையுள்களில் அவர்கள் தமக்கு வேண்டிய பொருள்களைச் சேமித்து வைத்துக் கொண்டு இளைப்பாறிச் சென்றனர். இங்ஙனம் உறையுள்களை அமைத்துக்கொண்டு செல்வதால் அவர்களுடைய உடல்கள் மலையின் இயல்புக்கேற்ப மாறுதலடைந்து மேலே ஏறுவதற்கேற்ற வலிமையை உடையவாயின. அதனால் அவர்கள் மேலும் மிக்க திறமையும் வலிவும் பெறுவர். இவ்வாறு ஐந்து உறையுள்களில் தங்கி இளைப்பாறி அவர்கள் மலை மீது **25700** அடி வரை வந்து விட்டனர். அதற்குமேல் செல்ல மீண்டும் ஓர் உறையுள் அமைக்க வேண்டியதாயிற்று. இதற்கு ஏற்ற இடம் கிடைக்கவில்லை. தக்க இடத்தைத் தேர்ந்தெடுப்பதற்குள் எதிர் பாராமல் திடீரென்று ஒரு பெரும் பனிப் புயல் தோன்றிப் பனி மழை கொட்டியது. பனிக் குன்றுகள் சரிந்து வந்தன. இனி அங்கிருந்தால் அப் புயலிலும் பனியிலும் சிக்குண்டு சிதறிவிடவோ, பனிக்குன்றுகள், பாறைகள், ஆகியவற்றின்கீழ் அகப்பட்டு அறைபடவோ வேண்டியது தான் என்ற நிலை உண்டாயிற்று. ஆகவே அவர்கள் திரும்பி விடுவதே நலம் என்று முடிவிட்டு அன்றிரவை அங்கு அச்சத்துடன் கழித்தனர்.

**கொடுமுடிகாணல் :**

எனினும் மறு நாட் காலை, கால நிலை கடுமையாகவே இருந்தும் அவர்கள் திரும்பும் கருத்தைக்

கைவிட்டு மேலே செல்ல முனைந்தனர். பனியின் கடுமை கண்களையும் மறைத்துவிட்டது. கண்கள்மீது அணிந்திருந்த கவசக் கண்ணாடியின் மேல், உறை பனி படிந்து பார்வையைத் தடுத்தது. உடல் குளிரைத் தாங்க முடியவில்லை. பனிக் கவசமும் பயனற்றதாகி விட்டது. சிறிதும் மேலே செல்ல இயலவில்லை. ஆகவே அவர்கள் எப்படியோ 'தப்பினோம் பிழைத்தோம்' என்று தம் கூடா ரத்திற்கே திரும்பி விட்டனர். அடுத்த நாள் மீண்டும் அவர்கள் மேலே செல்ல முனைந்தனர். செல்லும் வழியில் பனிக் கட்டிகள் மீது கால் ஊன்ற முடியாமற் போகவே அவற்றைக் கோடரிகளால் வெட்டிப் பாதை செய்து கொண்டே சென்றனர்; ஒவ்வொருவராக மாறி மாறிப் பாதை வெட்டிய வண்ணம் அவர்கள் 1000 அடி மேலே செல்ல முடிந்தது; ஒரே நோக்கமாக இங்குமங்கும் திரும்பிப் பாராமல் பனிப் பாறைகளைக் கடந்து எவரெஸ் டையே குறி வைத்துச் சென்றனர்; இறுதியில் தாம் காண விழைந்த அக் கொடுமுடியைக் கண்டு களித்தனர். அந் நிலையில் அவர்கள் தம் கண்களைத் தாங்களே நம்ப முடிய வில்லை; தாம் கண்டது அதன் உண்மைத் தோற்றமா, கானற் காட்சியா, என்று ஐயுற்று மயங்கிப் பின்னர் உண்மைத் தோற்றமே என்று தெளிந்தனர். வெள்ளியை உருக்கி வைத்தாற்போன்று ஒளி விட்டு மிளிரும் அக் கொடுமுடி அவர்கள் கண்ணுக்கு அருவிருந்தாக இருந் தது. அக் கண்கொள்ளாக் காட்சியை நெடுநேரம் கண்ட வண்ணம் அவர்கள் மகிழ்ந்து மெய்ம் மறந்து நின்றனர்; தம் மனத்தை, அம் மணி முடியின் மயக்கிலே பறி கொடுத்துத் தமது பெறலரும் பேற்றை எண்ணித் தருக்கி நின்றனர்.

**மீண்டும் தோல்வியே :**

எனினும் அவர்கள் எண்ணியது எவரெஸ்டு உச்சியில் ஏறி நிற்றற்கேயன்றே? அதனைக் கண்ணால் மட்டும் கண்டு அமைவதா? காலடியிற் கண்டு மகிழ வேண்டாவா? ஆகவே அவர்களையும் அறியாமல் அவர்களுடைய கால்கள் தாமாகவே அவர்களை மேலே இழுத்துச் சென்றன. இயற்கையின் இன்பத்தில் திளைத்திருந்த மகிழ்ச்சியால் தம்மையும் அறியாமல் அவர்களுக்கு ஊக்கம் பிறந்தது. ஆனால், அந்தோ! மீண்டும் அப்புயல் என்னும் பாவி அவர்களுக்குப் பகையாகத் தோன்றினன். கடும் பனிப் புயல் வீசி அவர்களுடைய உதிரத்தையும் உறையுமாறு செய்வது போல் தோன்றியது. பனி மிகுதியால் உதடுகள் வெடித்தன. குளிர் தாங்க முடியவில்லை. இதயமும் செயலற்று நின்றுவிடும்போல் காணப்பட்டது. ஆகவே அவர்கள் தம் பாசறைக்குத் திரும்பிச் சென்றனர். அங்கும் அவர்களைப் பனி விட்டபாடில்லை. பனிமாரி பெய்து பாசறையையும் புதைத்துவிடும்போல் இருந்தது. இரவு முழுதும் இத்தகைய கொடிய இயற்கையின் ஆடலுக்கிடையே அவர்கள் தம் பொழுதைக் கழித்தனர். விடிந்தும், குளிரும் பனியும் படிந்தபாடில்லை. பருகுவதற்குச் சூடாகத் 'தெர்மாஸ்' குடுவைகளில் வைத்திருந்த பானங்களும் உறைந்து குடிக்க உதவாமற்போய் விட்டன. தீ மூட்டிப் பனியை உருக்கி அந்நீரையே சூடாக்கிப் பருக வேண்டியதாயிற்று. பிறகு ஒருவாறு உடம்பைத் தேற்றிக்கொண்டு அவர்கள் எவரெஸ்டை நோக்கி 400 அடி உயரம் சென்றனர்; அங்கு மீண்டும் ஓர் உறையுளை அமைத்துக் கொண்டனர். அதுவே ஆறும் பாசறை. இரவு அதில் தங்கினர்; உறக்கம் வரவில்லை.

வைகறையிலெழுந்து உணவருந்தி வேஜர், ஹாரிஸ் என்னும் இருவர் மட்டும் மேல் நோக்கிச் சென்றனர். குளிரும் பனியும் உடலை விறைக்கச் செய்து காலெடுத்து வைக்க முடியாமல் செய்தன. பாதை துன்பம் நிறைந்ததாக இருந்தது. ஒரே சரிவான பெரும் பாறைகளைக் கடந்து செல்ல வேண்டியதாயிருந்தது. ஓரடி சறுக்கினுலும் ஆயிர மாயிரம் அடிகளுக்கு அப்பால் கீழே போய் விழ வேண்டியதுதான். அத்தகைய பேராபத்துகளையும் வென்று அவ்விருவரும் 28100 அடி உயரம் ஏறி விட்டனர். ஆனால் அன்று பொழுது சாய்ந்துவிட்டதால் மேற்கொண்டு செல்ல முடியவில்லை. அவ்வுயரத்தில் ஒரு பாசறை அமைத்துக்கொள்வதும் இயலாததாயிற்று. ஆகையால் அவர்கள் திரும்பித் தம் ஆரும் உறையுளுக்கே வந்து விட்டனர். அவர்கள் அடைந்த ஒரே மகிழ்ச்சி நாம் 28100 அடி உயரம் ஏறிவிட்டோம் என்பதேயாம்.

அன்றியும் அவர்கள் அவ்வுயரத்தில் ஒரு பனிக் கோடரியைக் கண்டெடுத்தனர்; அது அங்கு எப்படி வந்தது, அது யாருடையதாயிருக்கலாம், என்று ஆய்ந்தனர். 'ஒன்பது ஆண்டுகளுக்கு முன்பு அவ்வுயரத்தில் ஏறிய வீரர்கள், மலாரி, இர்வின் என்னும் இருவர் தம்முடன் கோடரிகளை எடுத்துச் சென்றனரன்றோ? அவர்கள் அவ்விடத்திலன்றோ கண்ணுக்குத் தெரியாமல் மறைந்தது? ஆம்! அக் கோடரி அவ்விருவரில் ஒருவருடையதாகத்தான் இருக்க வேண்டும்; இதில் ஐயமில்லை; அவ்வாறன்றி அது அங்கு வர வேறு வழியில்லை,' என்றெல்லாம் தம்முள் பேசி முடிவிட்டனர். அவர்கள் எடுத்துச்சென்ற வேறு பொருள்கள், அவர்களுடைய மற்ற அடையாளங்கள், ஒன்றும் அங்குக் காணப்படவில்லை. அவர்களின் எலும்புகூட அங்கு

தென்படவில்லை. அவையெல்லாம் பனிப் புயல்களாலும் காற்றுகளாலும் அருவிகளாலும் அடித்துக் கொண்டு போய்க் கண் காணாத இடத்தில் சிதறியிருக்கும்; அல்லது புதைந்து போயிருக்கும். எப்படியோ இக் கோடரி ஒன்று மட்டும் எஞ்சியிருந்தது. இவ்விடத்தைக் கொண்டே அவர்கள் ஏறிய உயரத்தை உறுதியாகக் கணக்கிட முடிந்தது.

## இயற்கையின் இரக்கமின்மை:

பாசறைக்குத் திரும்பிய பின் இரவை அங்கே கழித்துவிட்டு, ஸ்மைத், ஷிப்டன் ஆகிய இருவரும் மீண்டும் காலையில் மேலே செல்ல விழைந்தனர். ஆனால் ஷிப்டனுக்கு திடீரென்று வயிற்று நோய் தோன்றியதால், ஸ்மைத் மட்டும் தனியே சென்றார். அவர் சென்றவழியோ, பனிச் சேறும், பனி மணலும் படிந்ததாக விருந்தது. அதில் கால் புதைந்து விட்டது. காலை மீட்கப் பல நாழிகை இடையிடையே போரிடவேண்டியிருந்தது. பல மணிநேரம் முயன்றும் சில அடிகள்கூட மேலே செல்ல முடியவில்லை. இந் நிலையில் பெருங் காற்று ஒன்று வீசி அவரை அடித்துக்கொண்டு போய்விடும்போல் இருந்தது. சில் என்று சவுக்கால் அடிப்பதுபோல் குளிர் காற்று சாடிற்று. காலால் நடக்க முடியாமற் போகவே அவர் கீழே படுத்து ஊர்ந்து செல்ல முயன்றார். எவ்வளவு முயன்றும் எவரெஸ்டு சிகரத்தை எட்டிப் பிடிக்க முடியவில்லை. இறுதியில் அவர் தம் தோல்வியை ஒப்புக் கொண்டு பாசறைக்கு மீள வேண்டியதாயிற்று. இயற்கை இவ்வாறு மீண்டும் தன் இரக்கமற்ற ஆற்றலைக் காட்டி மனிதனின் முயற்சியை முறியடித்தது. பிரிட்டிஷ் குழுவினரின் நான்காவது பெரு முயற்சியும் இறுதியில் தோல்வியாகவே முடிந்தது.

# 5. மேலும் சில முயற்சிகள்

**ஏற்ற பருவம் :**

நான்காவது எவரெஸ்டுப் படை எடுப்பின் தலைவ ராகிய ரட்லெஜ் தம் அனுபவங்களை எல்லாம் தொகுத்து ''எவரெஸ்டு — 1933'' என்ற ஒரு நூலை எழுதினார். அதில் இதுவரையில் ஒருவரும் அறியாத சில உண்மை களை அவர் விளக்கிக் கூறினார். அவற்றுள் முக்கிய மானது எவரெஸ்டுமீது ஏறுதற்குரிய காலநிலையைப்பற்றி அவர் குறிப்பிட்டிருப்பதுதான். இமயப் பகுதியில் ஜூன், ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் தென் கிழக்குப் பருவக் காற் றும், அக்டோபர், நவம்பர், டிசம்பர் மாதங்களில் வடமேற் குப் பருவக் காற்றும் அடிக்கும். காற்றில் உள்ள நீராவி மலை மீது அதிக உயரத்தில் வரும்போது அங்குள்ள குளிர் மிகுதியால் அது உடனே உறைந்து பனித் திரள்களாக மாறி விடும். அவை பிறகு காற்றுடன் கூடிப் பனிப் புயல்க ளாக வீசும். இப்பனிப் புயல்கள் மேற்கூறிய பருவகாலங் களில் இமயத்தின்மீது பனிமழை பொழியச்செய்து அதன் சிகரங்களைப் பனிப் படலத்தால் மூடிவிடும். ஓர் உயிரும் அங்குச் சிறிது நேரமேனும் வாழ முடியாது. ஆதலால் அங்கு உயிர் வாழ்க்கை என்பதே இல்லை. பாறைகள் மீது பனி படிந்துகொண்டேயிருக்க அப்பாறைகள் விரைவில் மிகப் பெரியவையாகிப் பாரத்தால் கீழே சரிந்து விழுந்து பொடிப் பொடியாகச் சிதறி விடும். ஆகவே இப் பருவ காலக் கொடுமையை உணராமல் எவரேனும் அக்காலத் தில் எவரெஸ்டு மீது ஏற முயன்றால் அவர்கள் வீணே உயி

ரிழக்க வேண்டியது தான். கோடைக்காலத்தில் தென் கிழக்குப் பருவக் காற்று வீசும்போதும், குளிர் காலத்தில் வட மேற்குப் பருவக் காற்று வீசும்போதும், மக்கள் அதன் மீது ஏறுவதென்பது அறவே இயலாத செயலாகும். ஆகையால் கோடைப் பருவக் காற்று தொடங்குவதற்கு முன்போ, அது வீசி முடிந்தபின்போ, சில நாட்களில் பருவ நிலே சாதகமாகவிருக்கும். ரட்லெஜ் என்பார் இச் சாதகமான நிலேயைச் சரியாகக் கணக்கிட்டு மே 7-ம் தேதி முதல் ஜூன் 15 வரையில், அல்லது செப்டம்பர் தொடக்கம் முதல் அக்டோபர் தொடக்கம் வரையில், எவரெஸ்டு மீது ஏறலாம் என்று கண்டெழுதியுள்ளார். ஆயினும் இக் காலவரையறைகளும் எப்பொழுதும் ஒரே தன்மையாக இருப்பதில்லே என்றும் அவை சற்று முன் பின்ஞக பிறழ்ந்து வருதலும் உண்டு என்றும் பின்னர் அறியப்பட்டது. சில சமயங்களில் ரட்லெஜ் குறிப்பிட்ட சாதகமான பருவ நிலே உண்டாகாமலே போய்விடுதலும் உண்டு. 1953-ம் ஆண்டு மே மாதத்தில் உண்டானது போன்ற நல்ல பருவ நிலே அதற்கு முன் இருபது ஆண்டுகளில் உண்டானதே இல்லே என்று சொல்லுகின்றூர்கள். எனினும் ரட்லெஜ் கூறியது பெரும்பாலும் ஏற்படும் ஒரு நிலேயேயென்று கொள்ளலாம். மே மாதத்திலோ செப்டம்பர் மாதத்திலோ ஒன்றிரண்டு வாரங்கள் பருவ நிலே ஏற்றதாயிருக்கும் என்ற துணிவின்மீது அச்சமயத்தில் எவரெஸ்டு உச்சியையடையத் திட்டமிட்டால் வெற்றி கிடைக்கும் என்று அவர் கூறினூர். அங்ஙனமே, 1933க்குப் பின்னர் மலேயேறிய மக்களெல்லாம் பருவ நிலே பார்த்தே ஏறினர். ரட்லெஜ். தெரிவித்த இவ்வுண்மையைப் பயன்படுத்தி முதன் முதலாக ஐந்தாம் பிரிடிஷ் குழு 1935 ல் எரிக்ஷிப்டன் தலேமையில் இமயத்தின் மீது படையெடுத்தது.

**ஷிப்டன் கண்டவை:**

உலேயா உள்ளம் படைத்த **ஷிப்டன் 1935**-ல் விமானத்தில் பறந்து சென்று முதலில் எவரெஸ்டு உச்சியை ஆராய்ந்தார். அங்கு ஏறுவதற்குப் பாதை காணவும், ஏறுவதில் உள்ள இடையூறுகளை அறியவும், பனியின் நிலைமை முதலியவற்றைப் பார்க்கவும் அவர் அரும் பாடுபட்டார். பன் முறை கொடு முடியைச் சுற்றிச் சுற்றி வந்து அதன் பல்வேறு தோற்றங்களையும் பனிக் கட்டிகளாலாகிய பக்கச் சரிவுகளையும் படம் பிடித்துக் கொண்டுவந்தார். பின்னர் அவர் தம் குழுவுடன் 23000 அடி உயரம் ஏறிப் புதிதாக மலேயேறுபவர்களுக்கு உண்டாகும் இன்னல்களைப் பரிசோதனைகளால் உணர்ந்து அவற்றைத் தடுக்கப் பாடுபட்டார். அப்போது அவர் எவரெஸ்டின் வட பகுதியின் அடிவாரத்தில் ஒரு மனித உடலேயும் கிழிந்த கூடாரக் கந்தல்களையும் நாட் குறிப்புப் புத்தகம் ஒன்றையும் கண்டார். அவை ஒரு ஆங்கில வீரனுடையவை என மட்டும் அறிய முடிந்தது ; மேற் கொண்டு அவரைப்பற்றி ஒன்றும் தெரிந்துகொள்ள முடியவில்லை.

**மீண்டும் ரட்லெஜ் :**

எரிக் ஷிப்டன் செய்த மேற்கூறிய ஆராய்ச்சிகளின் பயனுக 1936-ல் ஆண்டில் ரட்லெஜ் தலைமையில் மீண்டும் ஒரு குழு புறப்பட்டது. இக் குழுவில் ஸ்மைத், ஷிப்டன், ஹாரிஸ, ஆலிவர் முதலியோர் கலந்துகொண்டனர். ஏப்ரல் மாத இறுதியில் அனைவரும் அடிவாரப் பாசறையிலிருந்து புறப்பட்டு, ஆங்காங்கே பாசறைகள் அமைத்துக்கொண்டு பருவகாலம் தொடங்கு முன்னரே இமயத்தின்மேல் 23000 அடி ஏறிவிட்டனர். எவரெஸ்டுக் கொடுமுடியை அடைய இடையே ஒரு பகுதி தான் இருந்தது. அவர்கள் வகுத்த திட்டத்தின்படி பருவ

காலத்திற்கு முன்னரே எவரெஸ்டை அடைந்து திரும்பி விட முடியும். ஆயினும் அப் பாழும் பருவக் காற்று, இது வரை தனக்கே உரிமையாய் இருந்த எவரெஸ்டின் முடியை மக்கள் அடைவதா என்று சினந்து, அவர்களைத் தடுப்ப தற்கு விரைந்து வந்தாற் போல வழக்கமாய் வரும் காலத் திற்கு முன்னரே வந்துவிட்டது. ஆகவே அவர்கள், கால நிலை துணை செய்யாததால், காலனுக்கு அஞ்சவேண்டியதா யிற்று. மேலும், அவர்கள் ஏறக் கருதியிருந்த எவரெஸ் டின் வட பகுதி, பனியால் நிறைந்து வழுக்கலுடையதாக மாறிவிட்டது. எனவே, அவர்களது திட்டம் நிறைவேற வில்லை. எவரெஸ்டு மீது ஏறுவது மனித ஆற்றலுக்கு அப் பாற்பட்ட செயல் என்ற முடிவுடன் அவர்கள் திரும்பி வந்து விட்டனர். ஆறும் படையெடுப்பு அங்ஙனமாயிற்று.

**டில்மன் குழு:**

இரண்டு ஆண்டுகள் கழித்து **1938**-ல் டில்மன் என்பவர் தலைமையில் சென்ற மற்றொரு பிரிட்டிஷ் குழு வும் பருவக் கோளாறின் காரணமாக வெற்றி காண முடியவில்லை. இக் குழுவினர் **27300** அடி உயரம் ஏறிய வுடன், அவர்கள் எதிர்பார்த்தபடி பருவக் காற்றுக்கு முன்பு, இயல்பாகவுளதாகும் அமைதிக் காலம் இல்லாது ஒழிந்தது. அவ்வாண்டு அமைதிக் காலமேயின்றி இடை விடாது காற்று அடித்த வண்ணமாகவே இருந்தது. ஆத லால் அவர்கள் பருவ காலம் முழுதும் மலைமீதிருப்பதால் உண்டாகும் உயிரழிவை எண்ணி, உடனே அடிவாரத்திற் குத் திரும்பி வந்து விட்டனர். ஏழாம் முறையும் எவ ரெஸ்டு வெல்லப்படாமலேயே இருந்தது.

**1939**-ல் இரண்டாவது உலகப் பெரும் போர் தொடங்கி விட்டதால் எவரெஸ்டுமீது ஏறுதற்குரிய சிறந்த வீரர்

ஒருவரும் முன்வரவில்லை. போர் முடிந்து ஆறாண்டுகள் கழிந்த பின்னரே, 1951-ல், மீண்டும் எவரெஸ்டுமீது ஏறு தற்கு வீரர்கள் முன்வந்தனர்.

**முயற்சியில் புதுமை :**

இதற்கு இடையில் எவரெஸ்டுப் படை எடுப்பில் ஒரு புதுமையான நிகழ்ச்சி நடந்தது. மனித ஆற்ற லுக்கு அப்பாற் பட்ட இச் செயலை இனி அவ்வாற் றலை மிஞ்சிய வேறு வகை ஆற்றலால் தான் செய்ய முடியும் என்று சிலர் கருதினர். உடல் வலிமையாலன்றி உள்ளத் தூய்மையாலும் ஆன்ம வலிமையாலுமே எவரெஸ் டின் உச்சியையடைய முடியும் என்று அவர்கள் கருதினர். ஆன்ம ஆற்றல் படைத்த ஒருவர் தெய்வ நம்பிக்கையுடன் இம்முயற்சியில் ஈடுபட்டால் ஏன் வெற்றி கிட்டாது என்று எண்ணினர் சிலர். இப்படி எண்ணியவர்களுள் ஒருவர் **மாரிஸ் வில்ஸன்** என்னும் ஆங்கிலேயர். அவருக்கு ஆன் மீக நம்பிக்கையும் கடவுட் பற்றும் அதிகம் உண்டு. அவர் துறவு நெறியைப் பின்பற்றியவர். எனவே அவர் தனது ஆன்ம சக்தியால், தான் மட்டும் தனியே மலை யேற உறுதி பூண்டார்; வேறு ஒருவரையும் தனக்குத் துணையாக ஏற் றுக் கொள்ள மறுத்தார். ஆன்மாவையும் உடலையும் தூய்மையாக வைத்துக் கொண்டிருக்கும் தனக்கு வேறு உதவி தேவையில்லையென்று அவர் துணிந்தார். தான் வெற்றி பெற்றால் ஆன்மத் தூய்மை உடற்றூய்மை ஆகிய வற்றின் மேன்மையை உலகறியச் செய்யலாம் என்று அவர் விழைந்தார். ஆகவே வலிந்து ஒருவரும் தனக்குத் துணைசெய்ய வராமலிருப்பதற்காக அவர் மாறுவேடம் பூண்டு திபேத் வழியாகச் சென்று எவரெஸ்டின் வடபகுதி மீது ஏறப் பல முயற்சிகள் செய்தார். அவருக்கு மலை யேற்றத் தொழில் முறை நுட்பங்களோ அதற்குரிய விஞ்

ஞான நுணுக்கங்களோ தெரியாது. அவற்றை அவர் தம் முயற்சியில் பயன்படுத்தவுமில்லை. வெறும் தன்னம்பிக்கை யுடனும் மன உறுதியுடனும் பன்முறை விடாப்பிடியாக அவர் எவரெஸ்டு மீதேற முயன்றார். ஆயினும், அந்தோ! இயற்கையின் முரணுக்கு யாரே விலக்காக முடியும்? இரக்கமற்ற இயற்கை, சுரக்கும் பனிக்கும் விறைக்கும் குளிருக்கும் அவரை இரையாக்கி உயிரை உடலினின்றும் பிரித்தது; உடல் கீழே கிடந்துவிட்டது; அவரது புனித உயிர் எண்ணியாங்கு உச்சியை அடைந்ததோ யாதோ யாம் அறியோம்! உடலுடன் அவர் உயிர் உச்சியை அடையவில்லை என்பதுமட்டும் உறுதி. அவரால் கூண் டோடு கைலாசம் அடைய முடியவில்லை. இவ்வுண்மையை அவரது நாட் குறிப்புப் புத்தகமே நமக்குக் கூறுகிறது. 'உடலைக் குளிரினின்றும் பனியினின்றும் பாதுகாத்துக் கொள்ள உயிருக்குப் போதிய ஆற்றலில்லாது போயிற்று', என்று இறக்கும் தறுவாயில் அவர் தமது நாட் குறிப்பில் எழுதி வைத்தார். 'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்'; உடம்பை மிஞ்சி உயிருக்குத் தனி ஆற்றலில்லை, என்ற இவ் வுண்மைகள் இதனால் புலப்படுகின்றனவன்றோ! ஆன்ம பலமுள்ளவர்களுக்கும் 'அசைந்து கொடுக்கவில்லை அக் கொடுமுடி. ஆயினும் அவரது முயற்சியும் துணிவும் போற் றற் பாலனவாகும். எத்துணை மன வலிமையிருப்பின் ஒரு வர் பிறர் துணையின்றித் தாம் ஒருவரே தனித்துப் பேரபா யம் நிறைந்த ஒரு முயற்சியில் ஈடுபடத் துணிவர்? முன் னையோர் பட்ட துன்பங்களையும், எதிர்த்த இடையூறுகளை யும் கண்டு வைத்தும் எவ்விதச் செயற்கைச் சாதனங் களும் மானுடத் துணையும் இன்றி மலையேறத் துணிந்த அவரது மனப் பான்மையை நாம் என்னவென்றுரைப் பது!

**புதுப் பாதை காணும் முயற்சி :**

இரண்டாவது உலகப் பெரும் போர் தொடங்குவதற்கு முன் பலரும் எவரெஸ்டு மீது ஏறுதற்குப் பின்பற்றிய வழி ஒரே வழியாகும். அதுதான் முற்கூறிய திபேத் வழி. இமயத்தின் வடபக்கமுள்ள திபேத்தில் பயணத்தைத் தொடங்கி, ராங்க்பக் பனியாற்றைப் பின்பற்றி, மேலே செல்லும் ஒரே வழியைத்தான் அனைவரும் அறிந்திருந்தனர். அவர்கள் முதலில் இந்தியாவிலிலுள்ள டார்ஜீலிங்கிலிருந்து இமயமலைக் கணவாய்களின் வழியாகத் திபேத் பீடபூமிக்குச் சென்று, பிறகு அங்கு மலையடிவாரத்தில் உள்ள பனி ஆற்றைத் தொடர்ந்து மேலே ஏறினர். எவரெஸ்டின் அடிவாரத்திலிருந்து அக் கொடுமுடியின் வட பகுதியிலுள்ள சரிவு அல்லது அதன் தோள்பட்டை போன்ற பாகத்தின் மீது ஏறி அதன் உச்சியை யடைய அவர்கள் முயன்றனர். எவரெஸ்டின் உச்சியை அடைவதற்கு அதன் தென் பக்கமாகவும் மேற்குப் பக்கமாகவும் கூட இரண்டு சரிவுகள் உள்ளன. ஆனால் இவ்வழிகள் 1951 வரை ஒருவருக்கும் தெரியாமலிருந்தன. முதல் ஏழு பிரிடிஷ் படையெடுப்புகளும் எவரெஸ்டின் வட பகுதி வழியாகவே நிகழ்ந்தன. அச் சரிவின்மீது ஏறுவதே மற்ற வழிகளைவிட எளிதாகக் கருதப்பட்டது. ஆனால் அதில் அனைவரும் தோல்வியுற்றனர். ஆகவே எவரெஸ்டு மீது ஏறப் புதுப் பாதை காணும் அவசியம் ஏற்பட்டது.

**ஷிப்டன் ஆராய்ச்சி:**

1933-ல் எரிக்ஷிப்டன் எவரெஸ்டு மீது ஏறுகையில் அதன் தென் பகுதியின் அமைப்பைக்கண்டு வியப்புற்றார். வட பகுதியைவிடத் தென் பகுதி ஏறுதற்கு எளிதாக இருக்குமென அவருணர்ந்தார். ஆகையால் 1951-ல் அவர்

நேபாளத்திலிருந்து அப்பகுதியினைத் தெளிவுற ஆராய ஒரு குழுவுடன் புறப்பட்டார். அப்போது இமயத்தின் அரண்களைக் கடக்கத் திறவுகோல்போலுள்ள ஒரு பெரும் பள்ளத்தாக்கு (**Western Cwm**) அதன் மேற்குப் பக்கத்திலிருப்பதை அவர் கண்டார். அது **20000** அடி உயரத்திற்கு மேல் உள்ள பல பெரிய கொடுமுடிகளால் சூழப்பட்டது. இதுவரை அதைப்பற்றி ஒருவரும் அறிந்ததில்லை. ஆகவே அது மர்மப் பள்ளத்தாக்கு எனக் கருதப்பட்டது. அதில் லோட்சே (**Lhotse**) என்னும் சிகரத்தினின்று வரும் பெரும் பனியாறுபாய்கிறது. அவ்வாற்றுப்பெருக்கு பனிப் பாறைகள், குன்றுகள் ஆகியவற்றை அடித்துக் கொண்டு வரும். அவை மேலிருந்து சிதைந்து தகர்ந்து வரும். ஆதலால் அது மிகுதியும் அச்சம் விளைப்பதாகும். எனினும் இவ்வாற்றின் வழியே சென்றால் எவரெஸ்டின் தென் சரிவின் வழியாக அதன் மீது ஏறிவிடலாம் என்று எரிக் ஷிப்டன் கண்டார். இதுவே அவர் செய்த ஆராய்ச்சியின் முடிவாகும்.

## புதுப்படலம்:

எவரெஸ்டு மீது ஏறுவதற்கு மலையேற்றக் குழுவினர் செய்த முயற்சிகளை ஒரு பெரும் போர் முயற்சிக்கு ஒப்பிடலாம். எதிரியைத் தாக்குவதில் ஒரே வழியை அல்லது திசையைக் கைக்கொள்வது எண்ணிய வெற்றியை உறுதியாக அளிக்கும் என்று எப்படிக் கூறமுடியாதோ, அது போலவே எவரெஸ்டு மீது ஏறுவதற்கும் பழைய ஒரே வழி உதவாது என்று மலையேறிகள் அனுபவத்தில் கண்டனர். முன்பெல்லாம் கைக்கொண்ட திபேத் மார்க்கம் வெற்றி தாராதது கண்டு அவர்கள் பிறகு நேபாள மார்க்கத்தைக் கைக் கொண்டனர். திபேத்தும் நேபாளமும் மர்ம நாடு

கள். அவற்றில் அந்நியர் புக எளிதில் அனுமதி கிடைக்காது. அத்தகைய நாடுகளுக்கிடையில் எவரெஸ்டு கம்பீரமாகத் தலை நிமிர்ந்து நிற்கிறது. அதன் மீது ஏற இவ்விரண்டு மர்ம நாடுகள் வழியேதான் செல்ல வேண்டும். திபேத்தின் அரசரும் குருவுமாகிய தலைலாமா என்பவர் எவரெஸ்டைத் தெய்வத் தன்மையுடையது என்று கருதி அதன் மீது ஏற அந்நியருக்குச் சில சமயங்களில் இசைவு தர மறுத்துவிட்டார். நேபாள நாட்டரசரோவெனின், சென்ற இரண்டாவது உலகப் போர் தொடங்கும்வரையில் தம் நாட்டில் பிற நாட்டினர் புக இணங்காதிருந்தார். தம் புண்ணிய பூமியில் அந்நியர் ஒருவரும் காலடி வைக்கத் தகுதியற்றவர் என்று அவர் கருதினர்போலும். ஆனால் போருக்குப் பிறகு நேபாளத்தில் ஏற்பட்ட அரசியல் மாறுதல்களால் அங்கு அந்நியர் புகுவது எளிதாயிற்று. பல அயல் நாட்டினர் அங்குத் தட்டுத்தடையின்றிப் புகுந்தனர். பிரிடிஷார், பிரெஞ்சுக்காரர், அமெரிக்கர், சுவிட்சர்லாந்தியர், ஜர்மானியர் ஜப்பானியர் முதலிய பல நாட்டினரும் இமயத்தின் சிகரங்களை எட்டுவதற்கு நேபாளத்தின் வழியாகச் சென்றனர். அதன் பின்னரே எவரெஸ்டுப் படையெடுப்பில் ஒரு புதிய படலம் தோன்றியது. அப்புதுப் படலத்தின் இறுதியில்தான் மலையேற்றக் குழுவினர் வாகை சூடும் பேறு பெற்றனர்.

**போர்ச் சூழ்ச்சி :**

பேர்க் களங்கள், போர்ச் சூழ்ச்சிகள், போர்க் காலங்கள் முதலியவற்றை எதிரியின் தன்மைக்கேற்ப மாற்றுவது போலவே எவரெஸ்டுப் போரிலும் பொருள், கருவி, இடம், காலம், முதலியவை எண்ணிப் படையெடுப்புகளும் தாக்குதல்களும் நிகழ்ந்திருக்கின்றன. அதன் பயனாக

வெற்றி கிட்டி, 'ஞாலம் கருதினும் கைகூடும் காலம், கருதி யிடத்தாற் செயின்' என்ற உண்மை, நிலை நாட்டப்பட்டு விட்டது. இவ்வெற்றிக்கு ஏற்ற காலம் யாதென முன்னரே கண்டோம். ஆனால் அதுவும் படையெடுப்பாளரைப் பன்முறை ஏமாற்றி விட்டது. அதுபோலவே தக்க வழி எனத் தேர்ந்தெடுக்கப்பட்ட மேலைப் பள்ளத்தாக்கும் தென் பகுதிச் சரிவும் படையெடுப்பாளரைப் பல சோதனைக்குள்ளாக்கி விட்டன.

**புதுப்பாதை:**

இனி நாம் காணப்போகும் படையெடுப்புகள் எரிக் ஷிப்டன் கண்டு பிடித்த புதுப் பாதையிலேயே நிகழ்ந்தன என்பதை நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும். அப்பாதையாவது, நேபாளத்தின் வழியாக மேற்கு நோக்கிச் சென்று இமயத்தின் மேலைப் பள்ளத்தாக்கைக் குறுகி அதிலுள்ள லோட்சே பனியாற்றைப் பின்பற்றி மேலே போய், எவரெஸ்டின் தென் பக்கமுள்ள 'அதன் தோள்பட்டை போன்ற சரிவின்மீது ஏறி அதன் உச்சியை யடைவதாகும். இத்தகைய சீரிய வழி ஆராய்ச்சி செய்த ஷிப்டனுக்கு வெற்றிபெறும் பேறு கிடைக்காமற்போனது சால இரங்கத் தக்கதேயாகும். அவர் நட்ட செடியின் பலனைப் பெற்றவர் பிறரேயாவர். இறுதி வெற்றி கண்டோர் ஷிப்டனுக்கு என்றென்றும் கடமைப்பட்டவராவர். அவ்வெற்றிக்கு வழி காட்டிய அன்னாரை உலகம் என்றும் மறவாது போற்றும் என்பது உறுதி.

# 6. சுவிஸ் படையெடுப்புகள்

1951-ல் எரிக் ஷிப்டன் தலைமையில் நிகழ்ந்த ஆராய்ச்சிப் படையெடுப்பு எட்டாம் படையெடுப்பாகும். இப்படை 20600 அடி உயரம் சென்றது. இப்படை, பாதையை யாராயவே சென்றதால் எவரெஸ்டு உச்சிக்குச் செல்ல ஆயத்தங்கள் செய்து கொள்ளவில்லை; ஆனால் மலைமீது ஏறுவோர் எதிர்க்கவேண்டிய இன்னல்களையும் அவற்றை எதிர்க்கும் வழிகளையும் கண்டு வந்தது. 20000 அடிக்கு மேல் செல்பவர் அங்குள்ள காற்றின் அழுத்தக் குறைவினாலும், பெருங் காற்றுகளாலும் தட்ப வெப்ப மாறுபாடுகளாலும், கடுங் குளிர், பனி முதலியவற்றாலும், உடல் மெலிவு, குருதி உறைதல், மூச்சுத் தடைபடல், பசியின்மை ஆகிய பல துன்பங்களுக்கு உள்ளாகாமலிருக்க வழி வகைகளைச் செய்து கொள்ளவேண்டும். அச் சூழ்நிலைக் கேற்பத் தம் உடலைத் தகுதிப்படுத்திக் கொள்ளும் பயிற்சி அவர்களுக்கு இன்றியமையாதது. இதற்கான அகப் புற ஆயத்தங்களைச் செய்துகொள்வது எப்படியென்று எரிக் ஷிப்டன் விளக்கிக் கூறினார். அதன் பயனாகப் பின்னர் நிகழ்ந்த படை யெடுப்புகளுக்கு ஒழுங்காகவும் தவறின்றியும் திட்டத்தை அமைத்துக் கொள்ள முடிந்தது.

**முதல் சுவிஸ் குழு :**

ஷிப்டன் கண்ட புதுப் பாதை, அவர் கூறிய உபாயங்கள் முதலியவற்றைப் பின்பற்றி 1952-ல் முதல் சுவிஸ் கோஷ்டி எவரெஸ்டைத் தாக்கப் புறப்பட்டது. இது

அதன் மீது ஏறுதற்குச் செய்யப்பெற்ற ஒன்பதாவது முயற்சியாகும். 1952 ஏப்ரல் மாதத்தில் இக் குழுவினர் எவரெஸ்டு மீதேற ஆயத்தமாகச் சென்றனர். அவர்களுக்குத் தலைவர் ரெடுவார்டு விஸ்டுனண்ட் என்பவர். இக்குழுவில் மலையேறுவதில் பெருந் திறமை பெற்ற இருவராகிய தென்சிங்கும், லாம்பெர்ட்டும் இருந்தனர். தென்சிங்கு நேபாளத்தில் பிறந்து இந்தியாவில் உள்ள டார்ஜிலிங்கில் குடியேறிப் பன்முறை இமயத்தின்மீது படையெடுத்தவர். எவரெஸ்டு மீது நடைபெற்ற பதினொரு தாக்குதல்களில் இவர் ஏழில் பங்கெடுத்துக்கொண்டவர். இவர் இல்லாமல் எவரெஸ்டைப் பிடிக்க முடியாது என்ற எண்ணம், அதைத் தாக்கச் சென்ற அனைவர் மனதிலும் வேரூன்றி விட்டது. இவருடைய அனுபவங்களும் ஓர்வுகளும் அவர்களுக்கு இன்றியமையாதவையாக இருந்தன. இவரது மலையேற்றத் திறமையைப் பாராட்டி இவருக்கு நேபாள அரசினர் , மலைப்புலி ' என்னும் பொருளுள்ள 'தென்சிங்' என்னும் பட்டத்தை அளித்தனர். அயல் நாட்டாரும் இவரைப் ' பனிப்புலி ' என்று புகழ்ந்துள்ளனர். பனி நிறைந்த இமய மலையில் இவர் மிக எளிதாக எவ்வித செயற்கையான உபகரணங்களும் இன்றி ஏறி விடுவார். இதைக் கண்டு அயல் நாட்டினர் இவரை வியந்து பாராட்டியுள்ளனர். இவரை எவரெஸ்டு குழுவினர் அனைவரும் துணைவராக மட்டு மன்றிச் சிறந்த ஆலோசகராகவும் கொண்டனர். லாம்பெர்ட்டு என்பவரோ சுவிட்ஸர்லாந்தில் உள்ள ஆல்ப்ஸ் மலையில் பன் முறை ஏறிப் பழகியவர். ஆல்ப்ஸ் மலையில் இமயத்திலிருப்பது போலவே கடும் பனியும் குளிரும் பனிக் குன்றுகளும் சிகரங்களும் பனி

ஆறுகள் முதலியவையும் உண்டு. அம்மலையில் இவர் ஏறிப் பழகியதால் இக் குழுவில் அவர் இன்றியமையாத ஒருவராகக் கருதப்பட்டார்.

**தோல்வி :**

இக்குழுவினர் நேபாளத்தினின்றும் மேற்கே சென்று இமயத்தின் மேலைப் பள்ளத்தாக்கில் **21150** அடி உயரத்தில் ஒரு பாசறையமைத்துக் கொண்டனர். இது அவர்களது நான்காம் பாசறையாகும். இங்கிருந்து தான் எவரெஸ்டைத் தாக்குவதற்கு எல்லாவித ஆயத்தங்களும் முயற்சிகளும் செய்யப் பெற்றன. குழுவினர்க்கு வேண்டிய உணவு, உடை, உபகரணங்கள் முதலிய யாவும் இங்கு சேமித்து வைக்கப்பட்டன. பின்னர் அவர்கள் லோட்சே பனி ஆற்றைத் தொடர்ந்து போய் நப்ட்சே (**Nuptes**) என்னும் சிகரத்தின் மேற்குப் பக்கத்தில் **22630** அடி உயரத்தில் ஐந்தாம் பாசறை யமைத்தனர்; அங்குச் சில நாட்கள் தங்கி எவரெஸ்டின் அடிவாரப் பகுதியாகிய எபரான் டி ஜெனிவாய் என்னும் சரிவைக் கடந்து லோட்சே சிகரத்தின் பக்கமாகச் சென்று தென் தோள் பட்டையின் தொடக்கப் பகுதியில் ஆறும் பாசறை அமைத்துக்கொண்டனர். அதன் உயரம் **25840** அடி. பின்னர் அவர்கள் எவரெஸ்டின் தென் பகுதிச் சரிவாகிய அதன் தோள்பட்டை மீதேறி அதன் மேல் **27550** அடி உயரத்தில் ஏழாம் பாசறையை நாட்டினர். இங்கிருந்து எவரெஸ்டின் தென்முனை என்னும் பகுதியை அடைந்த பின்னரே அதன் உச்சியைப் பிடிக்கவேண்டும். அத் தென் முனையின் உயரம் **28740** அடி. அங்கிருந்து **260** அடி உய

ரம் சென்றால் உலகத்தின் உச்சியை (எவரெஸ்டை)த் தொட்டுவிடலாம். ஆனால் தென்சிங்கும் லாம்பெர்ட்டும் அடங்கிய தாக்குதல் படை தென் தோள்பட்டையின் மீது **28210** அடி உயரம் சென்றவுடன் மேலே செல்ல முடிய வில்லை. அவர்கள் அங்குச் சென்றது, மே **28**-ம் நாளாகும். எவரெஸ்டு உச்சியையடைய இன்னும் **792** அடி உயரமே இருந்தது. ஆனால் அப் பகுதி மிகவும் செங்குத்தாக இருப் பதால் அதன் மீது ஏறுவது மிக மிகக் கடினம். அன்றி யும் அவர்களுக்கு அப் பகுதியில் ஏறுவதற்கு வழி தெரிய வில்லை. உயிர்ப்பதற்கு எடுத்துச் சென்ற உயிர்வளிக் கலன் களும் சரியாகத் தொழிற்பட வில்லை. ஆகவே அவர்கள் கீழே இறங்க வேண்டிய தாயிற்று. இறங்கிக் கீழ்ப் பாசறைக்கு வந்தவுடன் களைப்பு மிகுதியாலும் உடல் மெலிவாலும் தென்சிங்கு ஒரு நாள் முழுதும் நினைவற்றுக் கிடந்தார். அப்போது அவரை இடையிடையே எழுப்பி வலிந்து உணவளிக்க வேண்டியதாயிருந்தது.

இக் குழு தோல்வியடைந்ததற்கு வேறு காரணங்க ளும் சில உள. குழுவினர் நேபாளத்தின் தலை நகராகிய காட்மாண்டுவிற்கு வந்தவுடன், தம் உடலை மலையேற்றத் திற்குத் தகுதிப் படுத்திக்கொள்ளாமலும் வேண்டிய பயிற்சி பெறாமலும் உடனே மலையேறப் புறப்பட்டுவிட்ட னர். அது, முதற் பெருந் தவறு. பின்னர் உணவு, உயிர் வளி முதலியவற்றைச் சரியான முறையில் எடுத்துச் செல்லவில்லை. அவர்களுடைய மலைச் செலவும் தாமதமாக வேயிருந்தது. அதனால் பருவ காலத் தடைகளும் இன் னல்களும் ஏற்படும் என்று அஞ்ச வேண்டியதாயிற்று.

**இரண்டாவது சுவிஸ் குழு :-**

இனி இரண்டாம் முறையாக, சுவிஸ் குழுவினர் அதே ஆண்டு செப்டம்பர் மாதத்தில் எவரெஸ்டைத் தாக்கத் திட்டமிட்டனர். இக் குழுவின் தலைவர் **கேப்ரியல் சலாஸ்லி** என்பவர். இவர்களும் முன்போலவே இடையிடையே உறையுள்களைச் செய்துகொண்டு **26,575** அடி உயரம் வரை ஏறினர். அவ்விடத்திற்கு அவர்கள் செல்லும்போது அக்டோபர் மாதம் தொடங்கி விட்டது. ஆகையால் கடுமையான பருவக் காற்று அடிக்கத் தொடங்கியது. கோடைக்காலத்து பருவக் காற்றை விடக் குளிர் காலத்துப் பருவக் காற்று மிகவும் அஞ்சத் தக்கதாக இருக்கும். எனவே அதன் கொடுமையைத் தாங்காமல் குழுவினர் கீழே இறங்கி விட்டனர். சிறிது காலந் தாழ்த்துத் தாக்குதல் நிகழ்ந்ததால் குழுவினர்க்கு வெற்றி கிட்டவில்லை. "தூங்குக தூங்கிச் செயற்பால, தூங்கற்க தூங்காது செய்யும் வினை", என்னும் போர்ச் சூழ்ச்சியைப் புறக்கணித்ததன் பயன் படுதோல்வியாக முடிந்தது.

இங்ஙனம் **1952** வரை செய்யப்பெற்ற பத்துப் படையெடுப்புகளில் ஒன்றேனும் முழு வெற்றியைத் தரவில்லை. அதற்கு மாறாக இமயம் மனிதனின் ஆற்றலைக் கடுஞ் சோதனைக்குள்ளாக்கி அவனை முறியடித்து விட்டது. இப் படையெடுப்புகளின் உண்மையான பயன், வெற்றி அல்லது தோல்வியல்ல ; ஆனால் முயற்சி செய்தலும் தெரியாதவற்றைக் கண்டு பிடித்தலுமேயாகும். இதற்காகவே மனிதன் படைக்கப்பட்டான் என்று கருதுவதில் ஒரு

மேன்மையுண்டு. இங்ஙனம் நோக்கும் போது இவற்ருல் வெற்றியே கிடைத்துளது என்று கருதலாகும். எனினும் கருதிய நோக்கமும் கிட்டுமாயின் மேலும் அதிக மன நிறைவும் மகிழ்ச்சியும் உண்டாகும். இவ்வாறு மன மகிழ்ச்சியும் மன நிறைவும் தரும் முறையில் பதிஞேராம் படையெடுப்பு கருதிய வெற்றியையே தந்தது.

**தோல்வியின் விளைவு :-**

இப் பதிஞேராம் பிரிட்டிஷ் குழுவின் வெற்றிக்கு அடிகோலியவர் **1952**-ல் படையெடுத்த இரு சுவிஸ் குழுவினரேயாவர். இறுதி வெற்றி கண்ட பிரிட்டிஷ் குழுவின் தலைவர் கர்னல் ஜான் ஹண்ட் என்பவரே இதனைப் பெருந்தன்மையுடன் ஒத்துக் கொள்ளுகிருர். சுவிஸ் குழுவினரின் முயற்சிகளைப் பெரிதும் பாராட்டி அவர்களுடைய அனுபவங்களால் தாம் பெரிதும் பயனடைந்ததாகவும் அவர்களுடைய தோள்களின் மீது ஏறியே தாம் வெற்றி பெற்றதாகக் கூறவேண்டுமென்றும் அவர் பகர்கிருர். ஏனெனின் சுவிஸ் குழுவினர் பின்பற்றிய பாதையையே அவரும் பின்பற்றிஞர். அவர்கள் உறையுள்கள் அமைத்துக் கொண்ட இடங்களிலேயே இவரும் அமைத்துக் கொண்டார். அவர்கள் செய்த தவறுகளை இவர் தவிர்த்தார். அவர்களிடம் கண்ட குறைகளை இவர் தம்மிடம் ஏற்படாமல் தடுத்தார். ஆகவே அவர்களது வினையைப் பயன்படுத்தித் தம் வினையை முடித்துக்கொள்ளும் சூழ்ச்சித் திறன் இவரிடம் இருந்ததென்று நாம் உணர வேண்டும்.

---

# 7. பதிஞேராவது பிரிட்டிஷ் குழு

1953-ம் ஆண்டு மே 29-ம் நாள் எவரெஸ்டின் உச்சியை எட்டிப் பிடித்த பிரிட்டிஷ் குழு, பதிஞேராவது எவரெஸ்டு குழுவாகும். இதில் பதின்மூன்று பேர் அங்கத்தினர்களாக இருந்தனர். அவர்கள், தலைவர் கர்னல் ஜான் ஹண்ட், மேஜர் வைலீ, டாக்டர் வார்டு, டாம் போர்டில்லான், எட்மண்டு ஹில்லரி, வெஸ்ட்மாகாட், ஸடோபர்ட்ஸ், இவான்ஸ, கிரிகரி, லோவி, பாண்ட், நாய்ஸ, பக் என்போராவர். இப்படையெடுப்பிற்கு முதலில் எரிக் ஷிப்டன்தான் தலைவராக இருக்கவேண்டுமென்று ஏற்பாடாயிருந்தது. ஆனல் ஏதோ கருத்து வேற்றுமை காரணமாக அவர் விலக்கிக்கொள்ளப் பிறகு கர்னல் ஜான் ஹாண்ட் தலைவராக வந்தார்.

## தலைவரது தகுதி:

இவர் இங்கிலாந்து அரசரின் துப்பாக்கிப் படையில் ஓர் உயர் அலுவலராக இருந்தவர். இந்தியாவிலும் இவர் அவ்வலுவலில் பல ஆண்டுகளுக்கு முன்பு சில காலம் இருந்தார். இப் படையெடுப்பின் வெற்றிக்குப் பின்னர் இவருக்கு இங்கிலாந்து இராணுவத்தில் மேலும் ஓர் உயர் பதவி அளிக்கப்பட்டது. இப் படையெடுப்பின் வெற்றிக்குக் காரணம் இவரது சிறந்த தலைமையே என்பது யாவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டுளது. இவர் தமது படையெடுப்பிற்குச் செய்திருந்த சிறந்த ஆயத்தங்களைக் கண்ட பலரும் இவருக்கு வெற்றி கிடைக்கும்

என்று முதலிலேயே கருதினர். இறுதி வெற்றி பெறுவ தற்கு இவர் விரிவாகவும் திறமையாகவும் திட்டமிட் டிருந்தார். இளவேனிற் காலத்திலேயே எவரெஸ்டை மூன்று முறை தாக்கவும், தவறினல் அடுத்த இலையுதிர் காலத்தில் அதனை மீண்டும் தாக்கவும் அவர் விரிவான திட்டம் செய்திருந்தார். ஆனல் நல்வினைப் பயனுக இள வேனிற் காலத்திலேயே இரண்டாம் முறைத் தாக்குதலில் எவரெஸ்டு பிடிபட்டுவிட்டது. 'முடிவும் இடையூறும் முற்றியாங்கெய்தும் படுபயனும் பார்த்துச் செய்யும்' திறமை அவருக்குண்டு. தானைத் தலைவனுக்கு வேண்டிய தந்திர உத்தி முழுதும் அவரிடம் அமைந்திருந்தது. முதற்கண் அவர் தன் குழுவினரைத் தேர்ந்தெடுத்த திலேயே தன் அறிவு நுட்பத்தையும் திறமையையும் காட்டிவிட்டார். அவரது குழுவில், இரு நியூஜீலாந் தியரைத் தவிர ஏனைய பதினெருவரும் பிரிடிஷ் தரைப் படையைச் சேர்ந்த வீரர்கள். அவர்களுள் அநேகருக்கு மலையேற்றத்தில் சிறந்த தேர்ச்சியுண்டு. இருவர் தவிர ஏனையோர் இமயத்தில் மீது ஏறிப் பழகியவர்கள். அத் தகைய சிறந்த வீரர்களைத் தேர்ந்தெடுத்து அவர் புறப் பட்டார். "தெரிந்த இனத்தோடு தேர்ந்தெண்ணிச் செய் வார்க்கு அரும்பொருள் யாதொன்றுமில்", என்பது வள்ளுவர் வாய்மொழியன்றே? **1922**-ல் எவரெஸ்டு மீது படையெடுத்த பிரிட்டிஷ் குழுவில் ஒருவராகிய டாக்டர் **பின்ச்** என்பவர் கர்னல் ஹண்டைப்பற்றிக் கூறுகையில், அவருக்கு அதிக மன வுறுதியும் அளவிலா ஆற்றலும் வியக் கத் தகுந்த அமைப்புத் திறனும் இருப்பதாகக் குறிப்பிடு கிருர். இத்தகைய வினைத் திட்பம் உடையவர் தம் பெரு மைக்கேற்ற வெற்றியே பெற்ருர்.

**எட்மண்டு ஹில்லரி :-**

இக் குழுவின் ஒரு உறுப்பினராகிய எட்மண்டு ஹில் லரி நியூஜிலாந்தைச் சேர்ந்தவர். அவர் 1919-ல் ஆக் லண்டு என்னுமிடத்தில் பிறந்தார். இருபது வயது இளைஞ ராயிருக்கும்போதே அவர் தம் தாயாரிடம் தாம் என் றேனும் ஒரு நாள் எவரெஸ்டுமீது ஏறப்போவதாகக் கூறியிருந்தார். அதையே அவர் தமது வாழ்க்கையின் மிக வுயர்ந்த குறிக் கோளாகக் கொண்டிருந்தார். அவர் தேனீ வளர்க்கும் தொழிலைச் செய்து வந்தார். ஆயினும் மலையேற்றத்தில் ஆரா விருப்புக் கொண்டு அதில் சிறந்த பயிற்சியும் பெற்றார். 1950 முதல் 1953 வரை நான்கு முறை அவர் இமயத்தின் மீது படையெடுத்த குழு வினருடன் சேர்ந்து சென்றார். இரண்டாவது உலகப் பெரும்போர் நிகழ்ந்த காலத்தில் அவர் தம் நாட்டில் மன் னரது விமானப் படையில் சேர்ந்து, இடையிடையே பொழுது போக்கிற்காக **கைகூரா** மலைமீது ஏறுவார். அதற்காகப் பனிக் கோடரியொன்றை இரவல் பெற்று, குக் ஜல சந்தியைக் கடந்து, அம்மலைக்கு அடிக்கடி செல் வார். கைகூராவும் இமயம் போன்றே பனியால் மூடப் பட்டது; ஆனால் அவ்வளவு பெரிய சிகரங்களைக் கொண்ட தல்ல. 1945-ல் அவர் விமானப் படையை விட்டு விலகிய பின்னர் மலையேற்றத்தையே தம் தனிப் பொழுதுபோக் காகக் கொண்டார். 1951-ல் எவரெஸ்டுக்குப் புதுப் பாதை காணச் சென்ற எரிக் ஷிப்டன் குழுவில் அவர் கலந்து கொண்டார். 1952-ல் ஆண்டில் இமயக் குழு விலும் சேர்ந்து, **லோவி** என்னும் தம் நாட்டுத் தோழ ருடன் எவரெஸ்டுப் பகுதியை நன்கு விரிவுற ஆராய்ந்

தார். ஹில்லரி, தன் துணைவர்களுடன் அடிவாரத்திலுள்ள முதற் பாசறையிலிருந்து மேலைப் பள்ளத்தாக்கிலுள்ள இரண்டாம் பாசறைக்கு ஒரு குறுக்கு வழி கண்டார். இதன் மூலமாகத்தான் **1953**-ம் ஆண்டு சென்ற பிரிடிஷ் குழுவினருக்கு இன்றியமையாத தேவைப் பொருள்கள் எல்லாம் எடுத்துச் செல்லப்பட்டன. இதற்காக ஜான் ஹண்ட் ஹில்லரியைப் பாராட்டினர். ஹில்லரி, எவரெஸ்டு மீது ஏறும் எந்தக் குழுவிலும் தான் கலந்து கொள்ள வேண்டுமென்று தன் பெற்ருேர்களிடம் விருப்பத்தைத் தெரிவித்திருந்தார். அவர்களும் அதற்கிணங்கினர். அவர் அதிகமாக தேன் பருகிவந்த காரணத்தாலேயே சிறப்பான மலையேற்றத் திறமை பெற்றிருந்தார் என்று கூறப்படுகிறது. பனிப் புயல்களையும் உறைபனி, பனி, முதலியவற்றையும் எதிர்த்துத் தாங்கும் வன்மை அவருக்கு இதனாலேயே உண்டாயிற்று என்று ஒருவர் கருதினர். **1953**-ல் எவரெஸ்டு மீது ஏறச் சென்ற குழுவினரில் இவரும் ஷெர்ப்பா தென்சிங்குமே இரண்டாம் முறையாக அக்கொடு முடியைத் தாக்கத் தலைவரால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதிலிருந்து இவரது திறமை தலைவருக்கு நன்கு தெரிந்திருந்தது என்று நாம் அறியலாம். ஹில்லரியும் எவரெஸ்டு உச்சியைத் தொட்டுத் தன் திறமையை நிலை நாட்டினர். இதனால் அவர் உலக மகா வீரராக விளங்கினர்.

**போர்டிலான், இவான்ஸ்** ஆகிய இருவரும் எவரெஸ்டைத் தாக்கும் முதல் குழுவினராகத் தலைவரால் தேர்ந்தெடுக்கப்பட்டனர். எவரெஸ்டுப் பகுதியை யடைந்த

வுடன் பருவ நிலை வாய்க்கும்போது அதன் உச்சி மீது ஏற இவ்விருவரை முதலில் அனுப்ப அவர் திட்டமிட்டார்; இவர்கள் தவறிவிட்டால், இரண்டாம் முறையாக தென் சிங்கையும் ஹில்லரியையும் அனுப்பத் திட்டமிட்டிருந்தார். இரண்டாம் தாக்குதலில் தான் அநேகமாக வெற்றி கிட்டும் என்று தலைவர் எதிர் பார்த்தார். அவ்வண்ணமே தான் நிகழ்ந்தது. தென் சிங்கின் மலையேற்றத் திறமையைத் தலைவர் நன்கு அறிந்திருந்ததற்கு இது ஒரு சான்றும். 'இதனை யிதனாலிவன் முடிக்கு மென்றாய்ந்து, அதனை யவன் கண் விடல்' என்றவாறு தெரிந்து வினையாளும் தகுதி பெற்றிருந்த தலைவர், தென்சிங்கை வெற்றிக்கு உறுதுணையாக நம்பியிருந்ததில் வியப்பொன்றுமில்லை. தென் சிங்கும் அவர் கருதிய வெற்றியைப் பெற்றுத் தந்தார். இதனால் உலகம் அவரை உச்சிமேல் வைத்துக் கொண்டாடியது.

உறுப்பினர் பொறுப்பு :-

இப் பதினோராவது படையெடுப்பிற்கு வைலீ என்பவர் அமைப்புச் செயலாளராகவும், ஸ்டோபர்ட்டு புகைப் படக்காரராகவும் நியமிக்கப் பெற்றனர். பக் என்பார் ஒரு சிறந்த உடற் கூறு வல்லுநர். மலையேறும் போது உடலில் உண்டாகும் குறைகளை யறிந்து தவிர்க்க அவருடைய உதவி வேண்டியதாயிருந்தது. இக் குழுவிலிருந்த மற்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையான பொறுப்பு அளிக்கப்பட்டிருந்தது. பண்டங்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் புகை வண்டியிலும் தலைச் சுமையாகவும் எடுத்துச் செல்லும் பொறுப்பு சிலரிடம் ஒப்

படைக்கப்பட்டிருந்தது. மலை மீது ஏறும்போது தலைச் சுமைகளை ஷெர்ப்பாக்கள் எடுத்து வர, இக் குழுவினரில் மற்றும் சிலர் தக்க இடங்களில் கூடாரங்களை யமைத்து அவற்றை அங்குச் சேமித்துப் பாதுகாத்து வைக்கும் பொறுப்புப் பெற்றனர். இன்னும் சிலர் சுமை தூக்கும் ஷெர்ப்பாக் கூட்டத்தினருக்குத் தலைவர்களாக இருந்த னர். இங்ஙனம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு பொறுப்பேற் றுப் படையெடுப்பு வெற்றியடைய விரிவாகவும் நுணுக்க மாகவும் திட்டமிடப்பட்டிருந்தது.

**குழுவினர் வருகை :-**

1953-ம் ஆண்டு பிப்ரவரி 28-ம் நாள் இக் குழுவின் தலைவரும் போர்டில்லானும் நீங்கலாக ஏனையோர் இங்கி லாந்திலிருந்து விமான மூலம் பம்பாய்க்கு வந்துற்றனர். தலைவர் கர்னல் ஹண்டும் போர்டில்லானும் மற்றொரு வரும் மார்ச்சு 2-ம் தேதி டில்லியில் வந்திறங்கினர். இவான்சும் கிரிகரியும் அடங்கிய இக் குழுவின் தூசிப் படை மார்ச்சுத் தொடக்கத்தில் காட்மாண்டுவை யடைந்து முன்னேற்பாடுகளைச் செய்யத் தொடங்கியது. அனைவரும் நேபாளத்தின் தலை நகராகிய காட்மாண்டுவி லிருந்து மார்ச்சு 10-ம் தேதி புறப்படத் திட்டமிட்டிருந் தனர் ; மே மாத நடுவில் எவரெஸ்டை நோக்கிப் படை யெடுப்பதென்றும் ஏற்பாடு செய்திருந்தனர்.

**திட்டம் தயாரிப்பு :**

ஏற்கனவே வழியின் இயல்பு, இடையில் உள்ள இன் னல்கள், பருவ நிலை, அதன் மாறுபாடுகள், ஆகிய யாவை யும் அவர்கள் நன்கு அறிந்திருந்ததால், அவற்றிற்கேற்பப்

பிரயாணத் திட்டம், தக்க காலம், இறுதித் தாக்குதல் முதலியவற்றைத் தலைவர் வகுத்து வைத்திருந்தார். பெரும்பாலும் அவர் செய்திருந்த ஏற்பாட்டின்படியே நிகழ்ச்சிகள் நடந்து எதிர்பார்த்த காலத்திற்குள் வெற்றியும் கிட்டியது. இம் முறை எப்படியும் வெற்றி கிடைக்கும் என்று தலைவர் உறுதியாக நம்பினர். தம் நம்பிக்கையைப் பத்திரிகை நிருபர்களிடமும் அவர் முன்னதாகவே அறிவித்திருந்தார். இது அவரது வினைத் திட்பத்திற்குச் சிறந்த சான்ருகும்.

"எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டா துலகு."

# 8. இறுதிப் படையெடுப்பு

பதினோராவது படையெடுப்புக் குழுவினர் தங்களுடன் மிகச் சிறந்த சாதனங்களை எடுத்துச் சென்றனர். முன் படையெடுப்புகளில் எடுத்துச் செல்லப்பட்ட சாதனங்களை விட இப் படையெடுப்பில் இவர்கள் எடுத்துச் சென்றவை பலவகைகளிலும் சிறந்தவையாகும். புதுவகையான முட்கள் பதித்த பெரிய தொடுதோல்கள் (boots), காற்றுப் புகாத அழுத்தமேற்றப்பட்ட (pressurised) ஆடைகள், இரு வகையான (ஆக்ஸிஜன்) உயிர்ப்புக் கருவிகள், காற்றடைக்கும் மெத்தைகள், மண்ணெண்ணெய் அடுப்புகள், சமையற் கருவிகள், முதலிய பல பொருள்கள் அவர்களால் எடுத்துச் செல்லப்பட்டன. இவை அவர்களது வெற்றிக்குப் பெருந் துணையாய் இருந்தன.

புறப்பாடு :

காட்மாண்டுவிலிருந்து அனைவரும் மார்ச்சு மாதம் 10-ம் நாள் புறப்பட ஏற்பாடாகி இருந்தது. அதற்குள் இவான்சும் கிரிகரியும் அடங்கிய தூசிப் படை அங்கு வந்து வேண்டியதெல்லாம் செய்து முடித்தது. எவரெஸ்டு மீது ஏறுவதற்கு நேபாள அரசரின் இணக்கமும் பெறப்பட்டது. டார்ஜீலிங்கிலிருந்த இமயக் கழகத்தினரால் அனுப்பப் பெற்ற தென்சிங் நார்க்கேயும் மற்ற ஷெர்ப்பாக்களும் உரிய காலத்தில் அங்கு வந்துற்றனர். சில ஷெர்ப்பாக்கள் சோலோகும்புவிலிருந்து வந்தனர். அவர்களுடன் அவர்களுடைய பெண்டிர் சிலரும் சுமை தூக்குவதற்

V8:9 H54

காக வந்திருந்தனர். மார்ச்சு முதல் வாரத்திற்குள் குழுவைச் சேர்ந்த சிலர் சுமார் 700 மணங்கு எடையுள்ள பொருள்களைக் காட்மாண்டுவிற்குக் கொண்டுவந்து சேர்த்தனர். அவற்றை எடுத்துச் செல்வது மிகக் கடினமாயிருந்தது. பிறகு பாகான் என்னுமிடத்திலிருந்த நேபாள இராணுவத் தளத்தில் குழுவினர் ஒன்ருகக் கூடினர். அங்கு இச் சுமைகளை சிறு சிறு பொதிகளாகக் கட்டி மேலே ஏற்றிச் செல்ல ஏற்பாடு செய்யப்பட்டது. அவற்றைத் தூக்கிச் செல்லுதற்கு வந்திருந்த ஷெர்ப்பா கூலிகளும் இரண்டு படைகளாக வகுக்கப்பட்டனர். தென்சிங்கு முதல் படையுடன் அவ்விடமிருந்து மார்ச்சு இரண்டாம் வாரத்தில் புறப்பட்டுச் சென்ருர். அடுத்து இரண்டாம் படையும் புறப்பட்டுவிட்டது. அனைவரும் காட்மாண்டுவிலிருந்து 170 மைல் நடந்து நாம்சி பஜார் என்னும் இடத்தைப் பதினைந்து நாட்களில் சென்றடைந்தார்கள். அவர்களுடன் வந்திருந்த ஷெர்ப்பா பெண் கூலிகள் அங்கேயே தங்கிவிட, மற்றவர் யாவரும் தியாங் பூச்சி என்னுமிடத்திற்குச் சென்று அங்கு முதல் பாசறையை அமைத்துக் கொண்டார்கள்.

78243

முதற் படை வீடு :-


மலை அடிவாரத்தில் அமைக்கப்பட்ட இம் முதற் பாசறையில் அவர்கள் சில நாட்கள் தங்கி ஆக்ஸிஜன் உயிர்ப்புக் கருவிகளைக் கையாளுவதிலும் மலையேற்றத்திலும் பயிற்சி பெற்ருர்கள். இதனால் அவர்கள் தம்மை அவ்விடத்திய சூழ் நிலைக்குத் தகுதியாக்கிக் கொண்டது மட்டுமின்றி உயரச் செல்வதற்கும் திறமை பெற்ருர்கள். அவணின்றும் புறப்பட்டு 21150 அடி உயரத்தில் உள்ள

நான்காம் பாசறையை அடைவதற்கு அவர்களுக்கு ஒன்றரை மாதம் ஆயிற்று. இப் பாசறைதான் மேலைப் பள்ளத் தாக்கில் அமைக்கப்பட்ட முதற் பாசறை. அதனையே அவர்களது முதற் படை வீடு என்னலாம். அது அப்பள்ளத்தாக்கின் தொடக்கத்தில் இருந்தது. அங்கிருந்துதான் அவர்கள் எவரெஸ்டைத் தாக்குவதற்கு எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொண்டார்கள். அந்த இடமே மேலைப் பள்ளத்தாக்கில் மிகப் பாதுகாவலான இடம். அதற்கு மேல் சென்றால் பருவக் காற்றுகளினால் திடீரென்று தீங்குகள் நேரும். ஆகையால் அவ்விடத்திலிருந்த வண்ணம் அவர்கள் தாக்குதலுக்குப் பருவ நிலை முதலியவற்றைப் பார்த்துத் திட்டமிட்டு வேண்டுவன செய்தனர்.

வழியமைப்பு :-

முதற் படை வீட்டிலிருந்து மேல் நோக்கிச் செல்ல முதலில் வழி யமைக்க வேண்டியிருந்தது. லோட்சே பனியாற்றைத் தொடர்ந்து போய், மிகச் சரிவான பகுதிகளில் அரிதில் முயன்று அவர்கள் வழி அமைத்தார்கள். அச் சரிவுகளில் படிந்துள்ள கடினமான பாறையில் கோடரியால் வெட்டிப் படிகள் செய்யப்பட்டன. சில சரிவுகளில் கயிறுகள் கட்டித் தொங்க விடப்பட்டன. இங்ஙனம் மிகவும் துன்பப்பட்டு மேலே சென்று 22630 அடி உயரத்தில் ஐந்தாம் பாசறை அமைக்கப்பட்டது. பின்னர் எவரெஸ்டின் தென் தோள் பட்டை போன்ற பகுதியின் தொடக்கத்தில், 25840 அடி உயரத்தில் ஆறும் பாசறை அமைக்கப்பட்டது. அவ்விடத்தையடைவதற்கு லோட்சே சிகரத்தின் அடிவாரத்திலிருந்து சுமார் முக்கால் மைல் தூரம் பல செங்குத்தான சரிவுகளில் செல்ல

வேண்டியிருந்தது. இப் பகுதியில் வழி அமைப்பது மிகக் கடினமாக இருந்தது. குறித்த நாளுக்குள் வழி செய்து முடிக்க இயலவில்லை. எப்படியோ பல துன்பங்களை வென்று இறுதியில் தென் தோள் பட்டையில் 27550 அடி உயரத்தில் ஏழாம் பாசறையும் நிறுவப்பட்டுவிட்டது.




எவரெஸ்டுக்குச் சென்ற வழி

**தென் தோள்பட்டை :-**

இதற்குள் அவர்கள் எவரெஸ்டு தாக்குதலுக்கு இட்டிருந்த திட்டம் சிறிது காலங் கடந்துவிட்டது. எனினும் அப்பொழுது பனியற்ற நல்ல பருவ நிலையும் வேகம் குறைந்த காற்றும் ஊக்கமூட்டுவனவாய் இருந்தன. இனியும் தாமதித்தால் இறைவன் அளித்த வாய்ப்பைத் தவற விட்டதுபோலாகும். "எய்தற் கரியது இயைந்தக்கால் அந்நிலையே செய்தற்கரிய செயல்", என்பதற்கு ஏற்பக் குழுவினர் தென் தோள் பட்டையின் மீது அமைக்கப் பட்ட ஏழாம் பாசறைக்கு எல்லாப் பொருள்களையும் காலம் தாழ்க்காமல் கொண்டு செல்ல முயற்சி செய்தார்கள். வழியில் இடையிடையே அமைக்கப்பட்ட பாசறைகளில் குழுவினர்க்கு வேண்டிய பொருள்கள் சேமித்து வைக்கப்பட்டிருந்தபடியால், இப்பொழுது அவர்கள் மிக இன்றியமையாத பொருள்களையே எடுத்துச் சென்றார்கள். அவற்றை எடுத்துச் செல்வதும் அதிக துன்பமாகவே இருந்தது. குழுவினர் அதனையும் உரிய காலத்தில் செய்து முடித்தார்கள். பின்னர் நாய்லூம் அன்னுல்லு என்னும் ஷெர்ப்பாவும் ஏழாம் பாசறைக்கு மேல் வழி காணச் சென்றார்கள். தென் தோள் பட்டைமீது தொலை தூரம் அவர்கள் சென்று படிகளை வெட்டியும் கயிறுகளைக் கட்டித் தொங்கவிட்டும் திரும்பி வந்தார்கள். அடுத்து, குழுவினர் தம் கூடாரங்கள், உயிர்வளிக் கலன்கள், சமையற் கருவிகள் முதலியவற்றுடன் தென் தோள் பட்டையின் உச்சிக்குச் செல்ல வேண்டும். தென் சிங்கும் ஹில்லரியுமே இப்பொருள்களை மேலே ஏற்றிச் செல்லும் பொறுப்பைப் பெற்றனர். அவர்கள் மே 22-ம் நாள் காலை

ஏழாம் பாசறையை விட்டு நீங்கிச் சில ஷெர்ப்பாக் கூலிக ளின் உதவியால் சுமைகளை மேலே கொண்டு சென்றார் கள். அன்று மாலையே அவர்கள் தென் தோள் பட்டை யின் முனையில் மற்றொரு உறையுளை அமைத்து அதில் பொதிகளை வைத்து விட்டு, இரவு ஐந்தாம் பாசறைக்குத் திரும்பி விட்டார்கள்.

# 9. தென் சிகரத்தை அடைதல்

மே 23-ம் நாள் காலே யாவரும் ஐந்தாம் பாசறையை விட்டு ஏழாம் பாசறையை நோக்கிப் புறப்பட்டு மாலே அவ்விடத்தை அடைந்தார்கள். அன்றிரவை அவர்கள் கடுங் குளிராலும் காற்ருலும் துன்புற்று அவ்வேழாம் பாசறையில் கழித்துவிட்டு, மறுநாட் காலே, தென் சிகரத்தை நோக்கிச் சென்ருர்கள். ஏழாம் பாசறையை விட்டவுடனேயே அவர்கள் ஒரு பெரிய சரிவைக் கடக்க வேண்டியிருந்தது. அச் சரிவின் மீது ஏற்கனவே இரு கயிறுகள் கட்டப்பட்டிருந்ததால் அவற்றைப் பிடித்துக் கொண்டு குழுவினர் மெதுவாக மேலே ஏறினர்கள். பல சரிவுகளேயும் பள்ளங்களேயும் அங்ஙனமே கடந்து மிகவும் களேத்துப் போய்த் தட்டித் தடுமாறி யாவரும் அன்று மாலே எப்படியோ **எபரான் டி ஜெனிவாய்** என்னும் சரிவின் உச்சியை அடைந்துவிட்டார்கள். அங்கிருந்து அவர்கள் முதல் முதலாக எவரெஸ்டின் எழில் மிகுந்த கோபுர அமைப்புள்ள முழுத் தோற்றத்தையும் கண்டு களித்தார்கள். அதனடியில் மற்ருெரு கொடுமுடி தெரிந்தது. அதுவே **தென் முனே** அல்லது தென் சிகரம் எனப் படுவது. அதுவும் பன்னூறு அடி உயரமுள்ள பனிமூடிய கொடு முடி. அதனேயே இறுதித் தளமாகக் கொண்டு எவரெஸ்டு உச்சியை அடையத் திட்டமிடப்பட்டிருந்தது. அதையடைவதற்குத் தான் குழுவினர் இப்பொழுது முனேந்து கொண்டிருந்தார்கள். எபரான் டி ஜெனிவாய்

சரிவின் உச்சியிலிருந்து காணும்போது எவரெஸ்டும் தென் முனையும் தெவிட்டாத இன்பத்தைத் தந்தன. சுற்றிலும் எங்குப் பார்த்தாலும் ஒரே நீல நிறமான பனி படர்ந்திருந்தது. பசுமையான தாவரங்களே அங்குச் சிறிதும் இல்லை. மேடு பள்ளங்கள் நிறைந்த ஒரே பனிப்பாலையாக அவ்விடம் காட்சியளித்தது.

எட்டாம் பாசறை :-

பிறகு அவர்கள் தாங்கள் இருந்த சரிவிலிருந்து கீழ் நோக்கி இறங்கித் தென் முனையை அடைய வேண்டியிருந்தது. இறங்கும்போது கீழே ஓரிடத்தில் ஒரு கூடாரத்தின் கந்தல்கள் கூம்புகளிலிருந்து காற்றில் பறந்துகொண்டிருந்தன. அவ்விடத்தில் தான் சரியாக ஓராண்டுக்கு முன் சென்ற சுவிஸ் குழுவினர் கூடாரம் அமைத்திருந்தார்கள். அதன் சிதைவுகளைத் தான் அவர்கள் இப்பொழுது கண்டார்கள். அவ்விடத்தில் ஒரு பெருங்காற்று வீசி அவர்களை அளவற்ற அல்லலுக்குட்படுத்தியது. அதனுடன் போராடி மேலே சென்று இறுதியில் தென் தோள் பட்டையின் உச்சிக்கு வந்து சேர்ந்தார்கள். அதற்குள் இரவு வந்து விட்டது. ஆகவே அவ்விடமே அவர்கள் ஒரு கூடாரம் அமைத்துக்கொண்டு இரவு அங்குத் தங்கி இளைப்பாறினார்கள். அப்பொழுது அவர்கள் இறுதித் தாக்குதலுக்கு வேண்டிய ஆயத்தங்களைச் செய்துகொண்டனர். குறிப்பாக ஆக்ஸிஜன் கருவிகளையே அவர்கள் பழுது பார்த்துக்கொண்டிருந்தார்கள். மே 27-ம் நாள் காலை, முதல் தாக்குதல் படையினராகிய இவான்சும் போர்டில்லானும் வைகறையில் துயிலெழுந்து அவ் வெட்டாம் பாசறையை விட்டு நீங்கி மேலே சென்றார்கள்.

**முதல் தாக்குதல் :-**

இருவரும் தென் முனையைக் குறிவைத்து வேகமாகச் சென்றார்கள். ஒரு சமயம் பனியில் படிகளை வெட்டிக் கொண்டும் மற்றொரு சமயம் காற்செருப்பு முட்களால் பனியில் அழுத்தி மிதித்துக்கொண்டும் அவ்விருவரும் மாறி மாறி ஒருவர் பின்னும் மற்றொருவர் முன்னுமாக ஏறினார்கள். மிகவும் துன்பத்திற்குள்ளாகி இறுதியில் **28740** அடி உயரமுள்ள தென் முனையை அடைந்து விட்டார்கள். அவர்கள் அங்குச் சிறிது நேரம் தங்கி எவரெஸ்டு உச்சியையடைய முயன்றார்கள். அவர்களது ஆக்ஸிஜன் கருவிகள் மீண்டும் இடர்ப்பாடு செய்தன. கால நிலையும் வழியின் இயல்பும் துன்பம் தருவனவாயிருந்தன. எதிரில் இருந்த ஒரு பெரிய சரிவு அவர்கள் மனதில் அச்சத்தையும் திகைப்பையும் மூட்டிவிட்டது. அதைக் கடக்க அப்பொழுதிருந்த நிலையில் அவர்களுக்குத் துணிவு பிறக்கவில்லை. மேலே சென்றால் பெரும் ஆபத்துக்குள்ளாக வேண்டியிருக்கும். ஆகவே அவர்கள் எவரெஸ்டைத் தாக்கும் முயற்சியைக் கைவிட்டனர். அவர்கள் தென் தோள்பட்டையிலிருந்து தென் முனைக்குச் சென்றதே ஒரு பெரும் செயலாகும். தம் எதிரில் பெருந் தடையாக இருந்த அச் சரிவை அவர்கள், மிக அனுகூலமான கால நிலையிருந்தால் கடக்க முடியும் என்று மட்டும் உறுதியாக நம்பினார்கள். ஏழாம் பாசறைக்குத் திரும்பி வந்து அவர்கள் இச் செய்தியைக் குழுவினருக்கு அறிவித்தார்கள். இவ்வாறு எவரெஸ்டைத் தாக்குவதற்கு இவான்சும் போர்டில்லானும் செய்த முதல் முயற்சி தோற்றுவிட்டது. எனினும் அத்தோல்வியே இரண்டாம்

தாக்குதல் படையினராகிய தென்சிங்குக்கும் ஹில்லரிக்கும் ஊக்கமளித்தது.

பிறகு 29-ம் நாள் நடக்க விருந்த இரண்டாம் தாக்குதலுக்கு ஆவன செய்யப்பெற்றன. மே 28-ம் நாள் காலை 7 மணிக்குத் தென்சிங்கும் ஹில்லரியும் சில துணைவர்களுடன் ஏழாம் பாசறையை விட்டுத் தென் கிழக்குச் சரிவின் மீது எட்டாம் பாசறையமைக்கப் புறப்பட்டனர். முதுகெலும்பை முறிக்கக்கூடிய மிகச் செங்குத்தான அச்சரிவின் மீது அவர்கள் ஏறிப் பாசறை அமைக்கத் தகுந்த இடத்தைத் தேடினார்கள். எங்கும் பனி மூடியிருந்ததால் சரியான இடம் கிடைப்பது அரிதாயிருந்தது. இறுதியில் ஓராண்டிற்கு முன் லாம்பெர்ட்டு என்பவர் கூடாரமடித்திருந்த இடத்திற்குக் கீழ் தென்சிங்கு எட்டாம் பாசறைக்கு இடம் தேர்ந்தெடுத்தார். அங்குக் கூடாரம் அடித்து அவர்கள் பண்டங்களையெல்லாம் பத்திரப் படுத்தி வைத்தார்கள். பிறகு அவர்களுடன் வந்திருந்தவர்கள் எல்லாரும் ஏழாம் பாசறைக்குத் திரும்பி விட்டார்கள். தென்சிங்கும் ஹில்லரியும் மட்டும் அக் கூடாரத்தில் இரவைக் கழித்தார்கள். மறு நாட் காலை இறுதித் தாக்குதலுக்குப் புறப்பட அவர்கள் தயாராக இருந்தார்கள்.

# 10. இறுதி வெற்றி

**இறுதித் தாக்குதல் :-**

மே 29-ம் நாள் தென் சிங்கும் ஹில்லரியும் காலே 4-30 மணிக்குத் தம் கூடாரத்தினின்றும் வெளியே ஊர்ந்து வந்து எட்டிப் பார்த்தனர். எங்கும் ஒரே அமைதி நிலவி யிருந்தது. அங்கிருந்து கீழே பார்க்க, தியாங் பூச்சி மடமும் கூட மிகத் தெளிவாகக் காணப்பட்டது. வானம் அவ்வளவு தெளிவாக இருந்தது. இறைவனே அவர்களுக்கு வெற்றி தரக் காத்துக்கொண்டிருந்தது போல் தெரிந்தது. இயற்கையும் இன் முகத்துடன் புன் முறுவல் பூத்து அவர்களே எவரெஸ்டு உச்சிக்கு வரவேற்பது போல் இருந்தது. அவ்விடத்தில் அன்றிரவு வெப்ப நிலேயும் மிகக் குறைவாக இன்றி 27°C. அளவு இருந்தது. இரவு அவர்களுக்கு நல்ல உறக்கமும் கண்டது. உறக்கம் கொள்வதற்கு அவர்கள் சிறிது உயிர்வளியையும் உணவு வகைகளேயும் உட்கொண்டனர். காலே 4 மணிக்கே எழுந்து அடுப்பில் தம் உடம்பை வேது செய்துகொண்டு தாக்குதலுக்குத் தம்மைத் தகுதிப் படுத்திக் கொண்டனர். இவ்வாருக இயற்கையும் செயற்கையும் அளித்த பல நலங்களே அவர்கள் துய்த்து 6-30 மணிக்கு மிக மன உறுதியுடனும் மகிழ்ச்சியுடனும் தம் கூடாரத்தினின்று புறப்பட்டார்கள். இருவருடைய முதுகிலும் உயிர்வளிக் கலன்கள் முடுக்கப்பெற்றிருந்தன. அவற்றினின்றும் உயிர்வளியை மூக்கினல் சில முறைகள் ஈர்த்த பின்னர் அவர்களுக்கு மேலே ஏற ஊக்கமும் வலிவும் உண்டாயின.

இருவரும் சிறிது தூரம் சென்றவுடன் ஒரு பனி மூடிய சரிவு குறுக்கிட்டது. அது குறுகலாகவும் கடத்தற் கரிதாகவும் இருந்தது. அதன் மீது ஏறும்போது பன் முறை பனி சரிந்து இருவருடைய கால்களையும் வழுக்கச் செய்து, மனவுறுதியையும் குலையுமாறு செய்தது. இருப் பினும் மனம் தளராமல் இயன்றவிடங்களிலெல்லாம் கால் களை நன்கு ஊன்றி அதன் மீது அவர்கள் ஏறி விட்டார் கள். தென் சிகரத்தின் உச்சிக்குச் செல்ல அவர்கள் இதைப் போன்ற இன்னும் பல சரிவுகளைக் கடக்க வேண்டி யிருந்தது. விடாப் பிடியாக அவற்றின் மீதெல்லாம் வழி செய்துகொண்டு உறுதியாகக் கால்களையும் ஊன்றிக் கொண்டு இறுதியாகத் தென் சிகரத்தை இருவரும் அடைந்து விட்டார்கள். அப்பொழுது காலை 9 மணி இருக் கும்.

**கன்னிச் சரிவு :-**

பிறகு எவரெஸ்டை அடைவதற்கு இருவரும் சிறிது தூரம் நடந்தார்கள். வழியில் ஓர் பெரும் சரிவு அவர்க ளுடைய பார்வையை மறைத்துக் குறுக்கே நின்றது. அதற்குக் கன்னிச் சரிவு என்று பெயர். அதைத்தான் முதல் தாக்குதல் படையினராகிய இவான்சும் போர்டில் லானும் கண்டு மலைத்துப் போய்த் திரும்பி வந்துவிட்ட னர் என்று முன்பே கண்டோம். அதிலிருந்து பல பனிப் பாறைகள் நீட்டிக் கொண்டிருந்தன. அவற்றின் மீது பனி மூடியிருந்தது. எனினும் அச் சரிவில் படிகளை வெட்டிக் கொண்டு ஏற முடியும் என்று தென்சிங்கும் ஹில்லரியும் உறுதியாக நம்பினார்கள். அவ்வாறே அதில் ஒரு முறை

கோடரியால் வெட்டியவுடன் ஆழ்ந்த குழி உண்டாயிற்று. அதில் காலை ஊன்றி நடப்பது எளிதாயிருந்தது. இவ்வாறே இருவரும் மாறி மாறிப் படிகளை வெட்டிக் கொண்டு முன்னேறினர்கள். ஒருவர் முதலில் சிறிது தூரம் படிகளை வெட்டிக்கொண்டு செல்ல, மற்றவர் பின்னலிருந்து அவர் விழுந்து விடாமலிருக்க அவரது இடுப்பில் கயிற்றைக் கட்டி அதனைச் சிறிது சிறிதாகத் தளர்த்தி விட்டுக் கொண்டிருப்பார். பிறகு முன் சென்றவர் பின்னிருப்பவரை மேலே இழுக்கத் தன் கோடரியினைக் கீழே அறைந்து அதில் கயிற்றைச் சுற்றுவார். பின்னிருப்பவர் அக் கயிற்றைப் பிடித்துக் கொண்டு மேலே ஏறுவார். செங்குத்தான சரிவுகள் மீது பனிப் பாறைகள் நீட்டிக் கொண்டுள்ள இடங்களில் இருவரும் அச் சரிவுகளின் உச்சி வரை செங்குத்தாக ஊர்ந்து சென்று, பிறகு பனியின் மீது கையை இறுக ஊன்றிப் பிடிப்பதற்கு இடுக்குகள் செய்து கொண்டு அவற்றைக் கடந்து விட்டனர். இங்ஙனம் பல துன்பம் நிறைந்த சரிவுகளையெல்லாம் அவர்கள் தாண்டிச் சென்று கொண்டிருக்கையில் அவ்விருவருடைய ஆக்ஸிஜன் கருவிகளும், உயிர்ப்பதற்கு உதவாமல் அடிக்கடி சீர் குலைந்து விட்டன. ஆதலால் அவர்கள் இடையிடையே தம் ஆக்ஸிஜன் கருவிகளையும் பழுது பார்த்துக் கொண்டே மேலே ஏறிச் சென்றார்கள்.

**கடைசிக் கட்டம் :-**

ஒரு மணி நேரம் இவ்வாறு துன்புற்று ஏறிய பின்னர் மிக உயரமுள்ள மற்றொரு செங்குத்தான பாறை

குறுக்கிட்டது. இயற்கை அவர்களது பொறுமையையும் திறமையையும் சோதிப்பதற்கென்றே இதனைக் குறுக்கே கொண்டு வந்து வைத்தது போல இருந்தது. ஆகவே இதன் மீது ஏறுவதைப் பொறுத்தே இறுதி வெற்றி அல்லது தோல்வி இருந்தது என்று கூறலாம். அதிர்ஷ்டவசமாக அச் சரிவின் நடுவில் ஓர் பெரும் பிளவு இருந்தது. அவர்கள் அப் பிளவில் காலடியைச் செலுத்திச் செலுத்தி மேலே இவர்ந்து சென்று பாறையின் உச்சிவரை ஏறிவிட்டார்கள். "*மடுத்த வாயெல்லாம் பகடன்னான் உற்ற இடுக்கண் இடர்ப்பாடுடைத்து*" என்பது மெய்த்தது.

**எவரெஸ்டு உச்சியில் :-**

மறுபடியும் பல சரிவுகள்; செங்குத்துப் பாறைகள்; பனிக் கூரைகள்; எவரெஸ்டு உச்சி எங்கிருக்கிறது என்றே தெரியவில்லை. ஒரு சரிவைக் கடந்தவுடன் மற்றொன்று எதிர்பாராமல் முன்னிற்கும். அவற்றையெல்லாம் கடக்க முன்போலவே சில இடங்களில் படிகளை வெட்டினார்கள்; மற்றும் சில இடங்களில் படிகளை வெட்டாமல் கால்களால் ஊன்றியே நடந்தார்கள். கடைசியாக ஒரு சரிவில் அவர்கள் கீழே இறங்கும்போது மேலே ஒரு குறுகிய சரிவு எவரெஸ்டு உச்சிவரை நீண்டிருந்ததை அவர்கள் கண்டார்கள். அதைக் கண்டவுடன் அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவும் உண்டோ? அதன் மீது அவர்கள் மிக விரைவாகப் படிகளை வெட்டிக்கொண்டே சென்று எவரெஸ்டின் உச்சியை அடைந்துவிட்டார்கள். அப்பொழுது மணி சரியாக 11-30. கருதிய கருமம் கை

கூடியது குறித்து அவர்கள் அடைந்த களிப்பை விளக்கிக் கூறச் சொற்களும் உண்டோ?

**இருவர் மகிழ்ச்சி :-**

1953-ம் ஆண்டு மே 29-ம் நாள் காலை 11-30 மணிக்கு ஹில்லரியும் தென்சிங்கும் எவரெஸ்டின் உச்சி மீது நின்று கொண்டு கீழுள்ள உலகத்தை உவகையுடன் உற்று நோக்கினார்கள். அப்பொழுது உலகம் முழுவதும் அவர்களுடைய காலடிக் கீழ் சற்று நேரம் இருந்தது. தம் இணையற்ற வெற்றியைக் கருதி மகிழ்ந்த அவ்விருவரும் உடனே ஒருவரையொருவர் பாராட்டும் முறையில் கை குலுக்கிப் பிறகு அணைத்துக் கொண்டு எக்களிப் பெய்தினர். பின்னர் ஹில்லரி தனது ஆக்ஸிஜன் முக மூடியை எடுத்து விட்டுத் தன் புகைப்படக் கருவியால் சில காட்சிகளைப் படமெடுத்தார்; முதலில், தென்சிங்கு தன் கையில் வைத்திருந்த நான்கு கொடிகளுடன் அவரைப் படம் எடுத்தார். அக்கொடிகள் இந்தியா, நேபாளம், இங்கிலாந்து, ஐக்கிய நாடுகள் ஆகியவற்றைச் சேர்ந்தவை. இந் நான்கு நாடுகளுக்கும் இவ் வெற்றியில் பங்குண்டு என்பதற்கு அறிகுறியாக இவை அங்குப் பிடிக்கப்பட்டன. பிறகு ஹில்லரி எவரெஸ்டின் எல்லாச் சரிவுகளையும் படம் பிடித்தார். இப்படங்களே அவர்கள் எவரெஸ்டு உச்சியை அடைந்ததற்குச் சான்றுகளாகும்.

**தென்சிங்கின் தெய்வபக்தி :-**

எவரெஸ்டு உச்சியில் தென் சிங்கு புத்த பகவானை வழிபட்டார். உலகத்தின் உச்சி மீது தருக்கி நின்று உவகைக்

கடவுள் ஆழ்ந்திருந்தபோதும் அவர் தம் வழிபடு கடவுளை மறக்கவில்லை. மனிதப் பண்பின் உச்சியையடைந்த ஒரு மகானை அவர் உலகத்துச்சியிலும் வைத்து வழுத்தியது எத்துணை மேன்மையான செயல்! தெய்வத்தின் துணையாலேயே இவ் வெற்றி தனக்குக் கிட்டியது என்று அவர் பன் முறையும் கூறியிருப்பது ஈண்டுக் கருதற்பாலது. அதன் பின்னர் அவர் ரொட்டி முதலியவற்றை உண்டு, சுற்றிலுமுள்ள காட்சிகளைக் கண்டு களித்தார்.

ஹில்லரி தனது ஆக்ஸிஜன் முக மூடியைக் களைந்து விட்டுச் சில நிமிட நேரம் எவரெஸ்டு உச்சியில் நின்றார். தென்சிங்கு அவ்வாறு செய்யாமல் முக மூடியுடனேயே நின்றார்; பின்னர் 1924-ல் வந்த எவரெஸ்டு குழு அச் சிகரத்தை அடைந்திருப்பின் அவர்களது சின்னங்கள் எவையேனும் சிதறிக் கிடக்க வேண்டுமே என்று தேடிப் பார்த்தனர். ஒன்றும் கிடைக்கவில்லை. மேலே இருந்த பொழுது தென்சிங்கு, ஹில்லரி ஆகிய இருவரும் தம்மைக் காற்று வேகமாக வீசித் தள்ளிவிடுமோ என்றும் உயிர் வளிக்கருவியில் உயிர்வளி குறைந்துவிடுமோ என்றும் அஞ்சிக் கீழே இறங்கத் தொடங்கினர். * அப்பொழுது எவரெஸ்டு உச்சியில் இருந்த சில கற்களையும் அவர்கள் எடுத்துக் கொண்டனர்.

---

* அக் கற்களுள் ஒன்றைத் தென்சிங்கு, இந்திய ஜனாதிபதி கனம் ராஜேந்திரப் பிரசாத்துக்கு எவரெஸ்டு நினைவுச் சின்னமாக அளிக்கக் கருதினார். ஹில்லரியும் அங்ஙனமே தமது குழுத் தலைவருக்கு ஒரு கல்லை அளிக்க விரும்பினார். பின்னர் இருவரும் அங்ஙனமே செய்தனர்.

**கண்ட காட்சிகள் :-**

எவரெஸ்டு உச்சியில் மூன்று சரிவுகள் ஒன்று கூடு வதை அவர்கள் கண்டனர். ஒன்று வடக்கிலிருந்தும் மற்றொன்று மேற்கிலிருந்தும் பின்னுமொன்று தென் மேற்கிலிருந்தும் அங்கு வந்து கூடுகின்றன. வட பக்கமுள்ள சரிவு மிகவும் செங்குத்தானது. அவ்விருவரும் ஏறி வந்ததும் தென் பக்கமுள்ளதுமாகிய சரிவு அத்துணை செங்குத்தானதல்ல. எவரெஸ்டு உச்சி மஞ்சள் நிறமான மாக் கற்களால் ஆனது. அது ஒரே சீரான அழகிய கூர் உருளை வடிவமானது. கீழிருந்து பார்க்கும் பொழுது அது அவ்வளவு அழகாகத் தெரிவதில்லை. ஆனால் மேலிருந்த வண்ணம் இருவரும் அதன் எழிலைப் பருகி மெய்ம் மறந்தனர். மேலிருந்து கீழே பார்க்கும்போது நிலம் முழுவதும் ஒரே தட்டையாகவும் பொலிவிழந்தும் இருந்தது. அழகிய நிலக் காட்சிகளே தென்படவில்லை. அன்று வானம் மிகத் தெளிவாக இருந்தது. கதிரவன் கனக மயமான ஒளியை வீசினான். காற்று கடுமையாக வீசவில்லை. மேகங்களும் மறைக்கவில்லை. இயற்கை தன் எழிலை முற்றும் இவ்விருவருக்கும் காட்ட ஏங்கிக் கிடந்தது போல் அன்று காணப் பட்டது. நேபாளத்திலும் திபேத்திலும் பெரும் நிலப் பகுதிகளை அவ்விருவரும் காண முடிந்தது. கஞ்சின் ஜிங்கா சிகரம் ஒரு புறமும் திபேத்திலுள்ள போம்பக் மடம் மற்றொரு புறமும் கண் கொள்ளாக் காட்சியாக இருந்தன. பொதுவாக அக் காட்சி மிகக் கம்பீரமாக இருந்தது.

**இருவரும் இறங்குதல் :-**

எவரெஸ்டு உச்சியில் 15 நிமிடம் தங்கிப் பின்னர் காலை 11-45 மணிக்கு இருவரும் கீழே இறங்கினர்; இறங்கும் பொழுது, எட்டாம் பாசறைக்குத் திரும்பச் செல்லாமல் நேராகத் தென் தோள் பட்டையை நோக்கி வந்தனர். ஏனெனின் ஆக்ஸிஜன் கருவிகளில் ஆக்ஸிஜன் குறைந்து விட்டது. தென் தோள்பட்டை மீது அவர்கள் தம் குழுவைச் சேர்ந்த நாய்ஸ், லோவி ஆகிய இருவரையும் சந்தித்தனர். பிறகு அந்நால்வரும் மாலையில் ஏழாம் பாசறை வந்துற்றனர். இரவை அங்கேயே கழித்து மே 30-ம் நாள் அவர்கள் லோட்சே பக்கமாக இறங்கினர். இறங்கி வரும் போது மேலைப் பள்ளத்தாக்கில் 21000 அடி உயரத்தில் உள்ள ஓரிடத்தில் அவர்கள் தம் குழுத் தலைவர் கர்னல் ஹண்டைக் கண்டனர். கண்டதும் எவரெஸ்டு வீரர் இருவரும் கைகளை உயர்த்தி ஆரவாரித்து எவரெஸ்டை வென்று விட்டோம் வென்று விட்டோம் என்று உவகை பொங்க வெற்றிச் செய்தியை அறிவித்தனர். தலைவர் கரை காண அரிதான களிப்புக் கடலுள் ஆழ்ந்து உடனே அச் செய்தியைக் கம்பியில்லாத் தந்தி மூலம் காட்மாண்டுவில் உள்ள பிரிட்டிஷ் தூதராலயத்திற்குத் தெரிவித்தார். ஆனால் இச்செய்தி ஜூன் 2-ம் நாள் வரை இரகசியமாகவே வைக்கப்பட்டிருந்து அன்று இங்கிலாந்தில் எலிஸபெத் பேரரசியாரின் முடி சூட்டு விழாச் சமயத்தில் உலகத்திற்கு அறிவிக்கப்பட்டது.

வெற்றி பெற்ற பிரிட்டிஷ் குழுவினர் பெருமிதத்துட தம் முதற் பாசறையை நோக்கிப் பெருஞ்சுமைகளை

எடுத்துக் கொண்டு இறங்கலாயினர். அப்பொழுது இந்திய விமானப் படையைச் சேர்ந்த சில விமானிகள் எவரெஸ்டு மீது பறந்து சென்று அதன் தோற்றங்களையும், குழுவினர் சென்ற வழி, அமைத்திருந்த பாசறைகள் முதலியவற்றையும் புகைப் படம் பிடித்தனர். குழுவினர் மேலைப் பள்ளத்தாக்கிலிருந்து அடிவாரத்திற்கு வரும் காட்சிகளும் படமாகப் பிடிக்கப்பட்டன. பின்னர் இவையெல்லாம் திரைப் படக்காட்சியாகக் காட்டப்பெற்றன. குழுவினர் ஜூன் மூன்றாவது வாரத்தில் வெற்றிக் கோலத்துடன் காட்மாண்டுவிற்கு வந்து சேர்ந்தனர்.

# 11. பாராட்டுகளும் சிறப்புக்களும்

**பிரிட்டனில் மகிழ்ச்சி**

"ஹில்லரியும் தென்சிங்கும் 29-ம் தேதி எவரெஸ்டு உச்சி மீது ஏறிவிட்டார்கள், யாவரும் நலம்," என்னும் இச் செய்தியை எலிசபெத் பேரரசியாரின் முடி சூட்டு விழாவிற்குப் பரிசாக அளிக்கவேண்டும் என்று கர்னல் ஹண்டு விரும்பினர். அங்ஙனமே அது அவ் விழாவின் போது வெளியிடப்பட்டது. அதனுல் மகிழ்ச்சி மேலும் பன்மடங்கு அதிகமாயிற்று. இதைக் கேட்ட மகா ராணி யாரும் முதல் அமைச்சர் சர்ச்சிலும் பிரிட்டிஷ் பொது மக்களும் களிப்புக் கடலில் மூழ்கினர். உடனே அரசியா ரும் அமைச்சரும் பிரிட்டிஷ் குழுவையும் எவரெஸ்டு ஏறிய வீரரையும் பாராட்டிச் செய்திகளை அனுப்பினர். பிரிட்டிஷ் குழுவினர் பெற்ற வெற்றியாகையால் இது பிரிட்டிஷ் மக்களுக்கு அளவற்ற மகிழ்ச்சியளித்தது இயல்பே. முடி சூட்டு விழாவைக் காணக் குழுமியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் இதைக் கருதிக் குதூகல ஆரவாரம் புரிந்தனர். உலகத்திலேயே மிக ஆடம்பரக் காட்சியாகிய அவ் விழாவினைக் காண வந்தவர்க்கு, உலகத் தின் உச்சியை மனிதன் கண்டதும் கிடைத்தற்கரியது மான மிகப் பெரிய செய்தி கிடைத்தது. அது அவர்களை இன்ப வெள்ளத்தில் திளைக்கச் செய்தது.

எலிசபெத் மகா ராணியாரின் கணவர் எடின்பரோ கோமகன், "இந்த அற்புதமான செய்தி கேட்டு எல்லோ

ரும் எல்லையற்ற மகிழ்ச்சியில் ஆழ்ந்துள்ளனர். போற்றத் தகுந்த காரியம் செய்துள்ளீர்", என்று கர்னல் ஹண்டுக்கு ஒரு பாராட்டுச் செய்தியனுப்பினர்.

**நியூஜிலாந்தின் பெருமை**

நியூஜிலாந்து வாசியாகிய ஹில்லரி எவரெஸ்டு உச்சியைத் தொட்ட செய்தியைக் கேட்ட அந் நாட்டின் துணை முதலமைச்சர் கெய்த் ஹோலியோக் என்பவர் அதனைப் பாராளு மன்றத்திற் பெரு மகிழ்ச்சியோடு வெளியிட்டார். எலிசபெத்தரசியின் முடி சூட்டு விழாவிற்காகத் தலை நகராகிய வெல்லிங்டனில், பாராளுமன்றத்தில் ஒரு சிறப்புக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, "நியூஜிலாந்தைச் சேர்ந்த ஹில்லரி எவரெஸ்டை வென்று விட்டார் என்ற செய்தி இப்பொழுதுதான் கிடைத்தது; உலகத்தின் உச்சிமீதேறி அவர் நம் நாட்டை உலகறியச் செய்தார்; அரச விசுவாசமுள்ள நியூஜீலாந்திலிருந்து அரசியாருக்கு இது மிகப் பெரிய முடி சூட்டு விழாப் பரிசாகும்", என்று அவர் பெருமிதமாகப் பேசினர்.

**அமெரிக்காவில் உவகை**

உலகத்திலுள்ள முக்கியமான செய்தித் தாள்கள் எல்லாம் முதற் பக்கத்திலோ வேறு முதன்மையான இடத்திலோ இச் செய்தியைப் பெரிய எழுத்துக்களில் வெளியிட்டுத் தம் மகிழ்ச்சியைத் தெரிவித்தன. நெடுந் தொலைவிலுள்ள அமெரிக்காவிலும் கூட இது போன்றே செய்தித் தாள்கள் இதற்குச் சிறப்பளித்தன. "நியூயார்க் டைம்ஸ்" என்னும் பெரிய அமெரிக்கப் பத்திரிகை

இவ் வெற்றியைப் புகழ்ந்து, "இது ஒரு புது யுகத்திற்கு அடிகோலும்", என்று குறிப்பிட்டது. பிரிட்டிஷார் மேலும் தம் ஆற்றலும் வீரமும் காட்டிப் பல செயற்கரிய செயல்களைச் செய்வர் என்று அது தன் கருத்தைத் தெரிவித்தது. முன்பு ஒரு முறை இமயத்தின் மீது ஏறியவரும் அமெரிக்க ஐக்கிய நாடுகளின் உயர் நீதி மன்றத்தின் தலைவரும் ஆகிய வில்லியம் டக்ளஸ் என்பார், "அரசியாருக்கு அளிக்கப்படும் மிகச் சிறந்த பரிசுகளில் இது ஒன்று. இமயத்தையறிந்த ஒருவரே இதன் பெருமையை உணர முடியும்", என்று பாராட்டிப் பேசினர்.

## பழம் வீரர் பாராட்டு

மூன்று முறை பிரிட்டிஷ் குழுக்களுக்குத் தலைமை தாங்கி எவரெஸ்டு மீது படையெடுத்த எரிக் ஷிப்டன், இப் பெரிய வெற்றியைக் குறித்துத் தம் பழைய நண்பர்களாகிய ஹில்லரியையும் தென்சிங்கையும் பாராட்டினர். தென்சிங்குடன் 1952-ல் எவரெஸ்டு ஏறிய ரேமண்ட் லாம்பெர்ட் என்பவரும், 1922-ல் பிரிடிஷ் குழுவில் ஒருவராக இருந்த டாக்டர் பின்ச் என்பவரும், இவ் வெற்றியைப் பெரிதும் பாராட்டிப் பேசினர்கள்.

## பொற் பதக்கமும் பாராட்டும்

இங்ஙனம் யாவரும் புகழும்படியான வெற்றியைப் பெற்ற பிரிட்டிஷ் குழுவினருக்கும் அவருள் சிறப்பாகத் தென்சிங், ஹில்லரி, கர்னல் ஹண்டு ஆகிய மூவருக்கும் இந்தியாவிலும் இங்கிலாந்திலும் பல வகைச் சிறப்புக்கள் செய்யப்பெற்றன.

இந்தியாவில் குடியரசுத் தலைவராகிய கனம் ராஜேந்திர பிரசாத் அவர்கள் தென்சிங்கு, ஹில்லரி, கர்னல் ஹண்ட் ஆகிய மூவருக்கும் விசேஷ பதக்கங்கள் அணிவித்துச் சிறப்பித்தார். இதற்காக ஜூன் 29-ம் நாள் ஒரு சிறப்பான விழா ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது. அப்பதக்கங்கள் ஆறு தோலா எடையுள்ள தங்கத்தால் செய்யப்பெற்றிருந்தன. அவற்றின் ஒரு புறம் எவரெஸ்டு கொடுமுடியும் மற்றொரு புறம் அசோக ஸ்தூபியும், பரிசுக்குரியவர் பெயரும், "வீரமே புகழ்" என்ற சொற்களும் பொறிக்கப்பட்டிருந்தன. மூவரையும் தனித்தனியே பாராட்டி நற்சான்றிதழ்கள் வழங்கப் பெற்றன: ஹண்டைப் பற்றிக் கீழ்வருமாறு அவ்விதழில் எழுதப் பெற்றிருந்தது: "படையெடுப்பு தொடங்கியது முதல் இவருடைய தன்னலமற்ற தொண்டும் மனவுறுதியும் தளரா ஊக்கமும் எல்லாருக்கும் உற்சாகத்தையளித்தன. அவருடைய தலைமையில் குழுவின் உறுப்பினர் அனைவரும் ஒன்றுபட்டு ஒவ்வொருவரும் தத்தமக்களிக்கப் பெற்ற வேலையைத் தன்னலமின்றிச் செய்தனர். அவருடைய தலைமையின் காரணமாகவும், குழுவினரின் ஒன்றுபட்ட மனப்பான்மையாலும், அவர்களுள் இருவர் உலகத்திலேயே மிகப் பெரிய மலையின் உச்சியை இறுதியில் அடைய முடிந்தது." தென்சிங்கைப் பாராட்டும் பத்திரம் கூறியதாவது: "தென்சிங்கு நார்க்கே நேபாளத்தில் பிறந்து மேற்கு வங்காளத்தில் டார்ஜீலிங்கில் 20 ஆண்டுகளாக வாழ்ந்து வருகிறார். 18 வயதில் அவர் மலையேறத் தொடங்கினார். சென்ற 30 ஆண்டுகளில் நிகழ்ந்த பதினொரு எவரெஸ்டுப் படையெடுப்புகளில் அவர் ஏழு படை

யெடுப்புகளில் கலந்து கொண்டார். சென்ற ஆண்டு சுவிஸ் குழுவில் ஒரு உறுப்பினராய், அவர் எவரெஸ்டு உச்சிக்கு 1000 அடி அண்மையில் சென்ருர். இறுதியாக 1953 மே 29-ம் நாள் அவர் பிரிட்டிஷ் குழுவின் இருவரடங்கிய தாக்குதல் படையில் ஒருவராக, உலகத்தில் இது வரையில் வெல்லப்படாமலிருந்த மிக உயரமான மலேயுச்சியை அடைந்தார். அவரது சிறப்பான மலேயேற்றத் திறமை, தைரியம், விடாப்பிடி, உறுதி ஆகியவற்றை எவ்வளவு புகழ்ந்தாலும் தகும். அவரது மாபெரும் சாதனையைப் போற்றி அவரை வரவேற்று அவருக்கு ஒரு சிறப்பான பதக்கத்தை அளிப்பதில் இந்திய அரசாங்கம் மிகவும் பெருமை கொள்கிறது."

ஹில்லரியை அரசாங்கப் பத்திரம் பின் வருமாறு பாராட்டியது. "1953-ம் ஆண்டின் பிரிட்டிஷ் எவரெஸ்டு குழுவின் உறுப்பினரும் நியூஜிலாந்தைச் சேர்ந்தவருமான சர். எட்மண்ட் ஹில்லரி தம் சொந்த தேசத்தில் மலேயேறுவதில் சிறந்த புகழைப் பெற்றிருக்கிருர். சென்ற மூன்று இமயப் படையெடுப்புகளிலும் அவர் கலந்து கொண்டிருக்கிருர். 1951-ல் நடந்த ஆராய்ச்சிப் படையெடுப்பில் ஆயத்த வேலேகளிலும் மற்றக் காரியங்களிலும் அவர் பங்கெடுத்துக் கொண்டார். இறுதியாக 1953-மே 29-ல் அவர் இருவரடங்கிய தாக்குதல் படையில் ஒரு உறுப்பினராக எவரெஸ்டு உச்சியை அடைந்ததன் பயனுக மலேயேற்றத்தின் வரலாற்றிலேயே ஒரு பொன்னுளே உருவாக்கினுர். அவரது மலேயேற்றத் திறமை, விடாப்பிடி, மனவுறுதி, ஆகியவை பெரும் புகழுக்குரியன. அவரது மாபெரும் சாதனையைப் போற்றி அவரை வர

வேற்று ஒரு சிறப்பான பதக்கத்தை அவருக்களிப்பதில் இந்திய அரசாங்கம் மகிழ்ச்சியடைகிறது.”

**வரவேற்பும் விருந்தும்**

இந்தியாவின் முதலமைச்சர் கனம் ஜவாஹர்லால் நேரு அவர்கள் பிரிட்டிஷ் எவரெஸ்டு குழுவினருக்கு ஒரு வரவேற்பும் விருந்தும் அளித்தார். டில்லி நகராண்மைக் கழகத்தார் இமயக் குழுவினருக்கு ஒரு பெரும் வரவேற்பளித்துப் பரிசுகளேயும் வழங்கினர். அசோக ஸ்தூபியும் எவரெஸ்டு சிகரமும் வெள்ளியால் செய்து அவர்களுக்கு வழங்கப்பெற்றன. தென்சிங் பிறந்த நாடாகிய நேபாளத்தின் தலைநகராகிய காட்மாண்டுவிலும் எவரெஸ்டு வீரர்களுக்கு வரவேற்பளிக்கப்பட்டது. தென்சிங்குக்குப் புத்தர் பிரான் உருவச் சிலை ஒன்றும் பரிசாக வழங்கப்பட்டது. கல்கத்தாவில் தென்சிங்கு, கவர்னரின் விருந்தினராக மூன்று நாட்கள் தங்கியிருந்தபோது, பதினுயிரக் கணக்கான மக்கள் அவரைப் பெரும் ஆரவாரத்துடன் வரவேற்று மகிழ்ந்தனர்.

**இங்கிலாந்தில் சிறப்பு**

ஜூலை முதல் நாள் தென்சிங்கு உட்பட எவரெஸ்டு குழுவினர் அனைவரும் விமானத்தில் இங்கிலாந்திற்குப் பயணமாகி 3-ம் நாள் அவ்விடத்தை அடைந்தனர். லண்டன் விமான நிலையத்தில் அவர்களைக் கண்டவுடன் பல்லாயிர மக்கள் குழுமி ஆர்த்தனர். தென்சிங்கின் வாழ்க்கைக் குறிப்புகளும் வீரச் செயல்களும் அவருடைய படங்களுடன் லண்டன் பத்திரிகைகளில் எல்லாம் வெளியிடப்பட்டன. அவை எல்லாம் அவரைப் பெருமையாகப்

பாராட்டி வரவேற்று மகிழ்ந்தன. இங்கிலாந்தில் கர்னல் ஹண்டுக்கும் ஹில்லரிக்கும் எலிசபெத் பேரரசியார் ‘ சர் ’ என்னும் உயர்ந்த பட்டத்தை வழங்கினர். தென் சிங்குக்கு **ஜார்ஜ் பதக்கம்** அளிக்கப்பட்டது. பிரிட்டிஷ் பிரஜை அல்லாத ஒருவருக்கு இங்கிலாந்தின் அரசாங்கம் வழங்கக்கூடிய மிகப் பெரிய சிறப்பு அதுவே. அப் பரிசு, ஆறும் ஜார்ஜ் மன்னரால் **1940**-ல் ஏற்படுத்தப்பட்டது. அது மிக ஆபத்தான நிலையில் மிக வீரமாகச் செய்யப்படும் ஒரு செயலுக்காக அளிக்கப்படும் பரிசாகும். அப் பதக்கம் வெள்ளியால் செய்யப்பட்டு அதன் ஒரு புறம் இங்கிலாந்தின் காவல் தெய்வமாகிய செயின்ட் ஜார்ஜ், நூறு தலை நாகத்தைக் **(Dragon)** கொல்வது போன்ற உருவமும், மறு புறம் ஆறும் ஜார்ஜின் உருவமும், பொறிக்கப் பெற்றிருக்கும். இதைப் பெற்றவர் **G. M.** (ஜா. மெ.) என்ற இரண்டு எழுத்துக்களைத் தன் பெயருக்குப் பின்னால் சேர்த்துக் கொள்ளலாம்.

இங்ஙனம் உலகம் முழுவதும், இச் செயற்கருஞ் செயலைச் செய்த வீரரைப் பலவகையாகப் பாராட்டிச் சிறப்புக்கள் செய்தது. இவ் வீரர் சென்றவிடமெல்லாம் சிறப்பெய்தினர்.

# 12. தென்சிங்கு நார்க்கே

இந்தியாவின் வட கிழக்கு மூலையில் இமய மலைச் சாரலில் டார்ஜீலிங்கு அருகில் ஒரு மலை ஜாதியினர் வசிக்கின்னர். அவர்களுக்கு ஷெர்ப்பாக்கள் என்று பெயர். டார்ஜீலிங்கில் மிக உயரமான இடமாகிய ஜலபஹாரிலிருந்து கீழே இறங்கி வளைந்து வளைந்து செல்லும் பாதை வழியாக வந்தால் டுங்சூங் என்று ஒரு சிற்றூர் உளது. இதற்குமேல் பல கொடுமுடிகளும் திபேத் நாடும் உள்ளன. தென்சிங்கு நார்க்கே இவ் வூரைச் சேர்ந்தவராவார். அவர் 1914-ம் ஆண்டில் நேபாளத்தில் எவரெஸ்ட் சிகரத்தின் அடிவாரத்தில் உள்ள சோலோகும்பு என்னுமிடத்தில் பிறந்தார்.

### மலையேற்ற ஆர்வம்

தென்சிங்கு சிறு வயது முதலே மலையேறுவதில் ஆர்வங் கொண்டு பன்முறை இமயப் படையெடுப்புகளில் கலந்து கொண்டார். சிறு குழந்தையாயிருக்கும்போது அவருடைய வீட்டில் முதியவர்கள் தம் மலையேற்ற அனுபவங்களையும் தாம் கண்டவைகளையும் பற்றிக் கதைகள் கூறுவதை அவர் ஆவலுடன் கேட்பார். ஆகையால் அவருக்கு இயற்கையாகவே இத் தொழிலில் ஆர்வம் உண்டாகிச் சிறு வயதிலேயே அதில் பயிற்சியும் பெற்றார். அவர் தனக்கு இருபது வயதாயிருக்கும்போது ஒருவருக்கும் சொல்லாமல் வீட்டை விட்டு வெளியேறி எரிக்ஷிப்ட

னின் இமயக் குழு ஒன்றுடன் சேர்ந்து மலையேறச் சென்ருர். அவரது மலையேற்றத் திறமையைக் கண்டு வியந்து நேபாள அரசாங்கத்தினர் அவருக்கு "தென்சிங்" என்னும் பட்டம் வழங்கினர். இதன் பொருள் "மலைப்புலி" அல்லது மலையேறுவதில் மிகக் கைதேர்ந்தவர் என்பது. அயல் நாட்டு மலையேற்றக் குழுவினர் இந்தியாவுக்கு வரும்போதெல்லாம் தென்சிங்கின் துணை இன்றியமையாதது என்று கருதி அவரை உடன் அழைத்துச் செல்வது மட்டுமன்றி அவருடைய ஆலோசனையையும் கேட்பார்கள். பதினேராம் பிரிட்டிஷ் குழுவினர்க்கும் அவர் ஒரு சிறந்த ஆலோசகராகவும் உடன் உறைபவராகவும் இருந்து வந்தார்.

**சிற்றூர்க்குக் கிடைத்த பெரும் பெயர்**

டூங்சூங், பெருஞ் செல்வர் தங்கும் சௌராஸ்தா என்னும் ஊருக்கு அருகிலிருப்பினும் அச் செல்வர் ஒருவரும் அங்கு எட்டிப் பார்த்ததே இல்லை. ஆனல் இப்பொழுதோ தென்சிங்கின் வெற்றியைக் கேள்விப்பட்டதும், அவ்வூர் உலகம் முழுவதிற்கும் அறிமுகமாகிவிட்டது. வங்க கவர்னரின் தூதுவர் தென்சிங்கின் வெற்றியை அவர் மனைவியிடம் தெரிவிக்க வந்தபோது அவ்வூரே பரபரப்படைந்தது. அத் தூதுவர் தென்சிங்கின் சிறு குடிலுக்கு வந்து தென்சிங்கின் மனைவியையும் இரு குழந்தைகளையும் கவர்னரின் விருந்தினராக அழைத்துச் சென்ருர். "ஆக்கம் ஆதர்வினுய்ச் செல்லும் அசைவிலா ஊக்கமுடையானுழை", என்னும் வாய்மொழி கண்கூடாயிற்று.

**தென்சிங்கின் சாதனைகள்**

1953-ல் எரிக்ஷிப்டனுடன் தென்சிங்கு இமய மலைமீது சென்ற பிறகு ஆண்டுதோறும் அதன் சிகரங்களை

அவர் தவருமல் எட்டிப் பிடிக்க முயன்று வந்தார். சில ஆண்டுகளில் இரண்டு மூன்று முறையும் அவற்றைத் தொட முயன்றுள்ளார். 1952-ல் லாம்பெர்ட்டுடன் அவர் உயிர்வளியின் உதவியின்றியே 28100 அடி உயரம் ஏறினர். அப்பொழுது அவர் 27500 அடி உயரத்தில் ஒரு கூடாரத்தில் உறங்குவதற்கு வெப்பமான மெத்தையின்றி, உடம்பிற்கு வெப்பமளிக்க அடுப்புமின்றி, பருகுவதற்குச் சூடான பானங்களுமின்றிக் கடுமையான குளிர் காற்றில் ஓர் இரவைக் கழித்தார். அத்துணை உயரத்தில் நாம் உமிழும் எச்சிலும் உடனே பனிக் கட்டியாகிக் கீழே உருண்டோடும்; வெளிவிடும் மூச்சில் உள்ள நீராவி உறைந்து முகத்தில் ஒட்டிக்கொள்ளும். இத்தகைய குளிரில் ஒரு பாதுகாப்புமின்றி அவர் ஓர் இரவைக் கழித்தது வியப்பிற்குரிய பெரும் சாதனையாகும். அவர் உயிர்வளியின் (ஆக்ஸிஜன்) துணையின்றி மிக எளிதாக மலேயேறுவதைக் கண்ட நண்பர்கள் அவருக்கு மூன்ருவது சுவாசப்பை ஒன்று உண்டா என்று வியப்புடன் கேட்பர். ஒருவரும் இதுவரை ஏருத இமயச் சிகரங்கள் பலவற்றின்மீது அவர் ஏறியிருக்கிருர். அவரை விட அதிகமான சிகரங்களேக் கண்டவர் ஒருவருமிலர். பனியில் சறுக்கி விளேயாடுவதிலும், பனியைப் பொருட்படுத்தாமல் அதில் நீண்ட நாட்கள் வாழ்வதிலும், அவர் மிக வல்லவர். ஆதலால் அவரைப் 'பனிப்புலி' என்றும் புகழ்வர். பனிச் சறுக்கு விளேயாட்டில் அவருக்குள்ள திறமையைக் கண்டு இந்திய அரசாங்கத்தினர் அவரைக் காஷ்மீரத்திலிருந்த இந்தியப் படையினருக்கு அவ்விளேயாட்டைக் கற்பிக்க ஆசிரியராக நியமித்தனர். 1948, 1950 ஆண்டுகளில் பனிப் பருவங்களில் அவர் அங்கு அவ்வலுவலில் இருந்தார்.

**நற்பண்புகள்**

தென்சிங்கு சிறந்த தெய்வபக்தி, தன்னம்பிக்கை, வீரம், விடாப்பிடி, பரந்த மனப்பான்மை, நாட்டுப்பற்று முதலிய பண்புகள் நிறைந்தவர். அவர் எவரெஸ்டு உச்சியை வென்றது தெய்வத்தின் அருளால்தான் என்று அவரே கூறியிருக்கிறார். லண்டன் விமான நிலையத்தில் அவருக்கு மக்கள் அளித்த பெரிய ஆரவாரமான வரவேற்பில் அவர் அங்ஙனமே கூறினர். அன்றியும் அவர் எவரெஸ்டிற்குப் புறப்படு முன்னர் அவரது குடும்பத்தில் கடவுள் வழி பாடு நடத்தினர். எவரெஸ்டு உச்சி மீதும் அவர் தம் வழி படு கடவுளை மறவாது கையுறை வைத்து வணங்கியது எத்துணைச் சிறந்த பண்பு!

தன்னம்பிக்கையும் அவரிடமிருந்த ஒரு சிறந்த பண்பாகும். "நான் எப்பொழுதும் மூடத்தனமான நம்பிக்கைகளையும் ஆசைகளையும் கொள்வதில்லை. ஆனல் நான் எவரெஸ்டை வெல்லக் கூடும் என்ற நம்பிக்கை மட்டும் எனக்கு எப்பொழுதும் இருந்து வந்திருக்கிறது," என்று அவரே கூறியிருக்கிறார். 1953-ம் ஆண்டு பிரிட்டிஷ் குழுவின் தலைவரிடம் அவர் தன்னைத் தாக்குதல் படையில் சேர்த்துக் கொண்டாலொழிய வர முடியாது என்று கூறியிருந்தார். இதனல் வெற்றியில் அவருக்கு இருந்த உறுதியான நம்பிக்கை தெரிகிறது. இம் முறை எவரெஸ்டை வெல்ல முடியும் என்னும் எண்ணம் அவருக்கு உறுதியாக இருந்ததென்றும், திரும்பி வரும்போது நல்ல செய்தி கொண்டு வர முடியும் என்றும் அவர் எவரெஸ்டுக்குப் புறப்படும்போதே கூறிச் சென்றார்.

தன் தாயிடத்திலும் அவருக்குச் சிறந்த அன்பு உண்டு. எவரெஸ்டு வெற்றிக்குப் பின்னர் திரும்பி வரும் வழியில் அவர் தம் தாயைச் சோலோகும்புவில் கண்டு வணங்கி அன்னுருடைய வாழ்த்துரையையும் பாராட்டுதலையும் பெற்று வந்தார். தன் மகனை உயர்ந்தோன் என்று உலகம் புகழ்ந்த செய்தியைக் கேட்டு ஈன்றபொழுதைவிடப் பேர் உவகை உற்ற அந்த அம்மையார், "உன் இமயப் படையெடுப்பு முடிந்துவிட்டது; மீண்டும் இமய மலைக்குச் செல்லவேண்டாம்," என்று மகனை வேண்டிக்கொண்டார். அவருடைய மனைவியாரும் அவரிடம் அங்ஙனமே வேண்டினுர். தென்சிங்கு எழுதப் படிக்கத் தெரியாதவராயினும் விரிந்த மனப்பான்மையும் இனிய இயல்பும் உள்ளவர். அவர் தனது வெற்றியை, "இது என் வெற்றியல்ல, மனித இனத்தின் வெற்றியே," என்று கூறினுர்; ஹில்லரிக்கும், குழுத் தலைவருக்கும், மற்ற உறுப்பினர்களுக்கும், தான் மிகவும் கடமைப்பட்டிருப்பதையும் உணர்ந்தார்; அவர்களுடைய உதவியும் கூட்டுறவும் இன்றி வெற்றி கிடைத்திருக்க முடியாது என்று, தன் நன்றியை அவர் அவர்களுக்கு வெளிப்படையாகத் தெரிவித்தார்.

இங்கிலாந்திலுள்ள தலை சிறந்த பத்திரிகைகள் எல்லாம் அவரது அருங் குணங்களை வானளாவப் புகழ்ந்து அவரை வரவேற்றன. **டெய்லி மிர்ரர்** என்னும் தாள், "வெற்றி பெற்ற எவரெஸ்டு குழுவைச் சேர்ந்த தென்சிங்கிற்கு நல்வரவு. அவர் தன் நாட்டிற்கும் ஆசியாவிற்கும் பெருமை தருபவர். அவரைப் பற்றிப் பிரிட்டனும் பெருமையடைகிறது," என்று எழுதியது. **நியூஸ் கிரானிகிள்** என்பது, "தென்சிங்கின் வரலாறு மிகப்

பெருமையுடையது. அவ்வரலாற்றில் அவருடைய காலத்தின் நிகழ்ச்சிகளும், சமூக மாறுதல்களும், எல்லாவற்றிற்கும் மேலாக மானிட உறுதியின் உயர்வும் காணப்படுகின்றன," என்று புகழ்ந்து வரைந்தது.

அவரது நாட்டுப்பற்றும் தலை சிறந்தது. எவரெஸ்டு உச்சிமீது நாட்டுதற்காக அவர் இந்தியக் கொடியையும் எடுத்துச் சென்று, அதை அங்கு ஊன்றியதே இதற்குப் போதிய சான்றாகும். அன்றியும் அவர் தம் தாய் நாடாகிய நேபாளத்தைப்பற்றிப் பெருமையாக நினைத்தார். அங்கு அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில் அவர் தன் எலும்பும் சதையும் குருதியும் எல்லாம் நேபாளத்தின் மணம் கமழ்வன என்று கூறிப் பெருமை கொண்டார். தான் ஒரு இந்தியன் என்பதிலும் அவருக்கு அளவற்ற பெருமையே.

### தேடிவந்த பெருமை

அவரது வீரச் செயலைப் புகழ்ந்து, அவருக்கு நம் அரசாங்கமும் இங்கிலாந்து அரசியும் செய்த சிறப்புக்களை முன்னரே கண்டோம். இவையன்றிப் பொது மக்களும் தம் பாராட்டுதலைத் தெரிவிக்க அவருக்குப் பண முடிப்புகள் தந்தனர். வெற்றிச் செய்தியைக் கேட்ட ஒரு திங்களுக்குள் அவருக்கு ரூ. 30000-க்கு மேல் பரிசுத் தொகையாக மக்கள் திரட்டியனுப்பினர். எதியோபியாவிலுள்ள இந்தியர்கள் கூட அவருக்கு ரூ. 1000 பரிசளித்தனர். சிறு குழந்தைகள் கூடப் போட்டியிட்டுக் கொண்டு பண முடிப்புகள் அளித்தனர். அவரைத் திரைப்படமொன்றில்

நடிக்கும்படியும் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். நேபாள அரசரும் அவருக்கு உயிருள்ளளவும் சுக வாழ்க்கைக்கு வேண்டிய ஊதியம் அளிப்பதாகத் தீர்மானித்தார். இமய மலைச் சாரலில் டார்ஜீலிங்கு அருகில் இந்திய அரசாங்கம் ஒரு மலையேற்றக் கல்லூரியை நிறுவி அதற்கு அவரைத் தலைமை ஆசிரியராக நியமித்திருக்கிறது. இங்ஙனம் எல்லா வகையிலும் உலக முழுவதும் சிறப்பும் பாராட்டுதலும் பெற்ற தென்சிங்கு இளைஞர்களுக்கு ஓர் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகிறார். இவரது வாழ்க்கை அவர்களுக்கு ஒரு சிறந்த படிப்பினையாக இருக்கும்.

## 13. எவரெஸ்டுக்குப் பின் என்ன ?

எவரெஸ்டை வென்ருகிவிட்டது. பிறகு என்ன செய்வது? என்ற கேள்வி எழலாம். 1953-ம் ஆண்டின் படையெடுப்பிற்கு 25000 பவுன் செலவழிந்ததாகவும் இதைப் போன்ற அதிகமான பணம் வேறெந்தப் படையெடுப்பிலும் செலவாகவில்லை என்றும் கூறுகின்றனர். இதனுல் என்ன பயன் என்றும் கேட்கலாம். மனித முயற்சிக்கும் ஆற்றலுக்கும் பெருஞ் சோதனையாக இருந்த எவரெஸ்டு வெல்லப்பட்டுவிட்டது என்ற மகிழ்ச்சி ஒருபுறமிருக்கிறது. மற்ருெரு புறம் இவ் வெற்றி இன்னும் இதுபோன்ற பல வெற்றிகளுக்கு ஊக்கமளிக்கும் என்றும் அதனுல் மலையேறுபவர் தம் வீரத்தையும் விடா முயற்சியையும் மேலும் நிலைநிறுத்த முடியும் என்றும் எதிர்பார்க்கலாம். எவரெஸ்டைத் தொடர்ந்து இப்பொழுதே இமயத்தின் எஞ்சிய பல உச்சிகள் மீதும் உலகத்திலுள்ள மற்ற உயரமான சிகரங்கள் மீதும் மக்கள் ஏறத்தொடங்கிவிட்டனர். சில வெற்றிகளும் கிடைத்து விட்டன. மற்றும் சிலவற்றிற்குத் திட்டமிடப்பட்டு வருகின்றது.

### இரு வெற்றிகள்

1953 ஜூலையில் நங்காபர்வதம் என்னும் சிகரம் வெல்லப்பட்டுவிட்டது. இது பாகிஸ்தான் பகுதியில் உளது. சிந்து நதி இமய மலையைப் பிளந்து கொண்டு செல்லும் இடத்திற்கு மேல் 23000 அடி உயரத்தில் வெகு கம்பீரமாக அது காட்சியளிக்கின்றது. அதன் மொத்த உயரம் 26629 அடி. அதனருகில் உள்ள மற்ற சிகரங்கள்

அனைத்தும் அதைவிட 10000 அடி தாழ்வாகவே உள்ளன. எவரெஸ்டைவிட அது மிகவும் செங்குத்தாகவும் அதிக பனியால் மூடப்பட்டுமிருப்பதால் அதை வெல்வது மிகக் கடினமானது. ஆயினும் அதை ஆஸ்திரியரும் ஜெர்மானியரும் அடங்கிய குழு ஒன்று 1953-ல் முதன் முறையாக வென்று விட்டது. அதன் மீது புல்ஹொர்மன் என்னும் ஆஸ்திரிய மலையேற்ற வீரர் பாகிஸ்தான் கொடியையும் ஜெர்மன் சமஷ்டிக் கொடியையும் நாட்டினார். இதுகாறும் எட்டுக் குழுவினர் அதனை வெல்ல முயன்று தோற்றுவிட்டனர். முன்பு இரண்டு ஜெர்மன் குழுக்கள் இம் முயற்சியில் அடியோடு அழிந்துவிட்டன. இறுதியாக வெற்றி பெற்ற குழுவின் தலைவர் ஆஷன் பிரன்னர் என்பவர், "எவரெஸ்டு வெற்றியே இவ்வெற்றிக்கு ஊக்கமளித்தது," என்று கூறியுள்ளார். பருவ நிலை மிகக் கவலை தருவதாய் இருந்தும் குழுவினர் மனந் தளராமல் முயன்று வெற்றி பெற்று விட்டனர். பின்னர் சில நாட்களில் கொடுங் காற்று வீசி அவர்கள் கீழே இறங்கும்போது உயிரழிவை உண்டாக்கிவிடுமோ என்று கருதத் தக்கதாயிருந்தது. எனினும் அவர்கள் நற்கால வயத்தால் உயிர் பிழைத்தனர்.

1953 ஜூன் மாதத்தில் 22650 அடி உயரமுள்ள பஞ்சசூலி சிகரத்தையும் முதல் முறையாக ஒரு இந்தியக் குழு வென்றுவிட்டது. இவ் வெற்றியும் எவரெஸ்டு வெற்றியின் விளைவே.

**தோல்விகள்**

இமயத்தின் இரண்டாவது பெரிய சிகரமாகிய காட்வின் ஆஸ்டின் மீது 1953 ஆகஸ்டில் அமெரிக்கரால் இரண்டு முறைகள் படையெடுப்பு நிகழ்ந்தது. அவ்விரண்

டும் தோற்றுவிட்டன. பருவக் காற்று கடுமையாக வீசிக் குழுவினரை அதிக துன்பத்திற்குள்ளாக்கியது. 26000 அடி உயரம் ஏறித் தோல்வியுற்றுத் திரும்பி வரும்போது எண்மர், கீழே 100 அடி ஆழமுள்ள குழியில் விழுந்து விட்டனர். அவர்களுள் ஒருவர் இறந்து விட்டார். எஞ்சியவர் நல்லகாலமாக உயிர் பிழைத்தனர். அதே ஆண்டு ஜூலை மாதத்தில் சுவிஸ் குழுவினர் தவளகிரி மீதும் படையெடுத்துத் தோல்வியுற்றனர். அதே சமயத்தில் மனஸ்லு சிகரத்தின் மீது ஜப்பானியக் குழு ஒன்றும் ஏறித் தோற்றுத் திரும்பிவிட்டது. எவரெஸ்ட் வெற்றி இந்திய இளைஞரின் வீரத்தையும் தூண்டியது. ஆகவே நந்தகோட் (22530 அடி) மீது இந்திய மாணவர் சிலரின் படையெடுப்பும் நிகழ்ந்தது. ஆனால் அதுவும் தோல்வியாகவே முடிந்தது.

### புதுத் திட்டங்கள்

எவரெஸ்டை வென்ற பிரிட்டிஷ் குழுவின் தலைவர் 1955-ல் காஞ்சன சிருங்கத்தை வெல்வதற்குத் திட்டமிட்டுள்ளார். இதன் உயரம் 26156 அடி. இலங்கையில் உள்ள ஆடம்ஸ் சிகரத்தை ஆராயவும் அதில் புத்தர் தங்கியிருந்த "ஞானக் குகையை"க் காணவும் அந் நாட்டு மக்களால் ஒரு படையெடுப்பு நடக்கப் போவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியக் குழு ஒன்று 1957-ல் மீண்டும் எவரெஸ்ட் மீதும், 1954-ல் புமோரி மீதும் படையெடுக்கப் போவதாக இந்திய இமயக் குழுவினரின் தலைவர் அறிவித்துள்ளார். இங்ஙனம் இன்னும் பல வெல்லப்படாத சிகரங்கள் மீதும் வெல்லப்பட்ட சிகரங்கள் மீதும் மக்கள் ஏறுவதற்கு எவரெஸ்டு வெற்றியானது ஊக்கமூட்டிவிட்டது என்பது வெளிப்படை.

### பயன்கள்

இத்துணைத் துன்பத்திற்குட்பட்ட இச் செயல்களால் யாது பயன் என்று சிலர் எண்ணுவது இயல்பே. இவையெல்லாம் தேவையற்ற வழிகளில் ஆற்றலையும் செல்வத்தையும் காலத்தையும் வீணாக்குவதாகும் என்று சிலர் கருதக்கூடும். அங்ஙனம் கருதுவது தவறு. பொறுமையுடன் நுணுகி நோக்கின் இதில் பல பெரும் பயன்கள் இருப்பது தெரியும். முதற்கண், இவ் வெற்றிகளாலும் தோல்விகளாலும் மனிதன் இயற்கைக் கெதிராகத் தன் ஆற்றலைச் செலுத்தித் தன் பெருமை அல்லது சிறுமையை உணர முடிகிறது. இச் செயல்கள் இயற்கையின் பெருமையையும் மனிதனின் சிறுமையையும் அளந்தறிய உதவும் அளவு கோல்கள் போல் இருக்கின்றன. இயற்கையின் சக்தி மனிதனைத் திணற வைக்கிறது. எத்துணையோ அரும் பெரும் பொருள்களை அது தன் பெட்டகத்தில் பொக்கிடம்போல் பொதிந்து வைத்திருக்கிறது. அவற்றையெல்லாம் மனிதன் கண்டறிய விரும்புவது இயல்பே. அதற்காக அவன் தன் ஆற்றல் முழுவதையும் செலவழிக்கிறான்; துன்பங்களை மேற்கொள்கிறான்; இறுதியில் இதுவரையில் கண்டிராத பல அரும் பெரும் விடயங்களைக் கண்டுகொள்கிறான். அவன் பிறகு, தான் இவ்வாறு பெருக்கிக்கொண்ட அவ்வறிவை ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்துகிறான். இங்ஙனமே பல நூதன விஞ்ஞானக் கண்டு பிடிப்புகள் நிகழ்ந்திருக்கின்றன. இயற்கையைப் பற்றிய அறிவு நம்மிடம் மிகுவதால் அதை நாம் பயன்படுத்திப் பல நன்மைகளை அடைகிறோம்.

### பனி மனிதன்

இமய ஆராய்ச்சியைப் பொறுத்த வரையில் அதன் மீது ஏறியவர்கள் பல புதுமைகளைக் கண்டு பிடித்துக்

கூறியுள்ளனர். அம்மலையில் உள்ள சில புது உயிரினங்கள் முன்பின் நாம் கண்டறியாதவையாய் உள்ளன. இவற்றைக் காண்பதற்கென்றே சில விஞ்ஞானிகள் மலையேற்றக் குழுவினருடன் சென்றிருக்கின்றனர். உலகத்தில் வேறிடங்களில் இல்லாத சில தாவரங்கள், விலங்குகள், அபூர்வ உயிர்கள் முதலியவை இங்கிருப்பதாக அவர்கள் கண்டறிந்திருக்கின்றனர். அவற்றின் மாதிரிகளையோ, புகைப் படங்களையோ அவர்கள் கொண்டுவந்துள்ளனர். அவற்றுள் ஒன்று அங்கு வாழும் "பனி மனிதன்" என்னும் ஒரு வகை நூதன உயிர். 1952-ல் இமயத்தின் மீது படையெடுத்த சுவிஸ் குழுவினர் இதன் அடிச் சுவடுகளைக் கண்டு படமெடுத்து வந்தனர். ஆனால் மலை மீது அவ்வடிச் சுவடுகளைத் தொடர்ந்து சென்றால் அவை ஏதோ ஓரிடத்தில் மறைந்து விடுகின்றன. அவை வாழுமிடத்தையறிய முடியவில்லை. அவை மனிதனைவிடப் பன்மடங்கு பெரியவையாய் இருக்கக் கூடும்; ஆனால் மனிதனைப் போல இருக்கின்றனவா, விலங்குகளைப் போல உள்ளனவா என்பது தெரியவில்லை. திபேத்தில் வாழும் சிலர் அவ்வுயிர்களைக் கண்டிருப்பதாகக் கூறுகின்றனர். ஆனால் அவர்கள் கூறும் செய்திகள் ஒரேவிதமாக இல்லை. 1951-ல் தென்சிங்கு, திபேத்தில் தியாங்பூச்சி மடத்தருகில், தான் இப்பனிமனிதனைக் கண்டதாக ஷிப்டனிடம் கூறினார். அவ் வுயிர் நடுத்தர உயரமும் நான்கு மனிதர் பலமும் கொண்டதென்று அவர் கூறுகிறார். கர்னல் ஹண்டும் அதை ஒருமுறை பார்த்ததாகவும் அதன் குரலைக் கேட்டதாகவும் சொன்னார். இவ்வுயிர் இனப்பெருக்கமற்ற ஓர் குரங்கின மென்பது சிலர் கருத்து. அதன் இனம் ஒரு காலத்தில் இமயத்தின் கீழ்ப் பகுதியிலிருந்து மேற்பகுதிக்கு மற்ற உயிரினங்களால் விரட்டப்பட்டு விட்டதென்

றும், ஆகவேதான் அது அங்கு தனித்து வாழ்கிறதென்றும் கருதப்படுகிறது.

### பறவைகள்

இமயத்தில் அதிக உயரங்களில் ஒருவகைப் பெரும் பறவை காணப்படுவதாகவும் சிலர் கூறுகின்றனர். அப்பறவை ஆறடி நீளமுள்ளதாகவும் மூன்றடி அகலமுள்ள சிறகுகளைக் கொண்டதாகவும் இருக்கிறதாம். மேலும் அதிக உயரங்களில் (28000 அடி) காக்கை போன்ற ஒரு சிறு பறவை பறந்து சென்றதையும் ஒருவர் கண்டதாகக் கூறுகிறார். இவற்றைப் பற்றி யெல்லாம் நமக்கு இன்னும் அதிக உண்மைகள் ஒன்றும் புலப்படவில்லை. இனி மேல் செய்யப்பெறும் ஆராய்ச்சிகளால் தான் அவை புலனாக வேண்டும்.

### ஆவிக் குரல்

இதுபோலவே இமயமலைப் பகுதியில் நங்கா பருவதத்தின் சரிவுகளிலிருந்து இறங்கி வரும்போது, அதனை வென்ற வீரக் குழுவினர் ஒருவித 'ஆவிக் குரலை'க் கேட்டதாகவும் கூறுகின்றனர். அக்குரல் யாருடைய தென்று உறுதியாகத் தெரியாது. ஆனால் அது உண்டாகும் திசையை நோக்கி இறங்கி வந்ததால், அவர்களுக்கு அதிக துன்பமுண்டாக வில்லையென்று அவர்கள் கூறினர்கள். அக் குரல், இறந்த ஆவிகளின் குரலாகவோ, வேறு மர்ம உயிர்களின் குரலாகவோ இருக்குமென்று கருதப்படுகிறது. அதனைப்பற்றிய உண்மையையும் மேற்கொண்ட ஆராய்ச்சிகளால் நாம் உணரவேண்டும்.

இனி எவரெஸ்டு சிகரத்தின்மீது இருடிகள், முனிவர்கள், யோகியர் போன்ற பெரியார்கள் இருப்பதாகவும் சில

ரிடம் ஒரு நம்பிக்கை இருந்துவருகிறது. அது உண்மையா என்று தென்சிங்கிடம் ஒருவர் கேட்ட போது அவர் மனித ஆற்றலை மிஞ்சியவர்களே அங்கிருக்கக்கூடுமென்று விடையளித்தார். மேற்கூறிய பெரியார்கள் அத்தகைய சக்தி உடையவர்களாகையால் அவர்கள் அங்கிருப்பின், ஆராய்ச்சியால் அதையும் அறிந்துகொள்ள முடியும்.

**பாலை செழிக்க :**

இவை மட்டுமன்றி, விஞ்ஞான ஆராய்ச்சியின் பயனுகப் பாலைவனங்களையும் செழிக்கச் செய்யும் ஒரு பணிக்கு இமயப் பனிக் கட்டிகளைப் பயன் படுத்த முடியும் என்று ஆப்பிள்டன் என்னும் பிரபல விஞ்ஞானி கருதுகிறுர். ஆகவே இமயவெற்றி பாலைவனத்தின் செழிப்பிற்கும் அடிகோலக் கூடிய காலம் வரும் என்று நாம் எதிர் பார்க்கலாம். அப்பனிக்கட்டிகளை அணுவாற்றலால் உருக்கிப் பாலைவனத்தில் நீராகப் பாய்ச்சினுல், பயிர்த் தொழில் செழிப்பதற்குக் கேட்கவும் வேண்டுமா? அங்ஙனம் பாயும் நீர் வீழ்ச்சிகளால் மின்சாரம் மிக மலிவாகக் கிடைக்குமாறு செய்வதும் அரிதாகுமா? இவைபோன்ற இன்னும் எதிர்பாராத எத்துணையோ பயன்களை நாம் பெறக்கூடும்.

**காஸ்மிக் ஆராய்ச்சி :**

எவரெஸ்டு போன்ற உச்சிகளில் விண்ணியல் கதிர்களெனப்படும் ஒரு வகை மாயக் கதிர்கள் அதிக அளவில் பரவியிருப்பதால், அவற்றினியல்பை அவ்வுச்சிகளின் மீதிருந்து ஆராய்ந்து அவற்றையும் பல நற்காரியங்களுக்குப் பயன்படுத்தும் காலம் வரக்கூடும். அக் கதிர்களின் இயல்பை இன்னும் ஒருவரும் முற்றிலும் அறியவில்லை. அங்ஙனம் அறிந்தபின்னர், அணு சக்திபோல அதனையும் பயன்படுத்தக்கூடும்.

எவ்வாருயினும், எவரெஸ்டு வெற்றியும், அதனைப் போன்ற பல முயற்சிகளும் மனிதனுடைய பெருமையை அதிகமாக உயர்த்திவிட்டன என்பது மட்டும் ஒருதலை. அவன் தன் மேலான ஆற்றலை இதன்மூலம் வெளிப்படுத்தி விட்டான். இது இயற்கையின் இரகசியப் பெட்டகத்தின் பூட்டை உடைத்தெறிந்ததற்கு ஒப்பாகும். இதனுல் இயற்கையினிடத்து மறைந்து கிடக்கும் மற்ற இரகசியங்களும் ஒவ்வொன்ருக வெளியாகிவிடும். அதன் பயனுக இயற்கையின் ஆற்றலை நாம் நமக்கு நன்மை தருமாறு பல வழிகளில் அடக்கியாள முடியும். ஏன்? ஒருகால், இயற்கையின் இரகசியங்களையறிய, இறைவனின் இரகசியங்களும் நமக்கு ஒருங்கே புலப்படக்கூடும். அதனுல் நாம் கண்டறியாதன காண்போம் என்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

## 14. சில குறிப்புகள்

**இமயத்தின்தோற்றம் :**

உலகத்திலேயே மிக உயரமான உச்சிகளையுடையதும் அளவில் மிகப் பெரியதுமான இமய மலை உண்டான விதம் மிக வியப்பிற்குரியது. இமயமலை மடிப்பு மலை வகையைச் சேர்ந்தது. இவ்வகை மலைகள் பூமிக்குள் அடிக்கடி உண்டாகும் குமுறுதல்களின் காரணமாகத் தோன்றுகின்றன. பூமியின் உள்ளே பல விடங்களில் உலோகங்களும், பாறைகளும், மண்ணும், குழம்பு போல உருகி அதிக வெப்பநிலையில் கொதித்துக் கொண்டிருக் கின்றன. இக்குழம்பு பூமி மட்டத்திலிருந்து சில விடங் களில் சுமார் நூறு மைல் ஆழத்திலும் மற்றும் சில விடங் களில் மேலும் அதிக ஆழத்திலும் கொதித்துக்கொண்டி ருக்கிறது. இக்கொதித்தலும் குமுறுதலும் அதிகமாகும் போது, பூமி அதிர்ச்சி, எரிமலை பொங்குதல், போன்ற நிகழ்ச்சிகள் உண்டாகின்றன. இக் குமுறுதல்கள் சில சமயங்களில் பூமியின் மேற் பரப்பை மேடுகளாகவும் மாற்றி விடுகின்றன. இம்மேடுகள் அதிக உயரமாக விருந் தால் அவற்றை மலைகள் என்கிறோம். தொடர்ந்தாற் போல் ஒரே இடத்தில் பல முறை குமுறுதல் உண்டாகி, ஒன்றன் பின் ஒன்றாகப் பல மேடுகள் எழுப்பப்பெறின், அங்கு தொடர்ச்சியாகவும் அடுக்காகவும் பல மலைகள் உண்டாகும். இங்ஙனம் உண்டாகும் மலைகளே மடிப்பு மலைகள் எனப்படும். இமயம் இப்படி உண்டானதே என்று கூறப்படுகிறது.

இப்படி குமுறுதல் நிகழும்போது கடலுக்கடியில் உள்ள நிலம் கூட மேடாக மாறி, அதைச் சுற்றியுள்ள கடலும் வற்றிவிடும். அப்பொழுது கடல் நெடுந் தூரம் விலகிச் சென்று விடும். இமயமும் முன்பு ஒருகால் கடலின் அடியில் இருந்த பகுதியேயாகும் என்று ஆராய்ச்சியாளர் கூறுவர். ஏனெனில் இமயத்தில் உள்ள சில பாறைகளிலும் பாறை இடுக்குகளிலும் கடல் வாழ் உயிர்களின் எலும்புகள், ஓடுகள் முதலியவை பதிந்து கிடக்கின்றன. அவற்றைக் கொண்டு இமயம் முன்னொரு காலத்தில் கடலின் கீழ் இருந்த நிலப்பகுதியே என்று நில நூல் வல்லார் துணிந்துள்ளனர்.

### கணவாய் வழிகள்

இமயப் பகுதியில் இடையிடையே மிக அருமை வாய்ந்த கணவாய்கள் உள்ளன. அதன் வடமேற்கில் உள்ள கைபர், போலன் கணவாய்களின் வழியாகவே பல அயல் நாட்டினரும் நம்மீது பண்டைக் காலத்தில் படையெடுத்தனர். அவை அயல் நாடுகளுடன் நமக்கு வாணிகத்திற்குரிய வழிகளாகவும் இருந்தன. அதன் வடக்குப் பகுதியில், இந்தியாவிலிருந்து திபேத்திற்குச் செல்லும் கணவாய் வழிகள் சில உள. அவை சில இடங்களில் 20000 அடி உயரத்தில் கூட அமைந்துள்ளன. அவ்வழிகள், குமுறும் அருவிகள், ஆழ்ந்த பிளவுகள் முதலியவற்றின் பக்கமாகச் செல்கின்றன. இவையே இந்தியா — திபேத் வணிக வழிகளாகும்.

### எவரெஸ்டு

இக்கொடுமுடியைக் கண்டு பிடித்தவர் ஸர் ஜார்ஜ் எவரெஸ்டு அல்லவென்றும், ராதாநாத் சிக்தார் என்னும் ஒரு இந்தியரே என்றும், இந்திய அரசாங்கத்தின் கல்வி

அமைச்சர் கனம் அபுல்கலாம் ஆசாத் அவர்கள் 1953 ஜூன் 29-ம் நாள் நடந்த ஒரு கூட்டத்தில் அறிவித்தார். ஆனால் அதற்கு முன்பு நில அளவு இலாகா தலைவராய் இருந்த சர். ஜார்ஜ் எவரெஸ்டு என்பவரைச் சிறப்பிக்கக் கருதி, அவருடைய பெயரையே அக்கொடுமுடிக்கு இட்டனர் என்று அவர் கூறினார். இது 'இந்தியருக்குப் பெருமை தரும் ஒரு செய்தியாகும்.

**இமயமும் உயிர்வளியும்**

இமயத்தின் மீது ஏறியவர்கள் யாவரும் அறிந்த ஒரு உண்மை யாதெனின், அதன்மேல் சுமார் 20000 அடி உயரம் ஏறிவிட்டால் பிறகு மூச்சுத் திணறுகிறது என்பதே. அதற்குக் காரணம் அவ்வுயரத்தில் நாம் உயிர்ப்பதற்கு வேண்டிய அளவு (ஆக்ஸிஜன்) உயிர்வளி இல்லை யென்பதேயாகும். 26000 அடி உயரத்தில் உள்ள ஆக்ஸிஜனின் அடர்த்தி அல்லது செறிவு, கடல் மட்டத்தில் இருப்பதில் பாதியளவே என்று கணக்கிட்டிருக்கிறார்கள். அதாவது நமக்கு உயிர்ப்பதற்கு வேண்டிய ஆக்ஸிஜனின் அளவில் பாதிதான் அவ்வுயரத்தில் கிடைக்கிறது. ஆதலால் அங்கு குருதி யோட்டத்திற்கும், அதன் விளைவாகிய உயிர் வாழ்க்கைக்கும் வேண்டிய அளவு உயிர்வளி நமக்குக் கிடைக்காமற் போகிறது. 'இருப்பதா, இறப்பதா' என்ற போராட்டம் அங்கு தொடங்கி விடுகிறது. இப்போராட்டத்தில் வெற்றி பெற்றால்தான், நாம் அதிக உயரமுள்ள மலையுச்சிகளின் மீது ஏற முடியும். ஆகவே உயர்ந்த கொடுமுடிகளை மனிதன் அடைவதற்கு அவனது உயிர் வாழ்க்கைக்கு வேண்டிய அளவு ஆக்ஸிஜனையும் தன்னுடன் அவன் எடுத்துச் செல்லவேண்டியது மிகமிக இன்றியமையாததாகிறது. இங்ஙனமேதான் அண்மை

யில் மலையேறிய அனைவரும் ஆக்ஸிஜனின் துணை கொண்டே ஏறினர். எவரெஸ்டும் அதன் துணை கொண்டே வெல்லப் பட்டது. ஆகவே எவரெஸ்டு வெற்றியை ஆக்ஸிஜன் தந்த வெற்றியென்றால் அது மிகையாகாது.

### விஞ்ஞானிகளின் உதவி

உயரமான இடங்களில் இயற்கை விளைத்த குறையைச் செயற்கையாகவே நிரப்பிக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதற்காக மலையேறுபவர் ஆக்ஸிஜனைக் கலன்களில் அடைத்து வைத்துக்கொண்டு செல்வர். வேண்டும் போது அவர்கள் அவ்வளியைக் குழாய்கள் மூலமாக மூக்கிற்குள் செலுத்திக் கொள்வர். முதலில் பின்சு (**Finch**) என்பவரே இதற்கு ஒரு கருவியைக் கண்டுபிடித்தார். இக் கலன்களை அமைத்தது விஞ்ஞான ஆராய்ச்சியின் ஒரு சிறந்த வெற்றியென்றே கூறவேண்டும். பல்லாண்டுகளாக விஞ்ஞானிகளும் பொறியியல் வல்லுநரும் உழைத்துத் திருத்தமான ஆக்ஸிஜன் கருவிகளை யமைத்துத் தந்துள்ளனர். இவை இரண்டு வகைப்படும். ஒன்று "திறந்த சுற்றுக்கலன்" (**Open circuit set**), மற்றொன்று "மூடிய சுற்றுக்கலன்" (**Closed circuit set**). இவை மிக இலேசாக இருக்கவேண்டுவது இன்றியமையாதது. ஏனெனில் கனமான வற்றை மேலே எடுத்துச் செல்லுதல் அதிக துன்பந் தருவதாகும். திறந்த சுற்றுக்கலத்தில் வெளியிலிருந்து கிடைக்கும் காற்றிலுள்ள ஆக்ஸிஜனோடு மேலும் வேண்டிய அளவு ஆக்ஸிஜனைச் சேர்த்து வைத்துக்கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது. மூடிய சுற்றுக்கலத்தினுதவியால், அழுத்தக் குறைவுள்ள ஒரு சேமிப்

புக் கலத்திலிருந்து வரும் கலப்பற்ற ஆக்ஸிஜனை உட்கொள்ள முடியும். வெளி விடும் காற்றும் இச் சேமிப்புக் கலத்திற்கே திரும்பிவந்து விடும். 1953-ல் சென்ற பிரிட்டிஷ் குழு இவ்விரண்டு விதமான கலன்களையும் எடுத்துச் சென்றது. இக்கருவிகளைச் செய்து உதவிய விஞ்ஞானிகள், பொறியியல் வல்லுநர் ஆகியோருக்கும் எவரெஸ்டு வெற்றியில் பங்கு உண்டு என்பதில் ஐயமில்லை.

இமயமும் தமிழரும்

நெடுங்காலம் தொட்டே இந்தியாவின் தென் கோடியிலுள்ள தமிழ் மக்கள் இமயத்தைப்பற்றி நன்கு அறிந்திருந்தனர். இமயத்தைப் பற்றிக் குறிப்பிடாத பண்டைத் தமிழ்ப் பெருநூல்களே இல்லையெனலாம். தமிழ் வேந்தர் மூவரும் இமயம் வரை சென்று தம் இலச்சினைகளாகிய வில், கயல், புலி ஆகியவற்றை அதில் பொறித்து விட்டு வந்தனர் என்று பழந்தமிழ் நூல்கள் கூறும். சேருருள் ஒருவன் இமய வரம்பன் நெடுஞ் சேரலாதன் எனப் பெயர் பெற்றிருந்தான். அவன் இமயம் வரை சென்று தன் விற்பொறியை அதில் பொறித்ததாலேயே இவ்வாறு பெயர் பெற்றான் என்பர். சேரன் செங்குட்டுவனும் வட நாடு சென்று இமயத்தில் விற் பொறித்து, அதில் கண்ணகிக் கடவுளுக்குக் கல்லெடுத்து வந்தான் என்று சிலப்பதிகாரம் கூறும். திருமாவளவன் எனப் பெயர்பெற்ற கரிகாற் சோழன் "வடவரைமேல் வாள் வேங்கை ஏற்றினான்" என்று இளங்கோவடிகள் இயம்புகிறார். தமிழ் வேந்தர் மூவரும் அப்பொருப்பில் தம் இலச்சினைகளைப் பொறித்த வரலாறு சிலப்பதிகாரத்தில், "தென் தமிழ் நாடாளும் வேந்தர் செருவேட்டுப் புகன்றெழுந்து, மின்தவழும் இமய

நெற்றியில் விளங்கு வில் புலி கயல் பொறித்த", என்று குறிக்கப்பெறுகிறது. பாண்டியருள் ஒருவன் "பருப்பதத்துக் கயல் பொறித்தான்" என்று பெரியாழ்வாரால் குறிக்கப்படுகிறர். இங்ஙனம் கூறப்பெறும் தமிழ்வேந்தர் செல வெல்லாம் தம் ஆற்றலேயளப்பதற்கு அவர்கள் இமயத்தை எல்லேயாகக் காட்ட நினேந்ததைக் குறிக்குமேயன்றி இமயத்தின் சிகரத்தைக் காண முயன்றனர் என்பதைக் காட்டாதென்பது தெளிவு.

தமிழ் நூல்களில் கூறப்படும் இச் செய்திகளுக்குச் சான்று பகர்வது போல இமயப் பகுதியில் சில விடங்களுக்குத் தமிழ்ப் பெயர்கள் என்று கருதக்கூடிய பெயர்கள் வழங்கி வருகின்றன. சிக்கிம் நாட்டிற்குக் கிழக்கே உள்ள மலேத் தொடருக்குச் சோழா மலேத் தொடர் (**Chola range**) என்றும் அதனே அடுத்துள்ள கணவாய்க்குச் **சோழா கணவாய்** (**Chola pass**) என்றும் பெயர்கள் வழங்குகின்றன. தென்சிங்கு நார்க்கே பிறந்த திபேத் பகுதியிலுள்ள சிற்றூருக்கும் **சோலோ** கும்பு என்றே பெயர் வழங்குகிறது.

### இமயத் தலங்கள்

இனி இமயத்தில் எழில் மிக்க பல தலங்கள் சிறப்புற்று விளங்குவதும் ஈண்டுக் குறிக்கத்தகும். கோடைக் காலத்தில் மக்கள் சென்று தங்குவதற்காகக் குளிர்ச்சியாக உள்ள சிம்லா, டார்ஜீலிங், முசோரி, நயினிதால், அல்மோரா முதலியவை உலகப் புகழ் பெற்றவை. சிம்லா **7000** அடி உயரத்தில், இந்திய அரசாங்கத்தின் கோடைக் கால உறையுளாக அமைந்துள்ளது. அது மிகச் சிறந்த சுகாதாரத் தலங்களுள் ஒன்ருகும்.

இமயப் பகுதியிலுள்ள புண்ணியத் தலங்களுள் சிறந்தவை திருக்கைலாயம், பதரிகாசிரமம், திருக்கேதாரம், கங்கோத்திரி, யமுனோத்திரி, ரிஷிகேசம், முதலியன. இவ்விடங்களுக்கு ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான யாத்ரீகர்கள் சென்று வருகின்றனர். சில குறிப்பிட்ட நாட்களில் அங்குச் சிறப்பான விழாக்களும் நடைபெறும். அப்பொழுது எண்ணற்ற மக்கள் கூடி இறைவனை வழிபட்டு மகிழ்வர்.

**இந்தியாவின் பெருமை**

இத்தகைய எல்லையற்ற எழிலும் அருமையும் பெற்று விளங்குவது "பொற் கோட்டிமயம்." இமயத்திற்குச் சிறப்புத் தருவன அதன் இயற்கை யழகு மிக்க காட்சிகளும் இணையற்ற கொடுமுடிகளுமே யாகும். கொடுமுடிகளுக்கெல்லாம் அரசனாக விளங்கும் எவரெஸ்டு அதில் இருப்பது இந்தியா முழுவதற்குமே பெருமை தருவதாக அமைந்திருக்கிறது. அதனை ஒரு இந்தியர் வென்றுவிட்டார் என்ற பெருமையும் நமக்கு இப்பொழுது கிடைத்துளது.

7843